வைகறை வரிகள்

திருவாசகம்
திருவெம்பாவை
திருப்பள்ளியெழுச்சி

நயவுரை



பேராசிரியர்
மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

வைகறை வரிகள்

திருவாசகம்

திருவெம்பாவை

திருப்பள்ளி எழுச்சி

(நயவுரை)

மகாவித்துவான் மயிலம்

வே. சிவசுப்பிரமணியன்

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : சூன், 2012
திருவள்ளுவர் ஆண்டு : 2043
உரிமை : ஆசிரியர்க்கு

விலை : ரூ. 40.00

மணிவாசகர் பதிப்பக வெளியீட்டு எண் : 1914

நினைவில் வாழும்
நிறுவனர்

ச. மெய்யப்பனார்



டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச் செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடங்கள்:

மணிவாசகர் நூலகம்

12-B, மேலச் சன்னதி, **சிதம்பரம்** - 608001. ✆:**04144-230069**
31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை** - 600108. ✆:**044-25361039**
6, சிவஞானம் தெரு, **தி. நகர், சென்னை** - 600017. ✆:**044-24357832**
110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை** - 625001. ✆:**0452-2622853**
15, ராஜ வீதி, **கோயமுத்தூர்** - 641001. ✆:**0422-2397155**
296/134, செரி சாலை, **சேலம்** - 636007. ✆:**0427-4030709**
28, நந்தி கோயில் தெரு, **திருச்சி** - 620002. ✆:**0431-2706450**

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

நூன்முகம்

திரு. 'சித்தாந்த ரத்தினம்' சிவ.இராமச்சந்திரமூர்த்தி
தலைவர், சென்னை குமரகோட்டம்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சேவார்த்திகள் சங்கம்

வள்ளலார் வாயாரப் புகழ்ந்த தருமமிகு சென்னையின் வட பகுதியில் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி உடனாய நடராஜப் பெருமான் திருவருளால் கடந்த 114 ஆண்டுகளாக சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட அமைப்பு வாரந்தோறும் திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய இருநாட்களில் வழிபாடும், இரண்டாம் ஞாயிறு காலை ஆன்மிகச் சொற்பொழிவுகளும் அமைத்து ஞானதானம் செய்து வருகின்றது. பல ஆன்மிகப் பெருமக்களும், அறிஞர்களும் பங்கு பெற்றுத் தாம் பெற்ற ஞான அனுபவத்தை, வருவார்க்கு வழங்கி வையகத்தை வளப்படுத்தி வருகின்றனர்.

அண்மைக் காலத்தில் நம் சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தினர், பெரும்புலவரும், மூத்த தமிழறிஞரும், பேராசிரியப் பெருமகனாருமான மகாவித்துவான் மயிலம் உயர்திரு. வே. சிவசுப்பிரமணியன் அவர்களை அழைத்து அம்மன்றத்தில் அரும் சைவசமய ஆன்மிகச்சொற்பொழிவுகளை நடத்திக் கொண்டு வருவது குறிப்பிடத்தக்க தொண்டாகும். பேராசிரியப் பெருமகனார் திருவிளையாடற்புராணம் மணிவாசகரின் திருவாசகம், காரைக்கால் அம்மையார் திருவாய் மலர்ந்த மூத்த திருப்பதிகம், குமரகுருபரர் கந்தர்கலிவெண்பா முதலான துதி நூல்களை விரிவுரை செய்து வருவதைச் சைவ நல்லுலகம் நன்கறியும். தற்போது சைவ ஆன்மிகத் திருமுறை நூல் வரிசையில், ஒன்பதாம் திருமுறைச் சொற்பொழிவுகள் செய்து சைவம் தழைத்தோங்கும் சேவை செய்து வருகின்றார்.

பேராசிரியர் அவர்கள் மாபெரும் வித்துவான் ஆவார்கள். அவர்கள் மயிலம் பொம்மைபுரஆதீனம் நிறுவிய தமிழ்க் கல்லூரியின் முதல்வராகச் சிறக்கப் பணிபுரிந்தவர். அவர் இலக்கிய இலக்கண நூல்கள் யாவற்றிலும் துறைபோன அறிஞர். அவர் தமிழகம் நன்கறிந்த பெரும்புலவர்; எளிய தோற்றத்தினர். மாபெரும் கனிவுக்கும் அன்புக்கும் உரியவர். எந்த ஆன்மிகப் பொருளையும் எளிதில் யாவரும் புரியும் வண்ணம் பேசும் வல்லமை மிக்கவர். சித்தாந்த வித்தகர் நம் பேராசிரியர் சிவசுப்பிரமணியன் அவர்கள். கேட்டார்ப் பிணிக்கும் சொலல்வல்ல அவர், மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஆகிவற்றுக்கு நம் சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் அழகிய தொடர் விளக்கவுரை ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவபிரானே திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் கீழ் குருநாதனாக அமர்ந்து திருவாதவூரரை ஆட்கொண்டதுபோல் கனிவான பார்வையும், இனிய சொற்களும், எளிய தோற்றமும்

உடைமையாகக் கொண்ட பேராசிரியர் வே.சிவசுப்பிரமணியன் அவர்கள் அடியேனை அன்புடன் அருளாசி தந்து ஆட்கொண்டார் என்பது, யான் முன்னைய பிறவியில் செய்த புண்ணியமாகும். 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது முதுமொழி. வே. சிவசுப்பிரமணியனார் வழங்கிய திருவாசகப் பேருரை கேட்டவர் சிந்தை முழுவதும் கவர்ந்ததை உணர்ந்தேன். அப்பேருரையில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி உரைகள் உயிரின் குற்றமாகிய ஆணவ மலத்தைப் போக்கி, ஆன்ம விழிப்புதந்து ஞான சூரியனை வெளிப்படுத்தும் பகுதிகள் ஏராளமாக உள்ளன என்பதை உணர்ந்து, யான் பெற்ற இன்பம் உலகமும் பெற வேண்டும் என்று எண்ணி, இருபகுதிகளையும் ஒரு நூலாக்க எண்ணினேன். வைகறையில் வாய்விட்டுப் பாடவேண்டிய தெய்வீக வரிகள் இவை. நூலை வெளியிட நம் பேராசிரியரிடம் அனுமதி பெற்றேன். இத்திருப்பணியில் என் குழாத்தில் திரு.ஜி.குமரன், கே.எம். சேகர், வடிவேலு மற்றும் சுந்தரம் அவர்களும் இணைந்தனர். ஆன்ம ஈடேற்றம் தரும் இத்தமிழ்ப் பாடல்கள் முப்பதிலும் இறைவனின் சொரூபம், அவனை வழிபடும் முறைகள், அப்பெருமானின் அருளாட்சித்திறன் எனப் பல தெய்வச்செய்திகள் கருவூலங்களாக மண்டிக் கிடக்கின்றன.

பாதமலர், வார்கழல்கள், மலர்ப்பாதம், வான்வார்கழல், பொற்பாதம், பாதத்திறம், வித்தகர்தாள், திருவடி, செங்கமலப் பொற்பாதம் என்று மணிவாசகப் பெருமான் திருவடிப் புகழ்ச்சியை திருவாய் மலர்ந்தருளுகிறார். எல்லாவற்றுக்கும் மூலம் பாதமலர்கள் என்றும், இறைவனது முதன்மையையும் ஈறு என்னும் தனிப்பெரும் தன்மையையும் எடுத்துக்காட்டுகிறார் வாதவூர் வள்ளல்.

சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தின் தலைவராகச் சிறப்பாக பணிபுரிந்து வந்த திரு. வி. சம்பந்தம் அவர்கள், நம் திருக்கூட்டத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமானவர். அன்புள்ளமும், தயாள குணமும் பெற்ற திரு வி. சம்பந்தம் சின்னாள் உடல் நலமின்றி இருந்தார். அன்மையில் தாம் உய்வுபெற உறுதி என்று நடேசப்பெருமானின் திருத்தாளில் தம்மை இணைத்துக் கொண்டார். நம் திருக்கூட்டத்தின் தூணாக விளங்கிய வி.சம்பந்தம் அவர்களின் ஆன்மா திருச்சிற்றம்பலவனின் திருவடியில் ஒளிர்வதாகும்.

இந்நூலைப் படிக்கும் அன்பர்கள் ஆடவல்லானின் திருவடி அருள்பெற வேண்டுகிறேன். அழகுடன் பதிப்பித்த மணிவாசகர் பதிப்பகத்தார் தில்லை நடராசனின் திருவருள் பெறவும் விழைகிறேன்.

மாணிக்க வாசகர் திருநாள் போற்றி! குருவே போற்றி!
சிவசுப்பிரமணியனார்தாள் போற்றி !

சிவத்தொண்டில் அன்பன்
சிவ. இராமச்சந்திரமூர்த்தி.

திருவெம்பாவை - மாணிக்கவாசகர்

முன்னுரை

மகாவித்துவான் - மயிலம் வே.சிவசுப்பிரமணியன்

மார்கழி மாதம் பிறந்து விட்டது. உலகம் அனைத்தும் நலம்பெற வேண்டும் என்னும் நோக்கத்தோடு திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்கள் வைகறைக் காலத்தில் எங்கும் பாடப் பெறுகின்றன. இரண்டு திருப்பாடல்களும் பாவை என முடிகின்றன. பாவை என்பது கண்ணிற் கருமணியைக் குறிக்கும்.

"கருமணியிற் பாவாய் நீபோதாய் யாம்வீழும்
திருநுதற் கில்லை இடம்" (குறள்)

என்பார் வள்ளுவர். 'கண்ணிரண்டும் ஒன்றையே காண்' என்றபடி வெவ்வேறு சமயத்தைச் சார்ந்ததாயினும் இரண்டு பாவை நூல்களுக்கும் முடிந்த பொருள் ஒன்றுதான். இதை வேறொரு வகையிலும் பார்க்கலாம்.

மாணிக்க வாசகப் பெருமான் திருவெம்பாவை பாடினார் திருவெம்பாவையின் முதற்பாட்டு "ஆதியும் அந்தமும்" என்று தொடங்குகிறது. இப்பாட்டின் முதல் எழுத்து திருப்பாவை பாடிய 'ஆண்டாள்' திருநாமத்தின் முதல் எழுத்தாகிய 'ஆ' என்றே இருக்கிறது.

ஆண்டாள் திருப்பாவை பாடினார். திருப்பாவையின் முதற்பாட்டு 'மார்கழித் திங்கள்' என்று தொடங்குகிறது. இப்பாட்டின் முதல் எழுத்து மாணிக்கவாசகப் பெருமான் திரு நாமத்தின் முதல் எழுத்தாகிய 'மா' என்றே இருக்கிறது. ஆகவே இரண்டு பாவை நூல்களின் தலை எழுத்தும் ஒன்றை ஒன்று தழுவியதாகவே இருக்கிறது. இது ஒரு அசாதாரணமான ஒற்றுமை ஆகும்.

மாணிக்க வாசகர் 'ஆதியும் அந்தமும்' என்று தொடங்கினார். ஆதியும் அந்தமும் இரு பாவை நூல்களிலும் ஒன்றாகவே உள்ளது. ஆண்டாள் அருளிய திருப்பாவையின் முதற்பாட்டின் முதலிலே 'மார்கழி' வருகிறது. மாணிக்க வாசகர் அருளிய திருவெம்பாவையின் இறுதிப்பாடல் இறுதி அடியில் 'போற்றியாம் மார்கழி நீர் ஆடேலோர் எம்பாவாய்' என்று மார்கழி வருகிறது. இருபாவைகளிலும் மார்கழி ஆதியும் அந்தமுமாக உள்ளது.

'மாதங்களில் நான் மார்கழி ஆகின்றேன்' என்று கண்ணன் பகவத் கீதையில் பேசுவான். மார்கழி மாதம் சிவனை வழிபடுவார்க்குச் சிறந்த மாதம். சிவபிரானது திருநக்ஷத்திர மாகிய திருவாதிரை மார்கழி மாதத்தில் பௌர்ணமியைச் சாரவரும். விசேடமாக வழிபடப் பெறுவது.

மார்கழித் திங்கள் தேவர்களுக்கு வைகறைக் காலம் என்பர். தேவமானத்தில் ஓர் நாள் மக்களுக்கு ஓர் ஆண்டாகும்; ஆடி மாதம் முதல் மார்கழி வரை இரவு. தை முதல் ஆனி வரை பகல். மார்கழி இருள்புலர் வைகறை. நற்செயல்களைச் செய்தற்கும் இறைவனைச் சிந்தித்தற்கும் ஏற்ற பொழுது வைகறைக் காலமாகும். இத்தகைய நல்ல பொழுதிலே இள மகளிர் கடவுளன்பு மீதூரப்பெற்று ஒருவர் ஒருவரை உறக்கத்திருந்து எழுப்பி, அழைத்துச் சென்று எல்லாரும் கூடி நீராடி இறைவன் திருவருளைப் பாடிப் பரவிப் போற்றுவதாகப் பாவை நூல்கள் பேசுகின்றன.

பாவை என்பது உமாதேவியைக் குறிக்கும் இடங்களில் பயின்று வரும் 'இமயப் பாவை' என்று சம்பந்தரும் 'மலையரசன் பொற்பாவை' என்று மாணிக்கவாசகரும் அருளிச் செய்வர். சிலப் பதிகாரம் வேட்டுவவரியில். தேவியைப் 'பாய்கலைப் பாவை', 'ஆய்கலைப் பாவை,' 'அருங்கலைப் பாவை' என்று இளங்கோவடிகள் பல பாவைகளாகப் பாராட்டுகிறார்.

நல்ல நாயகனைப் பெற வேண்டும் என்ற எண்ணம் உடைய பெண்கள் பாவை நோன்பு நோற்றனர் என்று சங்க நூல்கள் கூறுகின்றன. பரிபாடலில் 'அம்பாவாடல்' என்று பாவை நோன்பு குறிக்கப் பெறுகிறது. கலித்தொகை 'தையில் நீராடிய தவம்' என்று இதைக் குறிக்கிறது. சந்திரனைக் கொண்டு மாதத்தைக் கணக்கிடும் சாந்திரமான முறையில் மார்கழிப் பௌர்ணமி தொடங்கி தைமாதப் பௌர்ணமி முன்னாள் வரை ஒரு மாதம் ஆதலின் அதுபற்றி இந்நோன்பு தைந்நீராடல் என்றும் குறிக்கப் பெறும்.

காத்தியாயினி தேவியைக் குறித்து ஆயர்பாடிப் பெண்கள் இந்நோன்பு நோற்றதாகப் பாகவதம் கூறுகிறது. பண்டைக் காலம் முதலே செய்து வந்த நோன்பு இது. பாகவதத்தில் பராசக்தியை நினைந்து உருக்குமணி இந்த நோன்பு செய்ததாகச் சொல்லப் பெற்றுள்ளது. ஆன்மநாயகனாக இறைவனையே பெற வேண்டும் என்னும் எண்ணமுடைய கன்னிப் பெண்கள் இந்நோன்பு நோற்று இறைவனை வழிபட்டு வேண்டுவதாகப் பாவை நூல்கள் பேசுகின்றன.

திருவெம்பாவை

பாண்டியன் அவையில் அமைச்சராக இருந்தவர் மணிவாசகர். அவர் பொருட்டு சிவபெருமான் நரியைப்பரியாக்கினார்; மண்சுமந்தார்; பிரம்படி பட்டார். அப்பேரருளாளராகிய மணிவாசகர் அருளிய திருவாசகத்தில் 'திருவெம்பாவை' என்பது தனி ஒரு பிரபந்த மாகும். இது திருஅண்ணாமலையில் அருளப் பெற்றது. கடும் குளிரிலே உறங்கியவர்களை எழுப்பும் பாடலில் பக்கத்திலே கணப்பிடுவது போல அனற்பிழம்பாக இறைவன் காட்சியளித்த அண்ணாமலையை மணிவாசகர் இப்பிரபந்தம் பாடுதற்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்தார் என்பதும் ஓர் நயம்.

சத்தியை வியந்தது

சத்தியை வியந்தது என்பது திருவெம்பாவைக் கருத்து எனக்குறிப்பர்.

"மல இருள் உற்று உறங்காமல் மன்னுபரிபாகர் அருட்
சலம் முழுக வருக எனச் செப்பல் திருவெம்பாவை "

என்பது திருவாசக உண்மை. இறைவனை அடையும் பக்குவிகளாகிய உயிர்கள் ஆணவமாகிய மல இருளில் ஆழ்ந்து உறங்காமல் ஆண்டவனது அருள் வெள்ளத்தில் நீராடித் தூய்மை பெற அழைப்பது என்பதே இதன் கருத்தாகும். அருளே இறைவனது சத்தியாகும். திருவருள் இறைவனது திருவடி யாகும்.

'சிவம் காட்டித் தாள் தாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி' என்பது திருவாசகம். சத்தியை வியந்தது என்ற கருத்தைத் திருவெம்பாவை முதற்பாடல் தொடங்கி வைக்கிறது.

'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி' வார்கழல்கள் இறைவனது திருவடி. அதுவே அருளாகிய சத்தியாகும்.

திருவெம்பாவை இருபது பாடல்களை உடையது. 'ஏல் ஓர் எம்பாவாய்' என்னும் மகுடம் எல்லாப் பாடல்களிலும் வரும். 'எழுந்திரு;நான் சொல்வதைச் சிந்திப்பாயாக;எம்பாவையே' என்பது இதன் பொருள். பெண்ணை அழைத்துக் கூறிய 'எம்பாவாய்' என்பது எல்லாப் பாடல் இறுதியிலும் வருதலின் இதனை மகுடம் என்பர்.

இனி மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரதமனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்ற நவசத்திகளும் ஒருவரை மற்றவர் எழுப்பி இயக்கியதாகப் பொருள் கூறி முதல் எட்டுப் பாடல்களினால் எழுப்பப்பட்டவர் ஒன்பதின்மரும் ஒன்றாகக் கூடி இறைவனைப் பரவுவதாக ஒன்பதாம் பாடலுக்குப் பொருள் உரைப்பர். இந்நவசத்திகளைக் குறிப்பிடும் சொற்குறிப்பு எதுவும் இப்பாடல்களில் இல்லாமை ஓர்ந்துணர்க.

தொகுப்புரை

திருவெம்பாவையில் 1 முதல் 8 வரை உள்ள பாடல்கள் மகளிர் ஒருவரை ஒருவர் துயில் எழுப்புவதாக உள்ளன. 9–ஆம் பாடல் விரதத்தின் குறிக்கோள். பத்தாம் பாடல் சிவபிரானது சொல்லிறந்த தொன்மை நலம். 11–ஆம் பாடல் வேண்டுகோள். 12,13,14 ஆம் பாடல் பாடிக் கொண்டே நீராடல். 15–ஆம் பாடல் நீராடும் ஒரு பெண்ணின் பக்தி பரவசம். 16–ஆம் பாடல் இறைவனது பெருங்கருணைக்குச் சான்றாகவும் உலக ஒழுக்கத்துக்கு உதவுவதாகவும் உள்ள மழையைப் பரவுதல். 17,18 ஆம் பாடல்கள் இறைவன் அடியார்க் கெளியனாய் ஆண்டருளும் கருணைத்திறம் கூறுவது. 19–ஆம் பாடல் பிரார்த்தனை. 20–ஆம் பாடல் இறைவனைப் போற்றல்; நோன்பின் நிறைவு. என்ற முறையில் இவ் இருபது பாடல்களும் அமைகின்றன.

இலக்கிய நலமும் பக்தி வளமும் செறிய திருவெம்பாவைப் பாடல்கள் நம்மை ஆன்ம நாயகனாகிய சிவபெருமானிடம் அழைத்துச் செல்கின்றன. இனி நூலுள் சென்று காண்போம்.

1. வாள் தடங்கண் மாது

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும், வாள் தடம் கண்
மாதே! வளருதியோ? வன் செவியோ நின் செவி-தான்?
மா தேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மி விம்மி, மெய்ம்மறந்து,
போது ஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு, இங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள்; என்னே ! என்னே !
ஈதே எம் தோழி பரிசு? - ஏல் ஓர் எம்பாவாய் ! (1)

பக்திச் சுவையும் நகைச்சுவையும் பின்னலிடத் திருவெம் பாவையின் முதற்பாடல் தொடங்குகிறது.

அதிகாலையில் எழுந்த பெண்கள் தங்கள் அன்பிற்கினிய ஒருத்தியின் வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்கள். உள்ளே உறங்கிக் கிடக்கின்ற அவளை எழுப்புகிறார்கள். பாடிக் கொண்டே வந்தவர்கள் அவர்கள். முதலும் முடிவும் அறிய முடியாத ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறவளை எழுப்புகிற அவர்கள் முதலும் முடிவும் இல்லாத அரும்பெரும் சோதியைப் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

தூங்குகிறவளை எழுப்புகிறார்கள். ஒருத்தி கூப்பிடுகிறாள் 'வாள் தடங்கண் மாதே' என்று. இது என்ன கிண்டல்; அடீ உனக்கு இவ்வளவு அழகான வாள் போன்ற கூரிய, விசாலமான கண்கள் அமைந்தது ஆண்டவனைக் கண்டு வழிபடவா உறங்கு வதற்கா? என்கிறாள். ஒருபொருளை நன்றாகப் பார்க்கக் கூர்மையான வாள் கண்கள் வேண்டும். உறங்குவதற்கு வேண்டிய தில்லையே? குருட்டுக் கண்ணும் பார்வைக்கண்ணும் தூக்கத்தில் ஒன்று தானே. கண் கொடுத்தவனைக் கண் பெற்றவள் காண வேண்டாமா ? என்பது அவளது கேள்வி.

பார்ப்பதற்குத் தகுந்த பரம்பொருளையல்லவா நாங்கள் பாடிக் கொண்டு வருகிறோம். சுலபமான கண்ணுடையவர்களும் பார்க்கும்படி அது பெருஞ்சோதியாக உள்ளது. நுட்பமான சோதி இல்லை; ஆதியும் அந்தமும் இல்லாத சோதி. தோற்றமும் அழிவும் இல்லாத சோதி; எப்பொழுதும் உள்ள பேரொளி. பார்ப்பதற்கென்று ஒரு காலம் இல்லை; தானே எல்லாப் பொருளையும் தோற்றி நிறுத்தி

இறுதி செய்வது. தனக்குத் தோற்றமும் முடிவும் இல்லாத சோதியை நாங்கள் உன் வீட்டு வாசலிலே பாடிக் கொண்டிருக்கிறோம்; நீ உறங்கிக் கொண்டிருக்கிறாயே என்று சொல்லப் புகுந்தவள் 'வளருதியோ' என்கிறாள். தூக்கத்தில் பொருள்களுக்கு வளர்ச்சி ஏற்படும். பயிர்கள் இரவில் வளர்கின்றன. குழந்தையைத் தாலாட்டுகிறவர்கள் 'கண்வளராய்' என்பர். உடல்வளர உறக்கம் வேண்டும், உள்ளம் வளர விழிப்பு வேண்டும். பெரியோர்கள் தனித்திரு, விழித்திரு, பசித்திரு என்பது இது கருதியே. ஆண்டவனை வழிபட்டு உள்ளம் வளர விழிப்பு வேண்டும். உறக்கம் உடலையே வளர்க்கும் என்று சொல்லாமல் சொல்கிறாள் 'வளருதியோ' என்று.

ஒருத்தி கேட்டாள் 'நாம் பாடுவதைக் கேட்டுக் கொண்டே தூங்குகிறாளோ? 'என்று; அடுத்தொருத்தி சொன்னாள் 'கேட்டிருந் தால் தூங்க மாட்டாள்; அவள் காதிலே நாம் பாடுவது விழ வில்லை' என்று. விழவில்லை என்றால் 'காது கேளாக் காதோ' என்றாள் ஒருத்தி. 'வன் செவியோ நின் செவிதான்.' கேளாக் காது உன்னுடைய காது என்றாள் அவள். ஒருவேளை நீங்கள் மெல்லப் பாடியிருப்பீர்கள் அதனால் அவள் காதில் ஒலி விழுந்திருக்காது என்றாள் மற்றவள். உடனே முதலாமவள் சொன்னாள். 'நாங்கள் மெதுவாகவா சொன்னோம் மாதேவன் வார் கழல்களை யல்லவா வாழ்த்தினோம்' என்றாள். அவனே மாதேவன், அவனது கழல்கள் வார் கழல்கள். அதாவது நீண்ட கழல்கள் என்று எல்லாவற்றையும் நீட்டி முழக்கினாள். இதிலே ஒவ்வொரு சொல்லும் நெடிலிலே தொடங்குகிறது. சொல்லிப் பார்த்தால் எவ்வளவு உரக்கச் சொல்லியிருக்கிறார்கள் என்பது தெரியும். மாதேவனது வார்கழல்களை நாங்கள் வீதியிலே இருந்து வாழ்த்திய வாழ்த்தொலி உள்ளே சென்று காதில் விழுந்த அளவிலே அப்பெருமானின் அருமையும் பெருமையும் உள்ளத்தில் ஊற, அதனால் ஆனந்தபரவசம் அடைந்து, களிப்பினால் விம்மி, விம்மி, தன் உடம்பை மறந்து படுக்கை யிலிருந்து புரண்டு இப்படி ஏதாவது உணர்ச்சி வேறுபாடு அடைய வேண்டாமா? இவளிடத்தில் ஒரு சிறு சலனம் கூட இல்லையே.

'வாழ்த்தொலி போய், வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து, போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டு, இங்ஙன் ஏதேனும் ஆகாள் கிடந்தாள்; என்னே! என்னே!' என்கிறார்களாம்.

உலகத்தில் நான் பலரை உறக்கத்திலிருந்து எழுப்பி இருக்கிறேன்; இவள் போல் கண்டதில்லை என்பதால் என்னே

என்னே என்று ஆச்சரியப்படுகிறாள். காணாத புதுமையைக் கண்டு வியப்பு பிறக்கிறது.

ஒருவேளை படுக்கைச்சுகம் இவளை இவ்வளவு மயக்கி விட்டதோ என்று நினைக்கிறாள். வெறும் படுக்கையா அது 'போதார் அமளி' யல்லவா? மணமும் மென்மையும் உடைய மலர்ப் படுக்கையிலே கிடப்பவளுக்கு எழுந்திருக்க மனம் இடம் கொடுக்குமா? 'விடிகாலைத் தூக்கம் வெல்லம் போலே' என்றபடி தூக்கத்தில் சுகம் கண்டு விட்டாளோ இதுவோ என் தோழியின் தன்மை என்று மேலும் அவள் நிலை கண்டு திகைக்கிறாள்.

'ஈதே எந்தோழி பரிசு ஏலோர் எம்பாவாய் 'ஏல் என்பது ஏற்றுக் கொள், அடுத்து ஓர் என்பது ஆராய்ச்சி செய் எம்பாவாய்! என்பது பெண்ணே என்னும் முன்னிலைச் சொல் 'நாங்கள் கூறுவதை ஏற்றுக் கொண்டு ஆராய்ச்சி செய்து காண்பாயாக' என்று கூட்டுப் பொருள். ஏற்ற பெற்றி பாடல் தோறும் கொள்க.

இருபது பாடல்களும் ஒரு பிரபந்தம் என்பது தோற்ற அந்தாதியாக அமைய வேண்டும். அவ்வாறில்லாத போது ஒரே தொடர் மகுடமாக எல்லாப் பாடலின் இறுதியிலும் அமைப்பது வழக்கம். 'ஏலோர் எம்பாவாய்' என்பது மகுடமாக இருபது பாடல்களின் இறுதியிலும் அமைந்து ஒரு நூலாக்கி அழகு செய்கிறது.



உ. நேரிழை யாள்

'பாசம் பரஞ்சோதிக்கு' என்பாய், இராப் பகல் நாம்
பேசும்போது ; எப்போது இப்போது ஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய் !' - 'நேரிழையீர் !
சீ ! சீ !! இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப் பாதம் தந்தருள வந்தருளும்
தேசன், சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பு ஆர் ? யாம் ஆர் ?' - ஏல் ஓர் எம்பா வாய் ! (2)

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியைப் பாடிக் கொண்டே வாள் தடங் கண் மாதை அழைத்துக் கொண்டு பெண்கள் அடுத்த வீட்டுக்குப் போகிறார்கள்.

அவள் இறைவனிடத்தில் அளவிலாத அன்பு வைத்திருப்பதாக எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பாள். இவர்களோடு தயாராக முன்னாலேயே வந்து கலந்து கொண்டிருக்க வேண்டியவள் இன்னும் வரவில்லை; வரும் சுவடும் தெரியவில்லை. என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று வீதியிலே எழுப்ப வந்த பெண்களில் ஒருத்தி உள்ளே பார்க்கிறாள். அவள் படுக்கையிலே ஆனந்த மயமாக உறங்குகிற காட்சி தோன்றுகிறது.

'இரவும் பகலும் நாம் உரையாடும் போதெல்லாம் என்னுடைய அன்பெல்லாம் பரஞ் சோதிக்கு' என்று சொல்லுவாயே; எப்போது இந்த மலர்ப்படுக்கைக்கு ஆசை வைத்தாய். 'சயன சுகம்' என்று கேலியாகச் சொல்வது போல 'போதார் அமளியின் மேல் நேசம்' என்று கேட்கிறாள். கேட்கிறவள் உறங்குகிறவளை 'நேரிழையாய்' என்று அழைக்கிறாள்.

அவயவ அழகுக்குப் பொருத்தமான அணிகலன்களை அணிந்தவளே! உடம்புக்குப் பொருத்தமான அணியைத் தேடி அணிகின்றவளுக்கு உரைக்குப் பொருத்தமான செயல் இல்லையே? என்பது அதில் உள்ள கேலி.

உண்மையிலே அவள் உறங்கவில்லை. இவர்கள் வருவதை எதிர்பார்த்துப் படுக்கையில் விழித்துக் கொண்டு இருந்தவள்,

இவர்கள் அவளைக் கேலி செய்வதற்கு அவளும் பதிலடி கொடுக்கிறாள். அவள் பேசத் தொடங்கும் போதே இவர்களுக்குத் தான் சிறிதும் சளைத்தவள் அல்லள் என்பதைக் காட்டிவிடுகிறாள். 'நேரிழையீர்' தன்னை அழைக்க வந்த பலரையும் அழைத்தாள். 'சீ சீ இவையும் சிலவோ; விளையாடி ஏசும் இடம் ஈதோ' என்ன விளையாட்டுப் பேச்சு; இந்த மாதிரி பேச்சுகளுக்கு இதுவா சமயம் என்று ஆத்திரமாக அவள் பேச்சு வருகிறது. எனக்குப் பேச்சிலாவது பொருத்தம் இருந்தது. உங்களுடைய பேச்சுக்கு காலப் பொருத்தம் கூட இல்லையே என்று 'நேரிழையீர்' என்று தன்னை அவர்கள் அழைத்த வார்த்தையையே பன்மையாக அவர்களை அழைக்க உபயோகப் படுத்தியதன் மூலம் எவ்வளவு அருமையாக எடுத்துக் காட்டி விட்டாள். அவளுடைய மனநிலையும் ஆண்டவனிடத்தில் அவள் கொண்ட பரிசுத்தமான பக்தியும் 'சீ சீ' என்ற இரண்டு எழுத்துக் குறிப்பிலே எவ்வளவு குழலிடுகிறது. இப்படிச் சொல்லிக் கொண்டே மெல்ல வந்து மற்றவர்களோடு சேர்ந்து கொள்கிறாள். எழுப்ப வந்தவர்கள் தங்களை அவள் செய்த கிண்டலைக் கேட்டுச் சும்மா இருப்பார்களா? அவளுக்கு பதிலுக்கு ஏதாவது சொல்ல வேண்டாமா? உறங்கி வந்தவளைப் பார்த்து வருந்துகிறவர்களைப் போலப் பேச்சைத் தொடங்கி, அவளுக்குச் சரியான பதிலடிகொடுத்து முடிக்கிறார்கள்.

தேவர்கள் வழிபடுவதற்குக் கூசுகின்ற மலர் போன்ற திருவடிகளை இம்மண்ணுலகில் உள்ளவர்களுக்குத் தந்தருளுதற்கு வந்தருளுகின்ற தேசனும் சிவலோகனும் தில்லைச் சிற்றம்பலவனும் ஆகிய அப்பெருமானது அன்பு எங்கே! நாம் எங்கே! எங்களுக் கெல்லாம் அந்த அன்பு புரியுமா? உனக்குத் தான் அந்த பாசம் புரியும் அதுவும் படுக்கையிலே புரியும் என்று அந்தக் கேலிக்குறிப்பு இறுதியிலே தொனியாக வருகிறது.

'ஈசனார்க்கு அன்பு ஆர்; நாம் யார்'

என்று சொல்கிற போது பேச்சிலே பாசமும் செயலிலே படுக்கையில் நேசமுமாக இருக்கின்ற உனக்குத் தெரிந்த அளவுக்கு எங்களுக்கு அன்பைப் பற்றித் தெரியுமோ? என்கிற நகைச்சுவையும் கேலியும் கலந்தே வருகிறது.

இந்த இறுதிவரிகள் ஆண்டவன் கருணையை எப்படி எடுத்துக் காட்டிவிடுகின்றன.

'தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம் பலத்துள் ஈசன்'

தேசன் தேஜோ மயமானவன்; தனக்கோர் உருவம் இல்லாதவன்; பேரொளியானவன்; அரும்பெருஞ் சோதியாகவும்

பரஞ்சோதியாகவும் இருக்கின்ற தனிமுதல்; பரம்பொருளின் சொரூபலக்ஷணம் ஆகிய சிறப்பியல்பு அது. அந்தப் பரம் பொருள் தனது கருணையாலே முத்தான் மாக்கள் வழிபடச் சிவலோகத்திலே வீற்றிருக்கின்ற சிவலோக நாயகன்; மனிதர்கள் மாட்டுள்ள பரங்கருணையாலே தில்லைச் சிதம்பரத்திலே அனைவரும் கண்டுவழிபட ஆனந்தத் தாண்டவம்செய்து தில்லைச் சிற்றம்பலத்து ஈசனாக விளங்குகிறான். பிறருக்கில்லாத தனி முதன்மை உடையவன் ஈசன்; அது ஈசத்துவம் எனப்பெறும்.

பெருமான் உருவமற்றவனாக இருந்தும் உயிர்கள் மாட்டுள்ள கருணையாலே உருவமும் இடமும் வரையறுத்துத் தன்னைச் சிறைப்படுத்திக்கொண்டு பிறவிச் சிறையில் உள்ள ஆன்மாக்களின் வினை விலங்கை அறுக்கின்றான் என்ற நுட்பமான கருத்தைத் தருகிறது இந்த இறுதி வரிகள்.

இந்தப் பாடலில் 'விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசும் மலர்ப்பாதம்' என்பது இரண்டு வகையாகப் பொருள் கொள்ள இடம் தருகின்ற அழகிய தொடராகும். புண்ணிய முதிர்ச்சியால் உண்டாகிய தேவர் நிலையில் உள்ளவர்கள் இறைவனை வாழ்த்துகிறார்கள். அந்த வாழ்த்து அவர்கள் மேலும் வாழவும் தம்மை மற்றவர்கள் தொழுது வணங்கி வாழ்த்த வேண்டும் என்பதற்காகவும் தான். இந்தக்கள்ள நினைவோடு வாழ்த்த வருகிற அவர்கள் கூசுகிறார்கள். அவர்களின் கள்ளம் அவர்களை வெட்கமுறச் செய்கிறது என்பது ஒரு பொருள்.

இனி இப்படிப்பட்ட தேவர்கள் வணங்கி வாழ்த்துகிறபோது இறைவனே நாணுகின்றான். தன்னைத் தனி முதல் என்று பணியாமல் தாங்கள் முதலாக ஆக வேண்டும் என்று தன்னையே பணிகிறார்கள் பொய்த்தன்மையோடு; இறைவன் திருவடி கூசுகிறது. என்றும் சொல்லலாம்.

'விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசும்' என்றும் – 'கூசும் மலர்ப் பாதம்' என்றும் இயைத்துக் காணலாம் – 'பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு, நக்கு நிற்பன் அவர்தமை நாணியே' என்ற அருளிச் செயலை இங்கு நினைந்து மகிழ்க.



3. முத்தன்ன வெண்ணகையாள்

‘முத்து அன்ன வெள் நகையாய்! முன் வந்து, எதிர் எழுந்து, ‘என்
அத்தன், ஆனந்தன், அமுதன் ’ என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய், வந்து உன் கடை திறவாய்’ –
‘பத்து உடையீர்! ஈசன் பழ அடியீர்! பாங்கு உடையீர்!
புத்து அடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால், பொல்லாதோ?’ –
‘எத்தோ நின் அன்புடைமை ? எல்லோம் அறியோமோ?’ –
‘சித்தம் அழகியார் பாடாரோ, நம் சிவனை ?’ –
‘இத்தனையும் வேண்டும் எமக்கு’ – ஏல் ஓர் எம்பாவாய் ! (3)

வாள் தடங்கண் மாதையும் நேரிழையாளையும் அழைத்துக் கொண்டு வந்த பெண்கள் முத்தன்ன வெண்ணகையாளை எழுப்பி அழைக்க வருகிறார்கள். அவள் வீட்டு வாயிலிலே நின்று அழைக்கிறார்கள். இப்பொழுது கொஞ்சம் பகற்காலத்து ஒளிமெல்லத் தோன்றுகிறது. அதனால் அவளது முத்துப் போன்ற பற்களின் ஒளி புறத்தார்க்குச் சற்றே புலனாகிறது. சாவித் துளை வழியாகக் கதவிடுக்கின் வழியாக உள்ளே உறங்குகிறவளைப் பார்க்கிறார்களோ?

அதனால் அழைக்கிற போதே ‘முத்தன்ன வெண்ணகையாய்’ என்று அழைக்கிறார்கள். அழைத்து என்ன சொல்கிறார்கள் என்பதை மேலே பார்க்கலாம்.

‘சென்ற ஆண்டு மார்கழி மாதத்திலே நாங்கள் உன்னை வந்து அழைப்பதற்கு முன்னாலே நீ எழுந்து எங்கள் எதிர் வந்து என் அத்தன், ஆனந்தன், அமுதன் என்று சிவ பெருமானைச் சொல்லி, உள்ளம் உருகி, நாவில் நீர் ஊறும்படி இனிமை பரவி, உடம்பெல்லாம் நாச்சுவை போலத் தித்திக்கும்படி பேசினவளாயிற்றே;

இந்த ஆண்டு நாங்கள் வீதியிலே வந்து, அத்தன் ஆனந்தன், அமுதன் என்று பரவியும் வந்து உன் வாயிற் கதவைத் திறக்க வில்லையே’ என்று கூறி அழைத்தார்கள்.

வாயிற்கதவின் இடைவெளியிலே மெல்ல எரியும் விடி விளக்கின் ஒளியிலே இவளது பற்களின் முத்துப் போன்ற ஒளி கண்டு 'முத்தன்ன வெண்ணகையாய்' என்று அதையே அவளுக்குப் பெயராக்கினார்கள் போலும்.

அத்தன் – எனக்குத் தந்தையானவன். தந்தை எனவே தாயாகவும் உள்ளவன் என்பது சொல்லாமல் முடிந்தது. உடல் தருகிறவள் தாய், உலகம் தருகிறவன் தந்தை. தனு, கரணம், புவனம், போகம் நான்கையும் உயிர்களுக்குத் தருபவன் இறைவன் ஆதலின் அவன் உயிர்களுக்கு அம்மையப்பனாவான். தன்னிலையிலே ஆனந்த மயமானவன். உயிர்கள் தன்னை அடைகிறபோது சுவைத்து அனுபவிக்கப்படும் பொருளாக ஆகின்றதனால் அமுதன். அமுதம் பிறர் உண்டு அழியாத் தன்மை பெறுதற்கு உதவுவது. உயிர்கள் இறைவனை அனுபவித்து அழியாத்தன்மை பெறுகின்றன. எனவே அமுதன் ஆகிறான் அவன்.

அத்தன், ஆனந்தன், அமுதன் என்று பேசினாள். அள்ளூறித் தித்திக்கப் பேசினாள். அள்ளூறல் என்பது 'நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்' என்றபடி, உள்ளம் உருகி அந்த உருக்கம் உடம்பிலும் நாவிலும் வெளிப்படல்.

தித்திக்கப் பேசியவள் வந்து கதவைத் திறக்க வில்லையே என்றார்கள். உள்ளே உறங்கியவள் எழுந்து வந்து தன்னை அழைக்க வந்தவர்களைப் பார்த்துப் பரிகாசமாகச் சொன்னாள். பணிந்து பேசுவதைப் போல அவர்களை நகையாடுகிறாள்.

'பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்கு உடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆண்டு கொண்டால் பொல்லாதோ? '

என்றாள். நீங்கள் நீண்ட காலமாக இறைவனுக்கு அடியாராக இருக்கிறவர்கள். நான் இந்தத் துறைக்குப் புதியவள், குற்றம் குறை இருக்கத்தானே செய்யும். அதைப் பொறுத்து ஏற்றுக் கொண்டால் என்ன கெட்டுப் போகும்? அதனால் உங்களுக்கு ஏதேனும் தீமை உண்டாகி விடுமா? என்றாள்.

இறைவன் பால் மெய்யன்புடையவர்கள் என்பதைப் 'பத்துடையீர்' என்றாள். பத்து – பத்தி. அன்பு என்று பொருள்.

'பழ அடியீர்' இறைவனுக்கு வாழையடி வாழையாய் வந்த சைவத் திருவாளர்கள் நீங்கள் என்பது கேலி. 'பாங்கு உடையீர்'

பாங்கு இதம் – நன்மை உடையீர். வைணவ பரிபாஷையில் திருமேனி. பாங்காயிருக்கிறதா? உங்கள் வேலைகளுக்கு உங்கள் உடம்பு உதவிகரமாக இதமாக உள்ளதா? என்பது கேள்வி. குற்றம் செய்யினும் குணமதாய்க் கொள்பவன் அவன். அவனுக்கு இதமான நீங்களும் குற்றம் பொறுத்துக் குணம் கொண்டு பாராட்டும் தன்மை உடையீர் என்பது கருத்து. எழுப்ப வந்தவர்கள் அவள் சொல்லிய வார்த்தையைக் கேட்டதும் கன்னத்தில் போட்டுக் கொண்டு பேசுவதுபோலச் சொல்கிறார்கள். அம்மம்மா! நீ என்ன புது அடியாரா? 'எத்தோ! நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ' உன்னுடைய ஈஸ்வர பத்தியை நாங்கள் எல்லாம் அறிய மாட்டோமா! நீ பேரன்புடையவளாயிற்றே அது எங்களுக்குத் தெரியாததா? என்றார்கள்.

அதையும் கேலியாக எடுத்துக் கொண்டாள் உள்ளிருந்து வந்தவள்.

'சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை' என்றாள். மனம் அழகாக இருக்கிறவர்கள் நம் சிவனைப் பாட மாட்டார்களா? நீங்கள் தான் மன அழகு படைத்தவர்கள். எனக்கு அந்த அழகு போதாது; அதனால் நீங்கள் இறைவனைப் பாடிப் பரவ நான் உறங்கிக் கிடந்து விட்டேன்; அந்தச் சித்த அழகு உங்களுக்குத்தான் பொருத்தம். இங்கே அவள் 'உம் சிவனை' என்று சொல்லாமல் 'நம் சிவனை' என்று சொல்வது கொண்டே இவர்கள் அசதியாடுகிறார்கள் என்பது தெரிகிறது.

முதலில் 'என் அத்தன்' என்று இவள் சொல்லியதாக அவர்கள் குறிப்பிட்டதால் இப்போது இவள் 'நம் சிவனை' என்று சிவனைத் தனக்கும் அவர்க்கும் பொதுவுடைமை ஆக்கி, அவர்கள் சொல்லில் விளைந்த தவற்றைச் சுட்டிக் காட்டினாள் எனலும் ஆம்.

எழுப்ப வந்தவர்கள் 'இத்தனையும் வேண்டும் எமக்கு' என்று தம்மைத்தாமே நொந்து கொள்கிறார்கள். சும்மா வந்து எழுப்பாமல் போன மார்கழியில் நடந்த கதையை உன்னிடத்திலே பேசினோம் அல்லவா? எங்களுக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும் என்று சொல்லி அடியார் உறவில் அவசரமும் கேலியும் தவறு என்பதைப் புலப்படுத்துகிறார்கள்.

இந்தப் பாடல் அத்தன், ஆனந்தன், அமுதன் என்று இறைவனைக் குறிப்பிடும். அவன் அடியார் பத்தியும், பழைமையும், பாங்கும் உடையவராய்ச் சித்தத்தால் அழகியவர் என்று செப்பும்.

இதனுள் 'பத்துடையீர்' என்பதற்கு பத்தி என்பதே பத்து எனச் செய்யுள் நோக்கி வந்தது என்று பொருள் கூறினோம். இனி பத்து என்பதை உள்ளவாறே வைத்து அடியார்கள் பத்துச் செயல்களை உடையவர்கள் எனப் பொருள் உரைப்பதும் உண்டு. அடியார்கள் செயல்கள் பத்து என்பதைத் 'தசகாரியம்' என்பர். அவை தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசக்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பனவாம். திருநாவுக்கரசர் 'ஒன்று கொலாம்' என்ற பதிகத்தின் இறுதிப் பாடல் இறுதி வரியில் 'பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே' என்பதும் இது குறித்ததே யாகும். இனி, இவ்வாறின்றி அடியார் செய்கை பத்து என்பதற்கு வேறு பொருள் கூறுவாரும் உளர். அவர், 1.திருநீறு அக்கமணி அணிதல், 2. குரு வழிபாடு, 3.சிவனைப் பாடுதல், 4.திருநாமம் செபித்தல், 5. சிவவழிபாடு 6. சிவதருமம் செய்தல், 7. சிவபெருமான் சரிதம் கேட்டல், 8. சிவாலயத்தைப் பாதுகாத்தல், 9. தொண்டர்களிடத்தில் உண்ணுதல், 10.தொண்டர்க்குத் தொண்டராதல் என்பர்.



4. ஒள் நித்தில நகையாள்

'ஒள் நித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ? ' -
'வண்ணக் கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ?' -
'எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று, அவமே காலத்தைப் போக்காதே' -
'விண்ணுக்கு ஒரு மருந்தை, வேத விழுப் பொருளை,
கண்ணுக்கு இனியானை, பாடிக் கசிந்து, உள்ளம்
உள் நெக்கு, நின்று உருக, யாம் மாட்டோம்; நீயே வந்து
எண்ணி, குறையில், துயில்' - ஏல் ஓர் எம்பாவாய்! (4)

முத்தன்ன வெண்ணகையாளை எழுப்பிய அவர்களோடு சேர்ந்து கொண்டு நாமும் அடுத்த வீட்டுக்குச் செல்கிறோம். இவள் 'ஒண்ணித்தில நகையாள்' ஒளிபடைத்த முத்துப் போன்ற புன்சிரிப்பினை (பற்களை) உடையாள். அது வெறும் முத்து, ஆனால் இது ஒளிமுத்து. இந்த நான்காவது வீட்டுக்கு வருகிறபோது இன்னும் கொஞ்சம் ஒளி பரவி இருள் நீங்கி விட்டதால் 'ஒள் நித்தில நகையாள்' என்று குறிப்பிடுகிறார்கள் போலும்.

'அம்மா! முத்துப்பல் மோகனப் புன்னகையாளே! உனக்கு மாத்திரம் இன்னும் விடிய வில்லையோ? 'என்றார்கள்.

'ஒள் நித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ? 'எழுப்ப வந்த கூட்டத்தில் ஒருத்தி உள்ளே உறங்குகிறவளைக் கேட்ட கேள்வி அது. கொஞ்சம் நெருக்கமான நட்புடைய தோழிகள் இவர்கள் எல்லாம். பரிகாசம், கேலி, கிண்டல் எல்லாம் இவர்கள் பேச்சில் உண்டு.

படுக்கையில் இருந்தவள் எழுந்திருக்க மனம் இல்லாமல் அவர்களைக் கேட்டாள்.

'வண்ணக் கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ? '

புன்னகையிலே உலகப் பேரழகி அவளானால், வந்திருப்பவர்கள் பேச்சிலே உலகத்தை விற்கிறவர்கள் என்று சொல்கின்றவள்; வண்ணக் கிளி போன்ற சொற்களைப் பேசுகின்றவர்கள் எல்லாரும் வந்து விட்டார்களா? என்றாள். ஏனென்றால் அதுவரை கொஞ்சம் படுக்கையில் கிடக்கலாமே என்ற ஆசை அவளுக்கு.

வெளியிலே இருந்த பெண்களில் ஒருத்தி 'எண்ணிப் பார்த்துத் தானே' எல்லாரும் வந்திருக்கிறார்களா என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியும். கொஞ்சம் நேரம் வேண்டும் என்றாள்; மற்றொருத்தி ஜன்னல் வழியாக உள்ளே பார்த்து, 'நீ பலே கெட்டிக்காரி; எங்களை எண்ணச் சொல்லிவிட்டு அதற்குள் ஒரு குட்டித்தூக்கம் போடலாம் என்று பார்க்கிறாயா? அதற்கு நாங்கள் விடமாட்டோம்; நாங்கள் எண்ணுகிற வரையும் 'கண்ணைத் துயின்று வீணாகக் காலத்தைப் போக்காதே' என்று எச்சரிக்கை செய்தாள். அந்த நேரம் வரையிலும் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? மூன்றாமவள் சொல்கிறாள்.

'விண்ணுக்கொருமருந்தை வேத விழுப்பொருளை, கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்து உள்ளம் உள்நெக்கு நின்றுருக வேண்டும்' என்று சொல்ல வந்தாள். சொல்லிக் கொண்டு வந்தவளுக்கே உள்ளம் உருகிவிட்டது. அதற்குமேல் அவளால் ஒன்றும் சொல்ல முடிய வில்லை. வந்திருக்கிறவர்களை எண்ணுகிற வேலையில் மனம் ஈடுபட மறுத்து விட்டது.

'யாம் மாட்டோம், நீயே வந்து எண்ணிக்குறையில் துயில்'

என்றாள். 'எங்களால் எண்ணமுடியாது; நீயே வந்து எண்ணிப் பார்த்துக் குறைந்தால் தூங்கு. எப்படியாவதுபோ' என்பது போலச் சொல்லி, இறைவனைப் பாடிப் பரவசம் அடைவதைக் காட்டிலும் லாபகரமான பயன் வேறு எதுவும் இல்லை என்பதைப் புலப்படுத்தினாள்.

'விண்ணுக்கு ஒரு மருந்து' தேவர்கள் பாற்கடலில் பெற்ற அமுதம். நல்வினையின் பயன் உள்ள அளவும் அவர்களைக் காக்க வல்லது. ஆனால் இதுவோ என்றும் அழியா வாழ்வை நல்குவது ஆதலின் ஒப்பற்ற அமுதம் என்றார். மருந்து – அமுதம்; உயிர் காப்பது மருந்து. பிறவிப்பிணி நீக்கி உயிரை வாழ்விப்பது இறையமுதம்.

வேதத்தின் சிறந்த பொருளாக இருப்பவன் இறைவன். உபநிடதமாகிய மறை முடிவாக விளங்குகிறவன். வேதவிழுப் பொருளாக இருந்தாலும் மனிதர்களுக்குப் பயன்பட வேண்டும் அல்லவா, அதற்காக உருவத் திருமேனி கொண்டு மக்களது கண்களுக்கு இனியானாக அவனே வருகின்றான். 'கண்ணுக் கினியான்' என்றார். பல தலங்களிலும் அந்தப் பெருமானைத் தரிசித்த மணிவாசகர் 'அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனாகி ஆண்டு கொண்டு அருளப் பெற்றவராதலின் அவனது

காட்சி கண்டு தாம்பெற்ற இன்ப அநுபவம் தேக்கெறிய, கண்ணுக்கினியான் என்று அப்பெருமானை அழைத்தார்.

இந்தப் பாட்டிலே பெண்கள் பலர் பேசுகிறார்கள். உள்ளே இருப்பவள் கேள்விக்கு வெளியே இருப்பவர்கள் மூன்று பேர் பதில் சொல்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவர் அநுபவத்திற்கேற்பப் பேசுகிறார்கள். எண்ணுவதாகச் சொல்கிறவள் ஒருத்தி; அவ்வளவு நேரம் தூங்கிக் காலம் போக்காதே என்கிறாள் ஒருத்தி. இறைவனைப் பாடி உள்ளம் உருகலால் எங்களால் முடியாது. நீயே வந்து எண்ணிக்கொள் – இது மூன்றாமவள். கொஞ்சலும், கெஞ்சலும் கிண்டலும் பக்தியும் கேலியும் கலக்க, எப்படித்தான் இந்த மெய்யடியார்க்குப் பெண்களைப் போலக் கலகலவென்று பேசும் பேச்சு வந்தது என்று நமக்கு வியப்பாய் இருக்கிறதல்லவா? நோன்பு நோற்கும் பெண்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டவர் அடியார்தாமே.

இறைவன் விண்ணுக்கொருமருந்தானவன் என்றது அவனது அருமையைச் சொல்லியது. வேதவிழுப்பொருள் என்றது. அவன் சொல்லும் பொருளுமாய் நின்று உயர்ந்தோர்களுக்குப் பயன்படுமாறு கூறியது. அனைவர்க்கும் பயன்படுமாறு அவன் கண்ணுக் கினியானாக வருகிறான் என்றது அவனது எளிமையைச் சுட்டியது.

'அருமையில் எளிய அழகே போற்றி'

என்ற திருவாக்கு இங்கு நினைவில் நிறுத்தி மகிழத்தக்கது.

'ஒரு மருந்து' – நாவுக்கே இனிப்பது. உண்ணக் குறைவது, இறப்பைத்தடுக்கும் ஆற்றல் அற்றது. இது – ஆராவமுது, கண் ஆர் அமுது, ஊற்றான உண்ணார் அமுது; நாவினுக்கே அன்றி மயிர்க்கால் தோறும் சுவை தேக்கிடச் செய்வது என இவற்றின் வேறுபாடறிக.

இக்கவிதையில் 'கண்ணைத் துயின்று' என்பது அரிய சொற்றொடர். துயின்று என்றாலே தூங்கி என்று பொருளாய் விடும். தூங்குதல் என்பதே பொருள் விளங்கப் போதுமாயிருக்க, கண்ணைத் துயின்று என்பது வெற்றெனத் தொடுத்தல் என்று நினைக்கக் கூடும். ஆனால் 'எல்லாரும் வந்தாரோ' என்று அவள் கேட்டபொழுதே அவள் உறக்கம் கலைந்து விட்டது. உணர்ந்து விட்டாள் என்பது விளங்கி விட்டது. மேலும் கண்ணை மூடித்தூங்குவது போலப் பாவனை செய்கிறாள் என்பதால் எழுப்ப வந்தவர்கள் பொய்த் தூக்கம் தூங்கி பொழுது போக்காதே என்று கூறுகின்ற வகையில் கண்ணைத்துயின்று எனக்குறித்தார்கள்.

5. ஏலக்குழலி

'மால் அறியா, நான்முகனும் காணா, மலையினை' நாம்
போல் அறிவோம்,' என்று உள்ள பொக்கங்களே பேசும்
பால் ஊறு தேன் வாய்ப் படிறீ! கடை திறவாய்
ஞாலமே, விண்ணே, பிறவே, அறிவு - அரியான்
கோலமும், நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டடும்
சீலமும் பாடி, 'சிவனே! சிவனே!' என்று
ஓலம் இடினும், உணராய், உணராய் காண்!
ஏலக்குழலி பரிசு' - ஏல் ஓர் எம்பாவாய்! (5)

வண்ணக்கிளிமொழியார் ஒண்ணித்தில நகையாளை எழுப்பி அழைத்துக் கொண்டு அடுத்த வீட்டில் உள்ள ஏலக்குழலியை அழைக்க வந்தார்கள். எப்பொழுதும் மயிர்ச்சாந்து பூசி மணமும் அழகும் பொருந்தக் கூந்தலை அலங்கரித்து வைத்துக் கொள்வதால் ஏலக்குழலி என்ற பெயர் உடையவள் இவள்.

வைகறைக் காலத்து எழுந்து வந்து நல்லதூக்கத்தின் சுகத்தைக் கெடுக்கிறார்களே என்று ஒரு சோம்பல் அவளிடத்தில் மேல் எழும்புகிறது. ஆண்டவனைப் பரவத் தன்னை எழுப்ப வருகின்றவர்களைப் பார்த்து அவள் சொல்கிறாள்.

திருமாலால் அறியமுடியாத அடியையும் திசைதோறும் ஒரு முகம் ஆக நான்கு முகங்களை உடைய பிரமனாலும் அறிய முடியாத முடியினையும் உடைய அந்தப் பெருமானை நாமா அறியமுடியும் என்று பேசுகிறாள்.

இறைவன் பெருமையை நன்கு அறிந்த அவள் உறக்கத்தின் மேல் உள்ள காதலால் ஆண்டவனை நாமா அறியப் போகிறோம் என்று பொக்கம் பேசுகிறாள். பொய் பேசுகிறாள் பொக்கம் வஞ்சனை. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசல்.

'பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பன் '

என்று அப்பரடிகளும் கூறுவர். மால் என்றால் மயக்கம். மயக்கம் உள்ளவர்களால் அறிய முடியாதவன். ஒரு முகமாய்ப் பார்க்காமல் சிந்தனை சிதறி நான்கு முகமாய்ப் பார்க்கிறவனும் அறிய முடியாது

என்று மாலையும், பிரமனையும் அடிமுடிதேடிய அண்ணாமலை வரலாற்றையும் குறிப்பிடாமல் பொதுவாகவும் பொருள் செய்யலாம்.

நாமா இறைவனை அறிய முடியும் என்று வஞ்சகமாகப் பேசுகிற 'பாலூறு தேன் வாய்ப்படிறீ!' கதவைத்திறப்பாயாக என்கிறார்கள். 'ஊறு' என்பதை இடைநிலை விளக்காகக் கொண்டு ஊறுகின்ற பாலையும் ஊறுகின்ற தேனையும் போலப் பேசுகின்ற வஞ்சகியே! என்று பொருள் கொள்ளலாம். பேச்சிலே இளமையும் பொருளிலே பொய்ம்மையும் தோன்றப் பேசுகின்றபடியால் 'படிறீ' என்று விளையாட்டாக வந்த மகளிர் அழைத்தனர்.

'நாம் போலறிவோம்' என்பது 'நாமா அறிவோம்' என்ற சொற்குறிப்பு. போல் என்பதைத் தள்ளி 'நாம் அறிவோம்' என்று பொருள் செய்தால் அவள் முன்னரே எழுந்து வராமைக்கும் காரணம் கூற முடியாது. 'நாமா அறிந்து விடுவோம்' என்று அவள் கூறியது கேட்டே எழுப்பவந்த மகளிர்.

அகந்தையாலே தன்னைத் தேடிய எத்தேவரினும் சிறந்த முத்தேவர்களில் பிரமனுக்கும் திருமாலுக்கும் அறியப்படாதவன் என்பது உண்மைதான், ஆனால் அன்பினால் தன்னை வழிபடுபவர் களுக்கு அருளுதற்குப் பல்வேறு வடிவங்களை அவன் மேற்கொண்டு வருகின்றான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்று பல்வேறு தொழில்களை மேற்கொண்டு உயிர்களை ஆண்டு கொண்டு அருளுகிறான். உயிர்களின் குற்றங்களைந்து குணம் கொள்கிறான். பெற்றதாய் குழந்தையைச் சீராட்டுவது போல தன்னை வழிபடும் அடியவர்களுக்குத் தான் எளியனாகிறான் என்று அவனது கோலமும் சீலமும் பாடுகிறார்கள். அப்பெருமானைச் சிவனே! சிவனே! என்று அறைகூவி அழைத்து, நீயும் அப்பெருமானை அன்பினால் அழைத்தால் வருவான் என்று சொல்கிறார்கள்.

'ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும்'

என்றார்கள். திருமாலும் பிரமனும் அறிய முடியாதவன் என்றுதான் ஏலக்குழலி சொன்னாள். இவர்களோ ஞாலம், விண் என்ற எல்லாவற்றாலும் அறியப் படாதவன். ஆனாலும் அவன் நம்பொருட்டுப் பல கோலங்களைக் கொள்கிறான். அர்த்த

நாரீஸ்வரனாக, இடபாரூடனாக, உமாமகேஸ்வரனாக, சோமாஸ் கந்தனாக, நீலகண்டனாக, பிக்ஷாடனனாக, கங்காதரனாக இப்படியெல்லாம் காட்சியளிக்க உருவத்திருமேனி கொள்கிறான். ஐந்தொழில் நடத்தும் சீலங்களையும் உடையவனாக இருக்கிறான் என்றார்கள்.

இவ்வளவு சொல்லியும் படுக்கையிலிருந்து ஏலக்குழலி எழுந்திருக்கவில்லை. இவர்கள் சொல்லிய சொல்லின் பொருளையும் உணரவில்லை. உறக்கத்தினின்றும் உணர்ந்து விழிக்க வில்லை. 'உணராய்; உணராய்' என்றார்கள். முதல் உணராய் அறியாய் என்பது. இரண்டாவது துயில் உணராய் என்பது.

இவள் தன்மை இருந்தவாறு என்னே? என்று வியக்கிறார்கள். நாம் சொல்லிய சொல்லின் பொருளை அறிந்தவளாயின் ஓடோடி வந்து நம்மோடு கலந்து கொண்டிருப்பாள். பொருளை அறியா விட்டாலும் சொல்லையாவது, சப்தத்தையாவது கேட்டிருந்தாலும் இவ்வளவு பெருங்கூச்சலிலே சிவனே! சிவனே! என்ற ஓலத்திலே உறக்கத்திலிருந்தாவது விழித்திருக்கலாமே. அதுவும் கூடக் காணோமே என்ற ஏக்கறவினாலே.

'ஏலக்குழலி பரிசு' என்று வியக்கிறார்கள். கூந்தலுக்குச் சாந்திட்டு அழகு படுத்துகின்ற இவளுக்கு உள்ளத்துக்கு அழகு மெய்ப் பொருளாகிய இறைவனின் தன்மையை உள்ளவாறு உணர்தல் என்பது தெரிய வில்லையே என்று கூறுவது போல 'ஏலக்குழலி' என்று அவளை அழைத்தார்கள்.

இனி அவர்களோடு சேர்ந்து அடுத்த வீட்டுக்குச் செல்வோம்.



௬. மான் விழியாள்

'மானே! நீ நென்னலை, 'நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன்' என்றலும், நாணாமே
போன திசை பகராய்; இன்னம் புலர்ந்தின்றோ?
வானே, நிலனே, பிறவே, அறிவு-அரியான்
தானே வந்து, எம்மைத் தலையளித்து, ஆட்கொண்டருளும்
வான் வார் கழல் பாடி வந்தோர்க்கு, உன் வாய் திறவாய்!
ஊனே உருகாய், உனக்கே உறும்; எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடு' – ஏல் ஓர் எம்பாவாய்! (௬)

இவள் மான் விழியாள். மான் போல மருண்டு பார்க்கும் பார்வையை உடையவள் என்பதைக் கருதி இவளை மானே! என்று அழைக்கிறார்கள்.

இந்த வீட்டிலே இன்று எழுப்புகிறவளை நேற்றுக் காலையிலே இதே பெண்கள் எழுப்பச் சென்றார்கள். அப்போது அவர்கள் இவளைக் குறை கூறி விளையாட்டாக ஏசினார்கள். இவளும் சளைக்கவில்லை. 'நாளைக்கு நான் வந்து உங்களை யெல்லாம் எழுப்புகிறேனா இல்லையா என்று பாருங்கள்' என்று சவால் விட்டாள்.

ஆனால் இன்று இவள் இருக்கிற சுவடே காணோம். அந்த வேடிக்கையைத்தான் வந்தவர்கள் சுட்டிக் காட்டிப் பேச்சைத் தொடங்குகிறார்கள்.

மான்போல மருண்டு நோக்குவாள். சொன்ன சொல்லை மட்டும் காப்பாற்ற மாட்டாள் என்ற கருத்தைப் பிரதிபலிக்க எழுப்ப வந்த கூட்டத்தில் ஒருத்தி இவளைப் பார்த்துப் பேசுகிறாள். 'நேற்று நீ பேசிய பேச்சு என்ன ? உனக்கு வெட்க மில்லை. எங்களை யெல்லாம் இன்றைக்கு நீ வந்து எழுப்புவதாகச் சொன்ன அந்த வார்த்தை எந்தத் திசையில் பறந்து போயிற்று? என்று காரசாரமாக நாலைந்து கேள்விளைக் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டாள். இன்னும் உனக்குப் பொழுதுவிடிய வில்லையா? என்றாள்.

அடுத்தபடி 'எங்களுக்குத் தான் பொழுது விடிந்த விட்டது. உனக்கென்ன தனிச் சூரியனா?' என்று ஒரு கிண்டல்.

முதல் நாளிலேயே திட்டம் போட்டவள் உறுதிகுலைந்து உறக்கத்திலே தோற்றுக் கிடக்கிறாள். வெளியிலே எழுப்ப வந்தவள் அவளை ஓட ஓட விரட்டுகிறாள். இப்படிக் கேள்வி போடுகிறபோதே இறைவன் மேல் உள்ள பக்தி உணர்ச்சி மேலிடுகிறது.

‘வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான் வார்கழல் பாடி வந்தோர்க்கு உன் வாய்திறவாய்’

வானும் நிலமும் பிறவும் அறியமுடியாத பரம்பொருள் தானே தன் கருணையாலே எளிவந்து நம்மை அடிமையாக்கிக் கொண்டு காத்தருள்கிறானே அந்தத் திருவடிகளைப் பாடி வந்தவர்களுக்கு வாயிலைத் திறக்காவிட்டாலும் வாயையாவது திறக்கலாமே.

கதவு திறக்காவிட்டாலும் தட்டுகிறவர்களுக்கு ‘இதோ வந்தேன்’ என்று உள்ளிருப்பவர்கள் ஒரு கூச்சல் போடவாவது செய்வது உலக வழக்கம் அல்லவா? வாயையும் திறக்க வில்லையே என்கிறாள் அடுத்தபடி.

‘உனக்கு உள்ளம் உருக வில்லையா?’ ‘எங்களுக்கு உள்ளத்தோடு உடம்பும் உருகிவிட்டதே’ என்கிறாள்; அதற்கு மேல். இப்படி உருகாதிருப்பது உனக்குத்தான் பொருந்தும். நீ மானல்லவா? முன் பார்த்த பார்வையைப் பின் பார்க்காமல் மருண்டு பார்க்கும் மான். முன்சொன்ன சொல்லை நிறைவேற்றாமல் பின் மயங்குவது ‘உனக்கே உறும்’ என்றாள்.

எப்படியாவது இறைவனைப் பாடுவது தான் நம் கடமை; உனக்கு அவன் கோனாக இல்லாவிட்டாலும் எங்களுக்கும் மற்றவர்களுக்கும் அவனே தலைவன், அவனைப் பாடுவாய் என்றாள்.

‘எமக்கும் ஏனோர்க்கும் தம்கோனைப் பாடு’ என்று கூறி முடிக்கிறாள்.

உனக்காக என்றில்லாவிட்டாலும் எங்களுக்காகவாவது எழுந்து வந்து எங்களுடன் கலந்து இறைவனைப் பாடக்கூடாதா? என்று கெஞ்சிக்கொஞ்சி முடிக்கிறாள் எழுப்பவந்தவள்.

சென்ற பாட்டிலே ‘ஞாலமே விண்ணே பிறவே’ என்ற வரிசை. இந்தப் பாட்டிலே ‘வானே நிலனே பிறவே அறிவரியான்’ என்று மாற்றப் பெற்றுள்ளது.

இறைவன் நம்மை ஆட்கொள்வதற்கு வான்வழியாக வருகின்றான் ஆதலின் முதலில் வானைக் குறித்ததாகக் கொள்ளலாம்.

திருமேனி தரித்துக் கொண்டு உயிர்களுக்குக் காட்சி அளித்தற்கு நிலம் இடமாதலின் ‘ஞாலம்’ என்று முன் பாட்டில் குறிக்கப் பெற்றது.

நாம் அழைக்காவிட்டாலும் அவன் நம்மைத் தேடி வருகிறவன் ஆதலின் 'தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட் கொண்டருளும்.' என்றது தானே வந்து எம்பால்தலையன்பு செய்து அடிமை கொண்டருள்வான் என்பதாம்.

ஆட்கொண்டருளும் கழல், வான் கழல், வார் கழல் என்றெல்லாம் திருவடிகளைப் பரவுகின்றார்கள். உயிர்களுக்குத் திருவடியே வீடுபேறு ஆதலின், அருளும் கழல் என்றார். திருவடி சாதனமும் சாத்தியமும் ஆகும்.

'தாள் தாமரை காட்டித் தன்கருணைத் தேன் காட்டி'

என்று வேறிடத்திலும் கூறுவர். திருவடியைப் பற்றித் திருவடியை அடைகிறோம். ஆதலின் அது உபாயமும் உபேயமுமாக இருப்பது என்பதனை உணர்த்த, ஆட்கொள்வதும் அருள்வதும் ஆகிய இரண்டும் உடையது கழல் என்றதாம். ஆட்கொள்வது சாதனம் உபாயம். அருளுதல் சாத்தியம் உபேயம் என உணர்க.

ஞானமேயான திருவடியாதலின் வான்கழல் என்றார். உயிர்களின் சிறுமையாலே அவ்வுயிர்கள் இருக்கின்ற இடம் வரையிலும் சென்று அவ்வுயிர்களை அணைத்துக் கொள்ள நீண்ட திருவடிகள் என்ற பொருளில் 'வார்கழல்' என்றும் கூறினார்.

நாம் இருக்கும் இடத்துக்கும் இறங்கி வந்து அருளும் அற்புதம் உடைய திருவடிகளைப்பாடி வந்தவர்களுக்கு வாயைத் திறந்து ஒரு வார்த்தை உபசாரத்துக்காகவாவது சொல்ல வேண்டாமா ? வீடு தேடி வந்தவர்களை வரவேற்று உபசரிக்க வேண்டியது கடமையல்லவா?

'வந்தோர்க்கு உன் வாய்திறவாய்' வாயிலைத் திறக்க வில்லை, வாயையும் திறக்க வில்லையே? திருவடியோ தான் இருக்குமிடத்திருந்து தன்னால் ஆட்கொள்ளப்படுகிறவர்கள் உள்ள வையகம் வரையிலும் நீளும் திருவடிகள் 'வான்வார்கழல்' அதனை நீ பாடாவிட்டாலும் பாடிவந்தவர்களுக்கு உபசாரமாவது சொல்லலாமே என்கிறாள்.

எப்படியாவது அவளை இறைவன் சார்பிலே ஒரு பேச்சைப் பேச வைத்துவிட வேண்டும் என்ற துடிப்பை எழுப்புகிறவர்களிடத்திலே பார்க்கிறோம்.

சொன்ன சொல்லை மறந்து உறங்குவதும் வாய்திறந்து பேசாமல் இருப்பதும், நெஞ்சம் உருகாமையும் உடல் குழையாமையும் ஆகியவை யெல்லாம் அன்புடையார் பிறரிடத்தில் இராது. நாமும் கண்டதில்லை; உனக்கே உறும் என்று சொல்லி.

உனக்காக என்றில்லாவிட்டாலும் எங்களுக்காகவாவது எழுந்து வந்து எங்களுடன் கலந்து இறைவனைப் பாடக் கூடாதா? என்று கொஞ்சிக் கெஞ்சி முடிக்கிறாள் எழுப்ப வந்தவள்.

7. அன்னே

'அன்னே, இவையும் சிலவோ? பல அமரர்
உன்னற்கு அரியான், ஒருவன், இரும் சீரான்,
சின்னங்கள் கேட்ப, 'சிவன்' என்றே வாய் திறப்பாய்;
'தென்னா என்னா முன்னம், தீ சேர் மெழுகு ஒப்பாய்;
'என்னானை, என் அரையன், இன் அமுது,' என்று எல்லோமும்
சொன்னோம் கேள், வெவ்வேறாய்; இன்னம் துயிலுதியோ?
வன் நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்,
எனனே துயிலின் பரிசு ? '– ஏல் ஓர் எம்பாவாய்! (7)

ஏழாவது வீட்டுக்குச் சென்று அங்கொருத்தியைத் துயில் எழுப்புகிறார்கள். இதுவரை எழுப்பப் பெற்ற பெண்களைப் போன்றவள் அல்ல இவள். மிகச் சிறந்த பக்தி உடையவள். இந்தப் பெண்கள் கூட்டத்தில் இவளது பக்தியை அவர்கள் பலமுறை கண்டிருக்கிறார்கள். இவளது பக்தியின் பாங்கு எப்படிப்பட்டது?

'பல அமரர் உன்னற்கு அரியான்; ஒருவன்;
இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
'தென்னா' என்னாமுன்னம் தீ சேர் மெழுகு ஒப்பாய் '

என்று இவளது பக்தியின் இயல்பை அவர்கள் சொல்கிறார்கள்.

பல தேவர்களாலும் நினைத்தற்கும் அருமையானவன், தனக்கு உவமை இல்லாதவன்; பெரும்புகழை உடையவன் ஆகிய எம்பெருமானது வருகையை அறிவிக்கும் திருச் சின்னமானது;

'தேவர்கள் தேவன் வந்தான்;
செங்கண் மால்விடையோன் வந்தான்;
மூவர்கள் முதல்வன் வந்தான்.'

என்று ஒலித்தவுடனே, அது காதில் விழுந்த அளவிலேயே சிவ சிவ என்றும் சிவபெருமானே என்றும் வாய்திறந்து பல முறை கூறித் தழுதழுப்பவள் இவள். அதுமட்டுமா!

ஆண்டவனைப் பாடுவார் பாடுகின்ற பாட்டுக்கு இசை கூட்டுவதற்கு முதலில் 'தென்னா, தெனா' என்று தொடங்குகிற போதே அனலைச் சேர்ந்த மெழுகு போல உள்ளம் உருகுவாள் இவள். பாட்டை ஆரம்பிக்கவே இல்லை; இசையைத்தான்

கூட்டுகிறார்கள் சொல்லும் பொருளும் இல்லாத வெறும் இசையொலிகேட்ட மாத்திரத்தானே, 'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே' என்று அப்பர் பெருமான் அருளியபடி அந்த இசையையே இறைவனாக நினைத்து உள்ளம் உருகுபவளாம்.

இனி, 'தென்னா' என்பதனைப் பாண்டிய நாட்டை உடையவனே! என்று பெருமானைப் பரவும் சொற்களில் ஒன்றாகவும் குறிப்பிடலாம். எந் நாட்டவர்க்கும் இறைவனைத் தென்னாடுடைய சிவன் என்று பரமஞானியாகிய மணிவாசகரே நாட்டுப் பற்றினாலே குறிப்பிட்டாரல்லவா! அந்த முறையிலே 'தென்னா' என்று சொல்வதற்கு முன் தீ சேர்ந்த மெழுகுபோல உள்ளம் உருகுவாள் இவள் என்றும் சொல்லலாம்.

வாத்திய ஒலி கேட்ட அளவில் இறைவன் திருநாமம் கூறுதலும், இறைவனைப் பாடுவார் பாடுதற்கு இசை கூட்டும் அளவிலேயே உள்ளம் உருகுதலையும் உடையவள் இன்று வேறுவிதமாக இருக்கிறாளே என்பது எழுப்ப வந்தவர்களுக்கு வியப்பு.

வந்தவர்கள், 'என் ஆனை என் அரையன், இன் அமுது' என்று தனித்தனியாக இறைவனைக் குறித்துச் சொன்னார்கள். என் ஆனை. அதாவது என் தந்தை, இறைவன் தந்தையும் ஆவன்; தாயும் ஆவன் ஆதலால் இரண்டுக்கும் பொருந்த எந்தாய் என்று இறைவனை அழைப்பார் குமரகுருபரர் – இறைவனை 'யானை' என்று ஆசை மிகுதியால் அழைத்ததாகவும் கொள்ளலாம். என் யானை, என்று காதலால் குழந்தைகளைக் கொஞ்சுதல் உலக வழக்கு. யானை காலைக் காட்டித்தலைமேல் வைத்துக் கொள்ளும். இறைவன் தன்னை வழிபடுபவர்களுக்குத் தன் திருவடிகளைக் காட்டி அவர்களை எல்லார்க்கும் மேலானவர்களாகத் தலைமை யானவர்களாகச் செய்கிறான் ஆதலின் யானை போல்வான் என்று உவமச் சொல்லாகவும் சொல்லலாம்.

என் அரசன் (என் ராஜா என்பது போல்) என் அமுதம் என்று இறைவனுக்கும் தமக்கும் உள்ள அன்பு நெருக்கம் தோன்ற வந்த பெண்கள் ஒவ்வொருவரும் சேர்ந்து சொல்லியதோடு தனித் தனியாகவும் சொன்னார்கள். அப்படியும் இவள் எழுந்திருக்க வில்லை. 'வெவ்வேறாய் இன்னும் துயிலுதியோ' என்றார்கள். முன்பு தூங்கிய தூக்கம் இல்லாமல் இது புதுத்தூக்கமோ? புதிது புதிதாகத் தூங்குகிறாள் என்றார்கள்.

உருகும் நெஞ்சம் இருந்தால் இப்படித் தூங்கியிருக்க மாட்டாய்; உன்னை எங்களுக்கு ஏற்கெனவே தெரியுமே; கடிய

நெஞ்சமுடைய பேதைகளைப் போல வெறுமனே உறங்குகின்றாயே; உண்மையான உறக்கம் இல்லை; பொய்யுறக்கம் தான் என்றார்கள்.

'வன்னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால்' இது உன் குற்றம் இல்லை; உன்னைப் பிடித்த தூக்கத்தின் தன்மை இருந்தவாறு என்னே!

'என்னே! துயிலின் பரிசு!' என்றார்களாம். இவள் குற்றத்தைத் தூக்கத்தின் மேல் ஏற்றிச் சொல்கிற கருணையைத் தான் பாருங்களேன். எழுப்ப வந்தவர்களுக்குத்தான் எவ்வளவு கனிந்த மனம். இவள் நிலை கண்டு வியப்படைந்த அவர்கள்.

'அன்னே! இவையும் சிலவோ' என்றார்கள். தாயே! உன்னுடைய பண்புகளில் இப்படியும் சில உள்ளனவா (முன்பு நாங்கள் உன்னிடம் கண்டதில்லையே) என்பது கேள்வி.

ஒலி கேட்டுப் பெயர் சொல்லுதலும், பாடத் தொடங்கும் போதே உள்ளம் உருகுதலும் உடையவள் இன்று பலபேர் தனித்தனியாகவும் சேர்ந்தும் பலமுறை இறைவன் பெயரைக் கூறியும் ஏனென்று கேட்காமல் கிடக்கின்றாள் என்றால் இரண்டு முரண்பட்ட குணங்கள் இவளிடம் உள்ளன என்று கருதி உன் பண்புகளில் இவையும் சில உள்ளனவோ? என்றார்கள்.

இனி, 'எங்களுக்கு இப்படியும் சில காரியங்கள் உள்ளனவோ' என்று எழுப்பவந்தவர்கள் தங்களையே கூறிக் கொண்டார்கள் எனவும் கூறலாம். மெய்யாக உறங்குகிறவர்களை எழுப்புவது போலப் பொய்யுறக்கம் உறங்குபவர்களையும் எழுப்புகிற செயல்களும் எங்களுக்கு உள்ளன போலும் என்னும் கருத்தால் 'இவையும் சிலவோ' என்று சலிப்போடு சொன்னார்கள். நல்ல பக்தி உடையவளாயிற்றே நீயும் இப்படிச் செய்து எங்களுக்குத் தொல்லை தரலாமா? என்று ஏக்கத்தோடு கேட்டுத் தன்னை எழுப்ப வந்த பெண்களால் தூக்கத்தை விட்டு இவளும் வந்து சேர்ந்து கொள்கிறாள்.

'சின்னங்கள் கேட்ப' என்றது. தோடுடைய செவியன் என்பது போல கண்ணிற்கும் கருத்திற்கும் எட்டாப் பரம்பொருளை உள்ளத்தில் உணர்தற்கு அவன் திருப்பெயரையும் இலக்கணத்தையும் கேட்டல் இன்றியமையாதது என்பது குறித்தது.

பன்னாளும் இறைவனைப் பரவும் இப்பாவை இன்று உறக்கத்தில் கிடக்கிறாள் – 'துயிலின் பரிசு' என்றார்; 'பழகப் பழக எந்தக் காரியமும் சுலபமாகி விடும். காலையில் படுக்கையிலிருந்து எழுந்து கொள்வதைத் தவிர' என்ற 'டேவ் ஈன்ட் மேன்' என்ற ஆங்கிலேய அறிஞர் கூற்று இங்கு நினைக்கத் தகுவது.

8. உறக்க நாயகி

'கோழி சிலம்ப, சிலம்பும் குருகு எங்கும்;
ஏழில் இயம்ப, இயம்பும் வெண் சங்கு எங்கும்;
கேழ் இல் பரஞ்சோதி, கேழ் இல் பரங்கருணை,
கேழ் இல் விழுப் பொருள்கள் பாடினோம்; கேட்டிலையோ?
வாழி! ஈது என்ன உறக்கமோ? வாய் திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆம் ஆறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழை பங்காளனையே பாடு!' - ஏல் ஓர் எம்பாவாய்! (8)

உதய காலத்தின் முன் அறிவிப்பு வருகிறது. பொழுது விடிவதற்குச் சற்றே நேரம் உள்ளது. இன்னும் எழுப்பப்பட வேண்டியவள் ஒருத்தி தான். அவளை எழுப்பி அழைத்துக் கொண்டால். நீராட இறைவனைப் பரவச் செல்லலாம்; கூட்டமான பெண்கள் இவள் வீட்டை நெருங்குகிறபோதே கோழி கூவுகிறது. உடனே மற்றப் பறவைகள் எல்லாம் விழித்து எழுந்து ஒலிக்கின்றன.

'கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்'

சிலம்புதல் – ஒலித்தல். குருகு – பறவைகளுக்குப் பொதுப் பெயர். ஒலிக்குச் சிலம்புதல் எவ்வளவு அருமையான சொல். பல கோழிகள், பலபறவைகள் ஒன்று சேர்ந்து ஒலிக்கின்றன; கலகல வென்ற இயற்கை மகளிர் காற்சிலம்பொலிபோல இந்த மதுரநாதம் வீதியெல்லாம் நிறைகிறது.

இயற்கை தன் பங்கை நிறைவேற்றுகிற போது செயற்கை சும்மாயிருக்குமோ? திருக்கோயில்களில் அதிகாலைப் பூசைக்கு ஆயத்தம் ஆகிறது. சங்குகளை எடுத்து முழக்குகிறார்கள். உடனே அற்புதமான ஏழிசைப் பிரவாகத்தை உண்டாக்குகிற நாதஸ்வரம் வாசிக்கப்படுகிறது.

சங்கும் நாதசுரமும் உண்டாக்கும் ஒலி வெறும் ஒலி அல்ல; திருக்கோயில் வழிபாட்டை அறிவித்து அழைக்கும் ஒலி. அங்கே 'சிலம்ப' என்றவர் இங்கே 'இயம்ப' என்றார் 'சிலம்ப' வெறும்ஒலி. இயம்புதல் சொல்லுதல் அல்லவா? ஒருகருத்தைச் சொல்கிற ஒலி என்பது விளங்க இயம்பு என்றார். இடமறிந்து பொருளறிந்து சொற்களைப் பயன்படுத்திப் பயன் கொள்பவர் மணிவாசகர் அவர் வாக்கு மணிவாக்கு அல்லவா?

'ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்'

(ஏழ் – இல் – ஏழு சுரங்களுக்கும் வீடாகிய நாதசுரம்) இயற்கையும் செயற்கையும் சேர்ந்து இவ்வளவு இனிய நாதங்களை உண்டாக்கியும் உள்ளே உறங்குகிறவளை அவை ஒன்றும் செய்து விட வில்லை; வீதியிலே எழுப்ப வந்த மகளிர் தங்கள் பங்கிற்குத் தாமும் இறைவனை அருமையாகப் பாடுகிறார்கள்.

'கேழ் இல் பரஞ்சோதி கேழ் இல் பரங்கருணை

கேழ் இல் விழுப்பொருள்கள் பாடினோம் '

தனக்கோர் உவமை சொல்ல முடியாத மேலான சோதி வடிவானவன், மேலான திருவருளே யானவன், ஒப்பற்ற திருவருள் மூலமாக அந்தப் பெருமானைப் பெறுவதற்கு ஏதுவாக உள்ள சிறந்த நிலைபேறுடைய மெய்ப்பொருள்கள் இப்படிப்பட்ட எல்லாவற்றையும் பாடினோம் என்று வந்த மகளிர் ஒன்று சேர்ந்து சொல்கிறார்கள்.

இறைவனால் அருளப்பெற்ற விழுப்பொருள்களை (திருநீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து, சிவலிங்க வடிவம்) துணையாகப் பற்றி பரங்கருணையை அடைந்து அருளின் மூலமாகக் கேழ்இல் பரஞ் சோதியைப் பெற வேண்டும் என்பது சாதன முறை. சரியை, கிரியை, யோக ஞானமாகிய விழுப்பொருள்களால் அவனருளாகிய திருவருட் சத்தியைப் பெற்றால் அவனை அடைதலாகிய வீடுபேறு உளதாகும். அதையே பயனை முதலாக வைத்துப் பாடியுள்ளார்கள்.

இவ்வளவு பாடியும் உறங்குகிறவள் கேட்டாளில்லை, எழுந்து வரவும் இல்லை, 'கேட்டிலையோ' என்கிறார்கள்; நாங்கள் பாடிய பாட்டும் உன் காதில் விழ வில்லையோ? என்று கவலையோடு அவர்கள் கேட்கும்போது அவர்கள் நிலை கண்டு நமக்குக் கூட 'ஐயோ! பாவம் இவர்கள் எவ்வளவு சிரமப் படுகிறார்கள். இவள் எழுந்து வந்து விடக்கூடாதா? என்றிருக்கிறது அல்லவா!

இப்படியும் ஒரு உறக்கமா? வாழ்க இது உலகத்தில்! நாங்கள் இதுவரை கேள்விப் படாத உறக்கமாக இருக்கிறதே! இவ்வளவு பேர் கூடி இவ்வளவு முறை அழைக்கிறோம். வாய் வார்த்தை கூட இல்லையே என்பது அவர்களது ஏக்கம்.

'ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ' அருட்கடலாகிய சிவனிடத்திலே நீ வைத்திருக்கின்ற அன்பு இப்படித் தான் தூக்கமாக ஆக வேண்டுமா? நீ மகாபுத்தி உடையவளாயிற்றே. இறுதியில் எல்லாம் இந்தத் தூக்கத்தில் போய் முடிய வேண்டுமா?

'ஆழியான்' சக்கரம் ஏந்திய திருமால் என்று பொருள் கூறி திருமாலின் மேல் உனது அன்புடைமை ஆகின்றவிதம் இப்படித் தானோ. திருமால் பாற்கடலில் அறிதுயில் செய்கின்றவன் ஆதலின் நீயும் அவனைப் போலவே தூங்கி அவன்மாட்டுள்ள அன்புடைமையைக் காட்டுகின்றாயோ? என்று பொருள் கொள்ளவும் கூடும்.

சிவனை வழிபடுவோர் சிவனடியார்களிடத்திலும் அன்பு செலுத்தல் இயல்பாதலின் சிவனை விடையாக நின்று தாங்கிய அவன் முதலடியாராகிய திருமாலிடத்தில் நீ செலுத்திய அன்பு அப்பெருமானது தூக்கத்தைப் பின்பற்றுவதில் போய் முடிந்து விட்டதே. கண்ணையே தாமரையாகப் பறித்து சிவனது திருவடியில் இட்டு வழிபட்டானே அந்தப் பக்திவழிபாட்டைப் பின்பற்ற உனக்குத் தோன்றவில்லையா? என்கிறார்கள்.

எதனாலோ இவள் இன்று இவ்வாறு உறங்குகிறாள் என்று இரக்கப்பட்டு, 'போனது போகட்டும்; எங்களோடு சேர்ந்து இறைவனைப் பாடு என்று மேலும் கெஞ்சுகிறார்கள்.

உலக முடிவிலும் நிலைபெற்றுள்ள தனி முதலாகிய பெருமானை, உமையை ஒருபாகத்திலே எப்பொழுதும் பிரியாது உறையச் செய்து கொண்டிருக்கிறவனைப் பாடுவாயாக என்றார்கள்.

எல்லாத் தேவர்களும் அழிந்து போகிற சர்வ சங்கார காலத்தி லேயும் எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு தான் ஒருவனேயாக இருக்கின்றவன் ஆதலின் 'ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன்' என்றது சிவனை வாழ்த்தியதாயிற்று.

தனிமுதலாக உள்ளவன் உயிர்கள் மாட்டுவைத்த கருணை யாலே உமையொரு பாகனாக வருகின்றான். உலக உற்பத்திக்கு, உயிர்களுக்கு நலம் செய்ய இறைவன் கொண்ட திருவுருவம் 'அர்த்த நாரீஸ்வர' வடிவம் ஆதலின் 'ஏழைபங்காளனையே பாடு' என்று கூறி முடிக்கிறார்கள் – ஏழை – பெண் 'பெண் உரு ஒரு திறன் ஆகின்று' என்பது புறநானூறு.

இவ்வாறு உலகில் பிறர் மாட்டுக் காணாத உறக்கத்தையும் கண்டு அதில் ஆழ்ந்து கிடக்கிறவளையும் எழுப்பி அழைத்துக் கொண்டு நீராடச் செல்கிறார்கள்.

3

௯. நோன்பின் குறிக்கோள்

'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன் அடியார் தாள் பணிவோம்; அங்கு அவர்க்கே பாங்கு ஆவோம்;
அன்னவரே எம் கணவர் ஆவார்; அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்;
இன்ன வகையே எமக்கு எம் கோன் நல்குதியேல்,
என்ன குறையும் இலோம்' – ஏல் ஓர் எம்பாவாய்! (௯)

திருவெம்பாவைக்குத் தத்துவப்பொருள் கூறுவோர் கூறு மாற்றை இங்கு காண்போம். அனந்த தேவராலே அசுத்தமாயை காரியப்பட்டு பிரபஞ்ச உற்பத்தி நடக்க வேண்டும். அவ்வாறு காரியப் படுதற்கு நவசத்திகள் ஒன்றை ஒன்று ஊக்க வேண்டும்.

இதுவரை உள்ள எட்டு திருப்பாடல்களால் எண் மகளிர் எழுப்பப் பட்டனர். முதலில் எழுப்பியவள் ஒருத்தி. ஆக ஒன்பதின்மர் ஆவர். இவர்களே நவசத்திகள் எனப்படுவர். அவருள் முதலாமவள் ஆகிய மனோன்மணி சர்வபூத தமனியை ஊக்க, அவள் பலப்பிரதமனியைப் பிரேரிக்க, அவள் பலவிகரணியை எழுப்ப, அவள் கலவிகரணியைத் தூண்ட, அவள் காளியை ஊக்க, அவள் இரௌத்திரி யை எழுப்ப, அவள் சேட்டையைப் பிரேரிக்க, அவள் வாமையை ஊக்க இச்சத்திகளின் எழுச்சியால் அனந்த தேவராலே அசுத்த மாயை காரியப்பட்டு, காலம், நியதி, கலை, வித்தை அராகம், புருடன், மூலப் பிரகிருதி ஆகிய வித்தியா தத்துவங்கள் தோன்றுகின்றன.. பிரகிருதி யாகிய குணதத்துவத்திலிருந்து பிருதிவி ஈறான 24 ஆன்மதத்துவங்கள் உண்டாகி உலகப் படைப்பு நிறைவேறுகிறது. இதனையே முதல் எட்டுப் பாடல்களின் கருத்தாகக் கூறுவர். இது குறித்தே சத்தியை வியந்தது என்னும் தலைப்பு அமைந்தது என்பதும்அவர் கருத்து.

இனி, பண்டிதமணி கதிர்மணி விளக்கத்தில் கூறுவது வருமாறு: தமிழ் நாட்டில் பெண்களுக்கு 5 முதல் 7 ஆண்டு வரை பேதைப் பருவம், 8 முதல் 11 ஆண்டு வரை பெதும்பைப் பருவம், 12 ஆண்டு முதல் மங்கைப் பருவம். ஐந்து முதல் பன்னிரண்டாம் வயது வரை கன்னிப் பருவம். இக்கன்னிப்பருவத்துக்குரிய எட்டாண்டைச்

சேர்ந்த எண்வகை மகளிரே எழுப்பப்பட்டவர்கள். முதலில் எழுப்பியவள் பன்னிரண்டாண்டு நிரம்பிய மூத்த வயதினள். ஆகவே ஒன்று முதல் எட்டுத் திருப்பாட்டுகளினும் ஒவ்வொரு பருவத்துக்குரிய பெண்களே எழுப்பப்பட்டனர். ஆண்டில் இளைய பெண்கள் சிறுமிகள் ஆதலின் நாழிகை ஆக ஆக எழுப்பப் பெற்றனர். அதாவது 8ம் பாடலில் எழுப்பப்பெற்றவள் ஐந்தாண்டே ஆன கன்னிச் சிறுமி என இவ்வாறு அறிக. இவர்கள் சிறுமியராதலின் பாதுகாப்புக் கருதி தாய்மாரும் உடன் செல்வர். ஆதலின் 'தாயருகே நின்று தவத் தை நீர் ஆடல்' என்று அம்பாவாடல் என இந்த நோன்பைப் பரிபாடல் கூறுவதும் அறிக என்பது அவர் கருத்து.

எப்படியிருப்பினும் கன்னிப்பெண்கள் மார்கழி நோன்பிற்கு ஒருவர் ஒருவரை எழுப்பி அனைவரும் கூடிச் செல்கிறார்கள் என்று சொல்வதே நேரிதும் எளிதும் ஆகும்.

எழுப்பினவர்களும் எழுப்பப்பட்டவர்களும் ஆகிய மகளிர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்தார்கள். இறைவனை நோக்கித் தங்கள் பாவை நோன்பின் நோக்கத்தைப் புலப்படுத்துகிறார்கள்.

பாவை நோன்பின் நோக்கம் இரண்டு. ஒன்று பொது, மற்றொன்று சிறப்பு. நாடு செழிக்க மழை பொழிய வேண்டும் என்பது பொதுவான நோக்கம். அந்த நோக்கம் 16ஆம் பாட்டில் வருகிறது. தங்களுக்குச் சிவபக்தி உள்ள நல்ல கணவர் வாய்க்க வேண்டும் என்பது அவர்களது சிறப்பு நோக்கம். இதுவே திருவெம்பாவையின் உயிர் நிலைப்பகுதி என்றும் சொல்லலாம். அந்தச் சிறப்பு நோக்கத்தை அனைவரும் சேர்ந்து இங்கே சொல்கிறார்கள்.

கணவர் என்ற வார்த்தை மிகச் சிறந்த பொருள் பொதிந்த அரிய தமிழ்ச் சொல். நாயகன், புருஷன், பதி என்றெல்லாம் சொன்னாலும் கணவர் என்ற சொல்லுக்குரிய பொருட் சிறப்பு அவைகளுக்கில்லை. கண் – அவர் – கணவர். ஒரு பெண்ணுக்குக் கண்ணாய் இருக்கும் அவர் தான் கணவர். கண் காட்டினால்தான் காட்டுவதைத்தான் நாம் பார்க்க முடியும் – கண் மூலமாகத்தான் நாம் உலகைப் பார்க்கிறோம் – பழங் காலத்தில் பருவப் பெண்களை இல்லம் தாண்டி வெளியில் செல்ல அனுமதிக்க மாட்டார்கள். எல்லாம் திருமணமானபின் அவள் புருஷன் அழைத்துக் கொண்டு போய்க் காட்டுவான், அப்பொழுது பார்த்துக் கொள்ளட்டும் என்று சொல்லி வீட்டிலேயே இருத்திவிடுவார்கள். கணவன் மூலமாக மனைவி உலகத்தைப் பார்க்கிறாள். உளத்தை வெளியிடுவது முகம். முகத்திலும் கண் உள்ளக் குறிப்பினை உணர்த்துவது. 'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்,'

'நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் காணுங்கால் கண் அல்லது இல்லை பிற' என்ற வள்ளுவர் வாக்குகளை இங்கு பொருத்தி உணர்க. பெண் தனது உணர்ச்சிகளை உள்ளத்தைக் கணவன் மூலமாக வெளியிடுவாளே அன்றித்தானே வெளியிட மாட்டாள். இக்கருத்துகளை எல்லாம் உள்ளடக்கியது கணவர் என்ற சொல்.

நல்ல கணவர் வாய்க்க வேண்டும் என்று நோன்பு கருதிய இப்பெண்கள் அந்த நல்ல கணவரைத் தேர்ந்தெடுத்து இன்னார் தான் என்று சுட்டியும் சொல்லிவிடுகிறார்கள். அத்தகைய நல்ல கணவரைப் பெற ஆண்டவனை நோக்கி முறையிடுகிற விண்ணப்பத்தை இனிப் பார்க்கலாம்.

முற்பட்ட பழைய பொருள்களுக்கெல்லாம் பழைமை யானவன் இறைவன். இனி எதிர்காலத்தில் புதுமையாக ஒன்று தோன்றுமாயின் அதைவிடப் புதுமையானவனாக இருப்பவன் இறைவன்.

இறைவன் காலாதீதன். காலமே இறைவனால் உண்டாக்கப் பெற்றது. இப்படிக் காலங்களுக்கு மிக மிக அப்பாற் பட்டவனாக உள்ள அவனை முன், பின் என்று காலவார்த்தைகளால் கணித்தல் இயலாது. ஆனால் சொல்வார்தம் அறிவிற் கெட்டியது காலம் ஆதலின் இங்கு 'புதியரிற் புதியன்; மூதக்கார்க்கு மூதக்கவன்' என்று கந்த புராணம் கூறுவது போல மகளிர் தம் அறிவிற் கெட்டிய அளவையால் குறித்தனர்.

இறைவனுக்குப் புராணன் என்று ஒரு பெயர் உண்டு, புராணன் என்ற சொல் புராதனன் – நவன் என்ற சொல் இரண்டும் சேர்ந்தது என்பது என் குருநாதர் கி.வா.ஜ. அவர்கள் கருத்து. புராதனன் – பழைமையானவன், நவன் – புதியன்; சூரியனைப் போலக் காலத்தால் பழமையும் பயன்படுமாற்றால் புதுமையும் உடையவன் இறைவன். அநாதி அவனுக்கு முன் எதுவும் இல்லை; எல்லாப் பொருளும் அவனால் உண்டாக்கப்பட்டவையே, நாளைக்குப் பிறந்து வழிபட்டு வரப் போகிற ஒரு நல்லுயிரும் வீடு பேற்றிலே அவனை நுகர்ந்து அனுபவிக்கும். உயிர்களின் அநுபவத்திற்குப் புத்தம் புதியனாக இருக்கிறவன் அவன். இத்தகைய பெருமானைப் பெற்ற பேறு பெரும் பேறு. அப்பெரும் பேற்றினைப் பெற்ற படியால். நாங்கள் வெறும் அடியாராக இல்லாமல் சிறப்பில் மிகுந்த சீர் அடியாராக ஆகி விட்டோம் என்று பெண்கள் சொல்கிறார்கள்.

'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம் '

என்று எம்பெருமானை அழைத்துத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட அப்பெண்கள் தங்கள் விருப்பத்தை வெளியிடுகிறார்கள்.

எம்பெருமானே!

'எங்களுடைய ஆசை என்ன தெரியுமா? உன் அடியார் களுடைய திருவடிகளை வணங்குவோம்; அவர்களுக்குப் பாங்காக இதமாக நடந்து கொள்வோம்; அவர்களே எம்முடைய கணவராக ஆவார்; அவர்கள் மகிழ்ச்சியுடன் என்ன கட்டளை இடுகிறார்களோ அதையே அடிமைத் திறமாக எண்ணித் தொண்டு செய்வோம்; இந்தப் பேற்றை எமக்கு நீ அருள வேண்டும். அப்படி இப்பேற்றை நல்கினால் அதன்பிறகு வேறு எந்தக் குறையும் எங்களுக்கு இல்லை; அதுவே எல்லா நலங்களும் எங்களுக்குத்தரும் ஆதலின் வேறு எந்தப் பேறும் எங்களுக்கு வேண்டிய தில்லை' என்று தங்கள் விண்ணப்பத்தை இறைவனிடத்திலே வைத்தார்கள்.

அடியார் திருவடிகளை வணங்குதல் செயல்; அவர்க்கே பாங்காதல் – பாங்கு என்றால் இதம், அவர்களுக்கு எது இதமோ அதையே தாமும் இதமாக எண்ணுதல் என்றாகும். கருவி கரணங்கள் அனைத்தையும் அவர்களுக்கே அர்ப்பிதம் செய்து விடுதலாகும்.

தலைவர்கள் தங்கள் அடிமைகளுக்குக் கட்டளை இடும் பொழுது அதிகாரத்தினால் கட்டளை இடுவர். அப்படியில்லாமல் உள்ளம் மகிழ்ந்து கட்டளை இடுவார்களே யானால் அங்கே ஆண்டானும் அடிமையும் சங்கமம் ஆகிவிடுகிறார்கள். அப்பொழுது கூலி நோக்கிப் பணி செய்வது போய் அவர்களுக்கு அடிமையாக இருப்பதிலேயே ஒரு ஆசை உண்டாகி அதற்காகவே பணி செய்யும் தன்மை வரும். இதனையே

'உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்னகுறையும் இலோம் 'என்றார்கள்.

சிவனடியார் சிவபெருமானே ஆவர் என்னும் கருத்தால் சிவனை நாயகனாகப் பெறினும் சிவனடியாரை நாயகராகப்

பெறினும் ஒன்றே என்னும் கருத்தால் இங்ஙனம் வேண்டினர். உயிர்க்குலம் எல்லாம் தம்மைப் பெண்ணாகக் கருதி ஆன்ம நாயகனாகிய சிவபெருமானையும் அவனது சொரூபமாகிய அடியார்களையுமே நாயகராக அடைந்தால் வேறு எக்குறையும் இல்லை என்பது கருத்து.

'கருணையொடு அடிநோக்குக,
நிலையில் பொருளும் நிலையியற் பொருளும்
உலையா மரபின் உளம் கொளப் படுத்திப்
புல்லறிவு அகற்றி நல்லறிவு கொளீஇ
எம்மனோரையும் இடித்துவரை நிறுத்திச்
செம்மை செய்தருளத் திருவுருக் கொண்ட
நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க்குண்டோ பெறத்தகாதனவே' (சிதம்பர 11)

என்ற குமரகுருபரர் வாக்கை இங்கு ஒப்பிட்டுணர்க.

வழிபடும் பெண்கள் திருக்கூட்டத்தோடு சேர்ந்து நாமும் அந்த விண்ணப்பத்தைச் சொல்வோமாக.



10. ஏது அவனைப் பாடும் பரிசு

'பாதாளம் ஏழினும் கீழ் சொல்-கழிவு பாத மலர்;
போது ஆர் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே!
பேதை ஒருபால்; திருமேனி ஒன்று அல்லன்;
வேத முதல்; விண்ணோரும், மண்ணும், துதித்தாலும்,
ஓத உலவா ஒரு தோழம் தொண்டர் உளன்;
கோது இல் குலத்து, அரன்-தன் கோயில் பிணாப் பிள்ளைகாள்!
ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர்? ஆர் உற்றார்? ஆர் அயலார்?
ஏது அவனைப் பாடும் பரிசு ? ' ஏல் ஓர் எம்பாவாய்! (10)

இறைவனைப் பாடிப் பரவ வேண்டியவர்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து விட்டார்கள். அவர்களுடைய நோக்கமும் தெரிந்து விட்டது. இனிப் பாடவேண்டியது தானே! இறைவனைப் பரவ வேண்டியதுதானே! ஏன் இவர்கள் எல்லாம் சும்மா இருக்கிறார்கள்? ஒருவர் ஒருவர் முகத்தைப் பார்க்கிறார்கள். அப்படி என்ன இந்தப் பெண்களுக்குத் தயக்கம்? கொஞ்சம் அவர்கள் பக்கத்தில் சென்று பார்த்தால் தெரிகிறது.

அவர்கள் சும்மா இல்லை, தங்களுக்குள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கேள்வியும் பதிலுமாக அங்கு ஒரு நாடகமே நடக்கிறது. நாமும் அந்த நாடகத்தைப் பார்க்கலாமே.

இறைவனைப் பாடுவோம் என்கிறாள் ஒருத்தி, எப்படிப் பாடுவது என்கிறாள் மற்றொருத்தி, இறைவனுடைய திருமேனியைப் பாடலாமே. ஆகா! என்ன அற்புதமான திருவடிவம்! அந்த வடிவத்தை இன்றைக் கெல்லாம் பாடிக் கொண்டே இருக்கலாமே என்றாள் முதலாமவள்.

எங்கே அந்தத் திருவுருவத்தை அடியிலிருந்து பாடுவதா? முடியிலிருந்த பாடுவதா? இது மற்றொருத்தியின் கேள்வி.

'அடியிலிருந்தே ஆரம்பிக்கலாமே' ஒரு குரல். முதலில் இறைவன் திருவுருவத்தைப் பாடலாம் என்று சொன்னாளே, அவளே பாடட்டும் என்று மற்றவர்கள் காத்திருக்கிறார்கள்; அவளோ பாடவில்லை; வெறுமனே வாயை அசை போடுகிறாள். ஏனடீ! பாடுவதுதானே! பாடுவதா! அதுதான் தகராறு, எப்படிப்பாடுவது? அவன் திருவடியை என்ன வென்று பாடுவது ?

அவன் திருவடி சொல்லால் சொல்ல முடியாது; சொல் இறந்து நிற்கின்ற திருவடியை எப்படிச் சொல்வது? அவன் திருவடி கீழ் உள்ள பாதாள உலகம் ஏழினுக்கும் கீழ் உள்ளது; சொல் சென்று எட்ட முடியாதது 'உரைமனம் இறந்து நின்ற ஒரு சிவலிங்கம்' என்றார் சிவப் பிரகாசரும். சொல்லால் சுட்டமுடியாத அடியை நான் சொல்ல முடியுமா? என்றாள் அவள்.

'பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர் '

சொல்லால் எட்ட முடியாது. சுட்டிச் சொல்ல முடியாது. சொல்கழிந்து போகிற இடம் பாதமலர். 'சொற்கு அழிவு பாதமலர்' என்று பிரித்து சொல்லப் போகிற சொல்லே அழியும் இடம் என்றும் சொல்லலாம்.

நாங்கள் அப்போதே சொன்னோமே; வந்தாயா வழிக்கு, அடியைத் தான் பாட முடியவில்லை; முடியை யாவது பாடு என்கிறாள் முதலாமவள்.

முடியாது? முடியவே முடியாது.

'போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே '

எம்பெருமானுடைய முடி எல்லாப் பொருள்களின் முடிவாகவும் உள்ளது. பொருள் எல்லாவற்றையுமே நாம் அறியாத பொழுது அப்பொருள்கள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு முடிவற்றதாக உள்ள முடியை எப்படிப் பாடுவது? என்று சொல்கிற போதே ஒரு குறிப்பையும் சேர்த்தே சொல்லியுள்ள அழகு சிந்தனைக்கு விருந்தாகும். 'போது ஆர் புனை முடியும்' என்பதில் மலர் பொருந்திய அலங்கரிக்கப் பெற்ற அழகிய முடி என்றவள் அடியார்கள் அன்பினால் அகம் மகிழ்ந்து இடும் மலர்கள் அவன் முடிக்குமேல் உள்ளன. முடிக்கும் முடிவாக இருப்பது அன்பர்கள் இடும் மலர் என்று அவன் பெருமையை விட அடியார் பெருமை சிறந்தது என்ற குறிப்பையும் உள்ளே வைத்து விடுகிறாள். அறிவினால் அவன் முடியை ஆராய்வது முடியாது. அன்பினால் அவன் முடிக்கு மேலே மலரை இடமுடியும் என்றாள் இவள்; இப்படிச் சொல்கிற போதே, 'பாதமலர்' என்றும் 'போதார் புனைமுடி' என்றும் அடியையும் முடியையும் மலரால் இணைத்திருக்கிற அழகையும் பாருங்கள்.

அடியையும் முடியையும் பாடமுடியாமல் விட்டாலும் இடையிலே உள்ள திருவுருவத்தையாவது பாடலாமே என்றாள் ஒருத்தி.

திருவுருவமா? அதுவும் பாடமுடியாத வியப்புக்குரிய வடிவம் 'பேதை ஒருபால் திருமேனி' இடையில் உள்ள

திருவுருவத்தில் பெண் ஒரு பக்கத்தில் இருக்கிறாள். தனியாக இல்லை; திருமேனியிலேயே பாதியாக இருக்கிறாள். ஆணாக இருந்தால் ஆண் என்று பாடலாம். பெண்ணாக இருந்தால் பெண் என்று பாடலாம். ஆணும் பெண்ணும் இணைந்திருக்கிற இந்தத்திருவுருவத்தை எப்படிப் பாடுவது? திருமேனி ஒன்று அல்லன் இரண்டும் அல்லன். அவனை ஒருவன் என்று பாடுவதா? ஒருத்தி என்று பாடுவதா? இரண்டுக்கும் இசைய ஒருவர் என்று தமிழில் ஒரு சொல் இல்லாவிட்டால் உமையொருபாகனைப் பாடவே முடியாது என்றார் குமர குருபரரும்.

அவன் திருவுருவந்தான் பாடமுடியவில்லை; அவன் பெருமையைப் பாடலாமே என்றாள் ஒருத்தி.

அவன் 'வேதமுதல்' வேதம் என்றால் வித்தாய் இருப்பது எனப் பொருள். வேதம் நம்மால் முழுமையாக உணர இயலாதது. எல்லா வற்றிற்கும் வித்தாக இருப்பதாகிய வேதத்துக்கும் மூலமாக வித்தாக இருப்பவன் பெருமான். அவன் பெருமையை வேதமே சொல்லி முடியாமல் ஓலம் இடுகிறது.

'வேதங்கள் ஐயா! என, ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்' அவன் அல்லனோ! அவன் பெருமையை நம்மால் எப்படிச் சொல்ல முடியும்?

இன்று வரை விண்ணவரும் மண்ணவரும் சொல்லிச் சொல்லி முடியவில்லை.

'விண்ணோரும் மண்ணும் துதித்தாலும் ஓதஉலவான்' சொல்லச் சொல்ல அவன் பெருமை வற்றாப் பெருங்கடல் போல் வளர்கிறதே அன்றி குறையவில்லை. சொல்லி முடித்து விட்டோம் என்று யாராலும் சொல்ல முடியாது.

அவனைத் தான் சொல்ல முடியாது; அவன் அடியார்களைப் பற்றிச் சொல்லலாமே என்றாள் ஒருத்தி. அதுவும் முடியாது என்றாள் இவள்.

'ஒரு தோழம் தொண்டர் உளன் '

ஒரு கூட்டமான தொண்டர்களை உடையவன் அவன். தோழம் – கூட்டம், ஒருவரா? இருவரா? திரள் திரளான அடியார்களை உடையவன் அதலினால் அவன் தொண்டர்களைப் பற்றியும் சொல்லி முடிவுகட்ட இயலாது என்றாள்.

அவனையும் அவன் அடியார்களையும் பற்றிப் பாடமுடியா விட்டாலும் அவனுடைய ஊரையும் பேரையும் பற்றியாவது சொல்லி முடிக்கலாமே என்றாள் ஒருத்தி.

அவனுடைய ஊர் எது? இது தன்னுடைய ஊர் என்று வரையறுத்து ஒரு ஊரை உடையவனாக இருந்தால் சொல்லலாம். அப்படியொரு வரையறை இல்லை பேரும் அப்படித்தான். 108 என்று ஒருவர் சொன்னால் 1008 என்று இன்னொருவர்சொல்வார் ...... கோடி என்று அவனுடைய பெயர்களும் பல.

'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லான் ' என்று திருத்தெள்ளேணத்தில் மாணிக்க வாசகர் குறிப்பிடுவார்.

அவனுக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், அவனுடைய உறவினர்கள், அயலார்கள் ஆகியவர்களைப் பற்றி யாவது சொல்லலாமே என்றால்,

அவனுக்கு, 'ஆர் உற்றார் ஆர் அயலார்.' அவனே வேண்டுதல் வேண்டாமை இலான் ஆதலின் அவனை நெருங்கி அன்பினால் நினைந்தால் எல்லாரும் உற்றார்; அவனை விலகி உலகிலே உழன்றால் எல்லாரும் அயலார். அதிலும் அவனுக்கு என்று ஒரு நியதி இல்லை.

இப்படியிருக்கும் ஒருவனைப் பற்றி எப்படிப்பாடுவது?

'ஏது அவனைப் பாடும் பரிசு ' அவனை எவ்வாறு பாடுவது? என்று முடித்தாள்.

பாடுவேன் என்று சொன்னவளே 'ஏது அவனைப் பாடும் பரிசு' என்று கைவிரித்து விட்டபொழுது மற்றவர்களால் பாடமுடியுமா?

இதிலே ஒரு வேடிக்கை என்ன வென்றால் பாடமுடியாது என்றே இறைவனைப் பாடிவிட்டார் மணிவாசகர்.

புறநானூற்றில் ஒரு பாடல் இங்கு சிந்திக்கத் தக்கது சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடவந்தார் மாறோக்கத்தது நப்பசலையார். (புறநா. 39)

சிறிது நேரம் அமைதியாய் இருந்தார் புலவர். பாடவந்தவர் பாடாமல் இருக்கிறாரே என்று அரசன் நினைத்தான், புலவரே! ஏன் என்னைப் புகழ்ந்து பாடாமல் இருக்கிறீர்கள்? என்றான். உனக்கென்று என்ன பெருமை இருக்கிறது? உன்னைப்பாட அதனால்தான் சும்மா இருந்தேன் என்றார் புலவர்.

ஏன்? என்னுடைய கொடைத்திறத்தைப் பாடலாமே என்றான் அரசன். ஒரு அற்பப் பறவையாகிய புறாவின் துன்பத்தைத் தீர்ப்பதற்காகத் தன் தசைகளை அரிந்து இட்டு தானும் துலைத்தட்டிலே ஏறிய சிபியின் பரம்பரையில் தோன்றியவன் நீ ஆதலின் கொடுத்தல் உன் புகழ் அன்று என்றார் புலவர்.

'என் வீரத்தைப் புகழ்ந்து பாடலாமே' என்றான் மன்னன், 'ஆகாயத்தில் தொங்கும் கோட்டைகளை அழித்து வென்ற தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் மரபில் தோன்றியவன் நீ ஆதலின் வீரம் உன் புகழ் அன்று' என்றார் புலவர்.

நான் முறைசெய்யும் நீதிவழங்கும் புகழைப் பாராட்டலாமே என்றான் மன்னன். 'உன்னுடைய அறங்கூறவையத்து அறம் நிலை பெற்றுள்ளது; அதனால் சிறிய குழந்தை கூட நீதி தவறாமல் முறை செய்யும் ஆதலின் முறைமை நின் புகழ் அன்று என்றார் புலவர்.

மேலே பேச வாயின்றி நின்றான் மன்னன் 'அரசே நின்பெருமை பொருந்திய வலிய தாள்களைப் பாடும் பொழுது நான் எவ்வாறு பாடுவேன் என்று முடித்தார் புலவர். முடிக்கும் பொழுது' 'பீடுகெழு நோன்தாள்' என்று முடித்ததனால் உன் பரம்பரைப் புகழ் எல்லாம் உன் புகழ் என்று சொல்லாமல் சொன்னார் எனலாம்.

சங்க இலக்கியத் தமிழை ஆய்ந்து கற்ற அனுபவத்தை மணிவாசகர் திருவெம்பாவையில் இப்பாடலில் அமைத்துக் காட்டினாரோ என்றும் கருதலாம்.

பாட முடியாது என்றே இறைவனைப் பாடிவிட்டார் மணி வாசகர்.

'கோதிலா அமுதே! உன்தன் குணப்பெருங்கடலை, நாயேன்
யாதினை என்று சொல்லிப் பாடுகேன் ' என்று சுந்தரர் பெருமான் இறைவனை நோக்கிக் கேட்டதாகச் சேக்கிழார் கூறுவர்.

'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன்' என்று காட்ட முடியாத இறைவனது அளப்பரும் தன்மையும் எல்லாமாய் அல்லவுமாய் நிற்கின்ற முதன்மையும், வரையறைக்கு உட்படாப் பெருமையும் ஆகிய இறை நலங்கள் எல்லாம் இப்பாட்டில் பொருள் பொதிந்த உரைகளாக வருகின்றன.

'கோதில் குலத்து அரன்தன் கோயில் பிணாப் பிள்ளைகாள் '

என்று, குற்றமற்ற சிறப்பினை உடைய சிவபிரானது திருக்கோயிலில் தொண்டு செய்யும் பெண் பிள்ளைகளே! என்று தன்னைப் பாடச் சொன்னவர்களை அழைத்துப் பாடமுடியாதவன் அவன் என்று பாடி முடித்தாள் எனலாம்.

'பந்தமும் வீடும் ஆய பத பதார்த்தங்கள் அல்லான்
அந்தமும் ஆதியில்லான் அளப்பிலன் ஆதலாலே
எந்தை தான் இன்னன் என்றும் இன்னது ஆம் இன்னது ஆகி
வந்திடான் என்றும் சொல்ல வழக்கொடு மாற்றம் இன்றே '

என்று சிவஞான சித்தியார் கூறும்.

'பாதமலர் ' என்றும் 'போதார் புனைமுடி' என்றும் சொல்லி இருப்பது ஒரு குறிப்பினை அடக்கி நிற்கிறது. ஒரு பொருளைக் கண்ட வர்கள் தான் உவமையோ உருவகமோ சொல்லமுடியும். சொற்கழி வாகிய திருவடி அடியார்களால் காணுதற்கு எளிதாம் தன்மை யுடையதாதலின் அடியார்கள் பாதத்தை மலராக உருவகப்படுத்தினர் என்பது உணர நின்றது.

'போதார் புனைமுடி' என்பதனால் எப்பொருளின் முடிவாக முடிந்த முடிபாக இருக்கின்ற முடிமேல் மலர் பொருந்தியுள்ளது என்பதால். அடியார்கள் இட்ட மலர் அந்த முடிக்கும் மேலாக முடிவாக உள்ளது என்பதால் அன்பினால் அவனை அளக்க முடியும் என்ற குறிப்பும் உணரக் கிடக்கிறது.

உரைமனம் இறந்து நின்றவன் ஆயினும் அவனை அன்பினால், காதலால் அடைய முடியும் என்பதை மகளிர் கூற்றாகச் சொல்லி முடிக்கிறது இப்பாடல்.

(குறிப்பு) இப்பாடலில் ஒரு தோழம் – மிக நீண்டதொரு காலம் – கூட்டம் என்று பொருள்படும்.

'உண்ணற் கரிய நஞ்சை உண்டு ஒரு தோழம் தேவர்
விண்ணிற் பொலிய அமுதளித்த விடைசேர் கொடி அண்ணல்'

என்ற சம்பந்தர் தேவாரமும்

'அமிழ்து கடைஇய இருவயின் நாணாகி
மிகாஅ இருவடம் ஆழியான் வாங்க
உகாஅ வலியின் ஒரு தோழம் காலம்
மறா அது அணிந்தோரும் தாம் '

(தொல்.செய்யுளியல் 121 பேரா. மேற்கோள்)

என்ற பகுதிகளையும் இங்கு ஒப்பிட்டு அறிக.



11. மொய் ஆர் தடம் பொய்கை

'மொய் ஆர் தடம் பொய்கை புக்கு, முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து, உன் கழல் பாடி,
ஐயா! வழி அடியோம் வாழ்ந்தோம் காண்; ஆர் அழல்போல்
செய்யா! வெள் நீறு ஆடீ! செல்வா! சிறு மருங்குல்
மை ஆர் தடம் கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகை எல்லாம், உய்ந்து ஒழிந்தோம்;
எய்யாமல் காப்பாய் எமை' – ஏல் ஓர் எம்பாவாய்! (11)

இறைவனை எவ்வாறு பாடுவது ? என்று திகைத்த மகளிர் முற்றும் பாட முடியாவிட்டாலும் தாம் அறிந்தவாறு பாடி நீராடுவது என்று தொடங்கினார்கள். இது முதல் மூன்று பாடல் மகளிரது நீராட்டம் குறித்தது.

மார்கழி மாதத்துக்கே உரிய கடும் குளிரிலே அதிகாலையிலே நீராட வந்த பெண்களுக்கு இறைவனது நெருப்புருவந்தான் நினைவுக்கு வருகிறது. அதையே முதலிற் சொல்லத் தொடங்கினார்கள்.

'ஆர் அழல் போல் செய்யா' பொருந்திய நெருப்புப் போல் சிவந்த நிறம் உடையவனே 'சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியம்மான்' என்று மணிவாசகர் பிறிதோரிடத்திலும் கூறுவர். இந்த நெருப்பு உலக நெருப்பு அன்று; உலகத்து நெருப்பு தன்பால் பட்டது எல்லாவற்றையும் எரிக்கும். அது போன்றில்லாமல் தன் முன் நில்லாததாகிய மலம் என்னும் அழுக்கினை எரிக்க வல்ல அழல் ஆதலின் 'அழல்' என்று கூறாமல் 'ஆர் அழல்' என்று கூறினர். 'பொருந்திய நெருப்புப் போலச் சிவந்தவன்' எனவே உலக நெருப்பு பொருந்தா நெருப்பு என்றாயிற்று. அது எல்லாவற்றையும் அழிப்பது. சிவன் எனும் நெருப்பு ஆணவ மலத்தை எரித்து உயிரை வாழ்விப்பது என்பது கருத்து.

அடுத்து 'வெண்ணீறாடி' என்றார்கள். வெண்மையான திருநீற்றை அணிந்தவனே! 'நீறுபூத்த நெருப்பு' என்று சொல்லுமாப் போலே உள்ளே நெருப்புருவம். அந்நெருப்பின் மேல் நீறு

படிந்திருக்குமாப் போல வெண்ணிற்றுப் பூச்சுள்ளது என்று கூறுவது எவ்வளவு பொருத்தமாக உள்ளது.

குளிரிலே முழுக வந்தவர்கள் குளிருக்கு இதமான நெருப்பை நினைத்தாற் போலவே வெண்ணீற்றையும் நினைத்தார்கள். குளித்து முழுகுவார் உடனே உடம்பெல்லாம் நீறு பூசினால் உடம்பிலே குளிர் அடங்கிச் சூடுண்டாகும் ஆதலின் இடத்துக் கேற்ப இறைவனது நலங்களில் அந்த இடத்துக்கும் சமயத்துக்கும் ஏற்ப பொருத்த மானவற்றில் ஈடுபட்டனர் என்க.

செல்வா! வீடுபேறு என்னும் அழியாச் செல்வத்தை உடையவனே! இங்கே செல்வனை ஏத்துமவர் 'செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே' என்பதை அறிந்தவர் ஆதலின் செல்வா! என்றே சிவபெருமானை அழைத்தார்கள்.

'சிறு மருங்குல் மையார் தடங்கண் மடந்தை மணவாளா' என்று அழைத்தார்கள். சிற்றிடையினையும் அகன்ற பெரிய கண்களையும் உடைய உமாதேவியின் கணவனே! என்று அழைத்தார்கள். பெண்களுக்கு மூன்று உறுப்பு பெரிதாகவும் மூன்று உறுப்பு சிறியதாகவும் அமைதல் வேண்டும் என்பது சாமுத்திரிகா லக்ஷணம் கூறும் கருத்து. இங்கே சிறியதில் ஒன்று ஆகிய இடையையும் பெரியதில் ஒன்றாகிய கண்ணையும் குறித்து ஏனையவற்றைக் குறிப்பால் உணரவைத்து இலக்கண வகையாற் சிறந்த பெண் ஒருத்தியின் நாயகனாக உள்ளவனே! என்றார்கள்.

பெண்கள் நோன்பின் சிறப்பு நோக்கம் நல்ல நாயகனைப் பெறுதல் ஆதலின் ஒருத்திக்குச் சிறந்த நாயகனாக இருக்கிறவன் தங்களுக்கும் நல்ல நாயகனைத் தருவான் என்பது அவர்கள் குறிப்பு.

இங்ஙனம் ஆண்டவனைப் பரவிய நீராடும் மகளிர் ஐயா! என இறைவனை விளித்து,

மலர் நிறைந்திருப்பதால் வண்டுகள் நிறைந்து எப்பொழுதும் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்ற இந்த அகன்ற பொய்கையிலே புகுந்து, 'முகேர்' என்ற சப்தம் உண்டாகும்படி கையால் நீரைத் தள்ளித் தள்ளி உள்ளே சென்று உன்னுடைய திருவடிகளைப் பாடி, உனக்கு வழிவழி அடிமையாக இருக்கின்ற நாங்கள் நல்ல பெருவாழ்வு பெற்றோம்.

'எம்பெருமானாகிய நீ உயிர்க்குலங்களாகிய எம்மை வாழ்விக்கக் கருதிச் செய்தருளுகின்ற பல வேறு வகையான உனது திருவிளையாடல்களினால் உன்னைப் பெறுகின்றவர் பெறும் பேறுகள் எல்லாவற்றாலும் நாங்கள் பிழைத்தோம். இனியாம்

பிறவித் துன்பத்தில் அகப்பட்டு இளைக்காதபடி எம்மைக் காத்தருள்க' என்று வேண்டினர்.

இறைவன் உயிர்க்குலங்களை வாழ்விப்பது கருதியே செய்யனாகிறான், வெண்ணீறாடுகிறான், மடந்தை மணவாளனாகிறான். உருவம் இல்லாதவன்; ஞானம்தான் உருவாகிய நாயகன் உயிர்களை வாழ்விக்கக் கருதி அவ்வுயிர்கள் கருவி கரணங்களால் உணர்வதற்குத் தக உருவம் எடுத்துக் கொள்கிறான். அவ்வுருவங்களால் அவ்வப்போது பல விளையாடல்களையும் செய்கிறான்.

இறைவன் கொள்ளும் கோலங்களில் உயிர்கள் தம்விருப்பத்திற்கேற்ப ஓர் கோலத்தில் ஈடுபட்டு உய்தி பெறுகின்றன. இறைவன் தன்னையே ஆணும் பெண்ணுமாக இருகூறாக வகுத்துக் கொண்டு உமாதேவிக்குக் கணவனாகக் காட்சி அளிப்பதும் உயிர்களின் நலம் கருதியே இறைவன் போகியாய் இருந்தால் அன்றி உயிர்கள் போகம் துய்த்தல் இயலாது.

'வையம்

புணர்வுறு போகம் மூழ்கப் புருடனும் பெண்ணுமாகி

மணவினை முடித்தான்' என்ற திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதியார் கூற்றை இங்குக் காண்க.

இறைவன் யோகியாய் இருந்து உயிர்களுக்கு யோகத்தையும் போகியாய் இருந்து போகத்தையும் அருள்கிறான் என்று சிவஞான சித்தியார் கூறும்.

'கண்ணுதல் யோகிருப்பக் காமன் நின்றிட வேட்கை

மண்ணவர் நலிந்தார்'

என்பது காண்க. சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக ஒரு கணம் யோக நிலையில் இருக்க உலக உயிர்கள் அனைத்தும் பல கோடிகாலம் மன்மதன் இருக்கவும் புணர்ச்சி வேட்கை இன்றி யோக நிலையில் இருந்தன என்ற புராணச் செய்தியும் இதை வலியுறுத்துவதாம்.

இறைவன் எது செய்யினும் அது உயிர்களின் உய்தி கருதிச் செய்யும் திருவிளையாடலே அன்றி வேறல்ல. ஆண்டவன் இவ்வாறு உயிர்நலம் கருதிச் செய்யும் திருவிளையாடல்களை அவனது மெய்யன்பர்கள் பயன்கொண்டு உய்தி பெறுவார்கள் என்பதும் வன்பர்கள் கேலிபேசி வினை பெருக்கிப் பிறவிகளை வளர்த்துக் கொள்வார்கள் என்பதும் கண் கூடு, அது பற்றியே நீராடும் மகளிர்,

'உய்வார்கள் உய்யும் வகையெல்லாம்
உய்ந்தொழிந்தோம் என்றார்கள்.'

அன்பர் திருக்கூட்டத்திலே நாங்களும் சேர்ந்து விட்டபடியால் இனியும் பிறவி எடுத்து நாங்கள் இளைக்காதபடி எங்களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டி நீராடினார்கள்.

நீராடுங்காலத்து நீரில் மூழ்கும் போது 'முகேர்' என்ற ஒலி எழுதல் இயல்பு. நீரில் முழுகுவார் கையால் நீரைத் தள்ளித் தள்ளி உள்ளே செல்வர் ஆதலின்,

'முகேர் என்னக் கையால் குடைந்து குடைந்து' என்று குறிப்பிட்டார்.

மலையாளப் பகுதிகளில் மார்கழி மாதத்து இப்பாவை நோன்புக்குரிய நீராட்டத்தில் நீராடும் போது மகளிர் 'நீராடுங்கால் தண்ணீரைத் தட்டி ஒலி எழுப்புவர். இடக்கையை மூடித் தண்ணிர் மட்டத்துக்குக் கீழ் அமிழ்த்திக் கொண்டு வலது உள்ளங்கையைச் சாய்வாக அடித்து பாடுதல் முடியும் வரை செய்வர். இவ்வொலி தாள ஒத்தாக வருவது. மார்கழி மாதம் திருவாதிரை விழா இறுதி 10 நாள் மலையாளப் பெண்கள் நீராடுவதும் பாடுவதும் ஆகக் கொண்டனர்' என்று கோபால பணிக்கர் 'மலையாளமும் அதன் மக்களும்' எனத்தாம் எழுதிய நூலில் குறிப்பிடுதலை இங்கு ஒப்பிட்டறியலாம். இதுவே, மணிவாசகர் காலத்தில் தமிழ் நாட்டிலும் இருந்தது போலும்; அதனையே இவ்வாறு குறிப்பிட்டார் எனவும் பொருந்தும்.

'எச்செயலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனம் இருக்கும் மோனத்தே'

என்றபடி நீரில் முழுகும் போதும் இடையறாது இறைவன் திருவடியைப் பாடிக் கொண்டே பரமசுகமான இறை நினைவிலே மாறாது தம்மை வைத்துக் கொண்டிருக்கும் இளமகளிர் செயலை நினைத்து நாமும் அந்த இனிய நினைவிலே நம்மை இருத்துவோமாக.



12. பூத் திகழும் பொய்கை

'ஆர்த்த பிறவித் துயர் கெட, நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன்; நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீ ஆடும்
கூத்தன்; இவ்வானும், குவலயமும், எல்லோமும்,
காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி,
வார்த்தையும் பேசி, வளை சிலம்ப, வார் கலைகள்
ஆர்ப்பு அரவம் செய்ய, அணி குழல்மேல் வண்டு ஆர்ப்ப,
பூத் திகழும் பொய்கை குடைந்து, உடையான் பொன் பாதம்
ஏத்தி, இரும் சுனை நீர் ஆடு '– ஏல் ஓர் எம்பாவாய்! (12)

தாமரைப் பொய்கையிலே நீராடிய பெண்கள் தாமரைப் பொய்கைக்கு நீர் வழங்கும் நீருற்றாகிய சுனை நீரிலே திளைத்தாடுகிறார்கள். மருத நிலத்திலே கரையில்லாமல் இருப்பதைப் பொய்கை என்றும், கரை உடையதைத் தடாகம், குளம் என்றும் குறிஞ்சி நிலமாகிய மலையில் உள்ள நீர் ஊற்றைச் சுனை என்றும் குறிப்பிடுவது வழக்கம். சுனை நீர் பொங்கி மலையிலிருந்து ஓடி மருத நிலத்துப் பொய்கையில் சேரும்.

முன்பாட்டில் 'மொய் ஆர்தடம் பொய்கை' என்றார் – வண்டுகள் நெருங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் பொய்கை என்பதற்குக் காரணம் கூறுவார் போல பூத் திகழும் பொய்கை என்று இங்கே கூறினார். பூக்கள் (பூ எனப்படுவது சுட்டப்படாத போது தாமரையையே குறிக்கும்) மிக்கு விளங்குகின்ற பொய்கை யாதலின் அது 'மொய்யார் தடம் பொய்கை' ஆயிற்று. பொய்கையிலே நீராடியவர்கள் பின்னர் சுனை நீரிலே ஆடுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியாக வாராமல் இலக்கியக் கற்பனையாக வருகின்றபடியால் சுனை நீரிலே ஆடுகின்ற பெண்கள் பற்றிக் கூறுவதாகவும் கொள்ளலாம். இந்தப் பாடலிலேயே, 'பூத் திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம் ஏத்தி இருஞ்சுனை நீர் ஆடு' என்று பொய்கையும் சுனையும் சேர்ந்து வருகின்றன. ஆதலின் பொய்கைக்கு நீர் தரும் நீர் ஊற்றைச் சுனை என்றார்கள் எனலாம்.

இருவகை நீர்கள் ஆடுவது தனி இன்பம், 'தீது நீங்கக் கடல் ஆடியும், மாசு போகப் புனல் மூழ்கியும்' என்பது பட்டினப் பாலை. பாவம் போகக் கடலில் ஆடிவிட்டு, உடம்பிலே உப்புப் பிசிர் போக ஆற்று நீரிலே மூழ்கினார்கள் என்று சொல்கிறது. இப்படி இருவகை நீரிலே ஆடுவது பழக்கமாதலின் மருதமும் குறிஞ்சியும் தலை

மயங்கிய திருவண்ணாமலையில் பொய்கையும் சுனையும் ஆடினர் என்பது ஏற்புடையது ஆதல் அறிக.

நீரிலே ஆடுகின்ற பொழுதே பக்தி பரவசத்தால் இறைவன் நினைவிலே ஆடுகிறவர்கள் இவர்கள். அப்படித் தம்மை உடைய னாகிய பெருமானது பொற்பாதத்தை ஏத்துகின்ற போது அந்தப் பெருமானையே தீர்த்தமாக நினைக்கின்றார்கள். ஆண்டவனைத் 'தீர்த்தன்' என்றே அழைக்கிறார்கள். ஆண்டவனே ஓர் நீர் நிலையாக இருக்கிறான்.

உலக வாழ்க்கையில் துக்கங்கள் நேர்கிற பொழுது, துக்கம் தொலைத்து துக்க நினைவை ஒழிக்க விரும்புகிறவர்கள் நீரிலே மூழ்குதல் வழக்கம். புத்துணர்ச்சியும் புதுப்பொலிவும் தந்து கவலையை மறக்கச் செய்து களிப்பினைத் தருவது நீராடல் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

'ஊரெல்லாம் கூடி ஒக்க ஒலித்திட்டுப்
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு'

எரித்தவர் அதிலிருந்து நிவர்த்தி பெறுவதை,

'நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே' என்று திருமூலர் சொல்வதையும் இங்கு நினைக்கலாம்.

பிறவி என்னும் வெந்துயரத்திலிருந்து விடுபட எண்ணுகிற வர்கள் அன்பினால் ஆரவாரித்து ஆண்டவனாகிய தீர்த்தத்திலே ஆடுவார்கள் ஆதலின் அவனே தீர்த்தமாக இருக்கின்றவன் ஆவான்.

அப்பரடிகள் திருவாலங்காட்டுத் திருத்தாண்டகத்தில் (3.78.1) 'நீர் வளி தீ ஆகாசம் ஆனார் தாமே' என்று சொல்லி, முடிக்கும் போது.

'சென்று ஆடு தீர்த்தங்கள் ஆனார் தாமே
திருவாலங்காடுறையும் செல்வர்தாமே'

என்று அருளியதை நோக்கி, இறைவனே தீர்த்தமாக விளங்குகிறான் என்பது நிசதமாகும் என்பதனால்,

'ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன்'

என்று நீராடும் மகளிர் இறைவனைத் 'தீர்த்தன்' என்று குறிப்பித்தது பொருந்து மன்றோ?

'ஆர்த்த பிறவி' – நம்மைக் கட்டியிருக்கிற பிறவி. 'தானே காரணமாகவும், காரியமாகவும் உள்ள எப்பொருளும் எப்பொழுதும் அழியாமல் இருந்து கொண்டே இருக்கும். தொடர்ச்சியாக வரும் பிறவியை ஆர்த்த பிறவி என்றார். நம்மை இறுகக் கட்டி வைத்திருக்கிற பிறவியிலிருந்து விடுபட ஆண்டவனாகிய தீர்த்தத்திலே ஆடவேண்டும் என்கிறார்கள்.

'இருவினைப் பாசம் மும்மலக்கல் ஆர்த்திட
வருபவக் கடல்'

என்று சேக்கிழார் இருவினையாகிய கயிற்றால் மும்மலமாகிய கல்லில் கட்டப்பட்டுள்ளது என்று இதை இன்னும் விரிவாகச் சொன்னார்.

இனி, ஆர்த்த பிறவி என்பதற்கு நுகர்விக்கும் பிறவி என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். வினைகளால் வரும் இன்ப துன்பங்களைப் பிறவி கொடுத்து இறைவன் நுகர்விக்கிறான் ஆதலின் நுகர்வித்த பிறவி எனலாம்.

திருமுருகாற்றுப் படையில்,

'நசையினர்க்கு ஆர்த்தும் இசை பேராள'

என்ற இடத்து. ஆர்த்தும் என்பதற்கு நச்சினார்க்கினியர் பரிமேலழகர் இருவரும் 'நுகர்விக்கும்' என்று பொருள் உரைத்ததைப் பொருத்திக் காண்க.

வினைகளை உயிர்கள் நுகர்வித்துக் கழிக்க வேண்டியே இறைவன் பிறவிகளைத் தருகின்றான் என்பது சாத்திரமாகலின் அவ்வகையிலும் ஆர்த்த பிறவி என்பது பொருந்தும்.

இருஞ்சுனை நீரிலே ஆடுகிற பெண்கள் ஆண்டவனையே தாம் ஆடும் நீராகப் பார்க்கின்ற உயர் நிலைக்குச் சென்றார்கள் என்பதை முதலடியிலேயே பார்க்கிறோம்.

'உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான்'

என்று காணும் நம்மாழ்வாரது நினைப்பில் திருமால் பருகும் நீராக உள்ளமை அறிந்து இன்புறலாம். அப்பரடிகளும் நம்மாழ்வாரும் கொண்ட மனப் பக்குவத்தை ஆடும் நீரைக் கண்டு ஆண்டவனையே அத்தீர்த்தமாகப் பாவிக்கும் இந்தப் பெண்களிடமும் பார்க்க முடிகிறது.

இந்த மகளிர் ஆண்டவனாகிய தீர்த்தத்திலே ஆடுகிறார்கள். அவனோ தில்லைச் சிற்றம் பலத்திலே தீயாடுகிற கூத்தனாகிறான். 'சுடலையாடி' என்பது அவனுக்கு ஒரு பெயர். தீயைக் கையிலே ஏந்திக் கொண்டு நடனம் ஆடுகிற படியால் 'அனலாடி' என்று நடராசப் பெருமானைச் சொல்வர். 'அனலோடு ஆடி' என்பது பொருள். விண்ணையும் மண்ணையும் நம் எல்லோரையும் எல்லாவற்றையும் படைத்தும் காத்தும் மறைத்தும் விளையாடுகின்றவன் அவன்.

நீரிலே முழுகுவார் நீரின் புறத்தே தோன்றியும், நீரின் மேல் நின்றும், நீருக்குள்ளே மறைந்தும் வருவாராதலின் அவ்வியல்புகளால் உந்தப் பெற்ற நீராடும் இளமகளிரும் இறைவன் செயல்களில் 'காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடுகிற'

செயலைக் குறிப்பிட்டார்கள் என்பது இந்த இடத்துக்குப் பொருத்த மல்லவா?

தீர்த்தன், கூத்தன், விளையாடி ஆகிய பெருமானைப் பற்றிய வார்த்தையையே பேசி ஆடுவோம் என்றார்கள். 'விளையாடி' என்பது எச்சமாக இல்லாமல் ஒரு பெயராக நின்றது இங்கு உணரத் தக்கது.

சிவ சிந்தனையோடு இந்த பெண்கள் அமைதியாக நீரில் ஆடுகிறார்களா என்றால் அப்படி இல்லை; பெண்கள் இரண்டு பேர் சேர்ந்து விட்டால் அங்கே சத்தம் இல்லாமல் இருக்க முடியுமா? ஆனால் இவர்கள் ஊர் வம்பு, உலக வம்பு பேச வில்லை. சிவபெருமானது திருப்புகழையே சொல்லி, வளைகள் கலகல என, இடையிலே அணிந்துள்ள மேகலாபரணங்கள் ஆரவாரம் செய்ய கூந்தலிலே உள்ள மலர்களில் தேன் உண்ண வந்த வண்டுகள் ஒலிக்க, பூத்திகழும் பொய்கையிலே குளித்து முழுகி, பின்னர் பொய்கைக்கு நீர்தரும் ஊற்றுச் சுனையிலே உடையான் பொற்பாதம் ஏத்தி நீராடினார்கள். நல்தில்லை – ஞான மயமான தில்லை என்றாகும். தில்லைக்குச் சிதாகாசம் என்பது பெயராதலின் ஞான வெளி என்பதைக் குறிக்க 'நல்தில்லை' என்றார்.

ஆன்மாக்களுக்கு அழுக்கு நீக்கித் தூய தன்மையைத் தருதலின் இறைவன் நீராகிறான். இங்கு அழுக்கு என்பது ஆணவம் ஆகும். 'ஆணவ அழுக்கு அடைய ஆவியை விளக்கி அநுபூதி அடைவித்த தொரு பார்வைக்காரனும்' என்ற அருணகிரி நாதர் திருப்புகழை இங்கு ஓர்க.

நீரானது கொள்ளும் பாத்திரத்துக் கேற்பத் தன் வடிவத்தை ஆக்கிக் கொள்ளும் தன்மை உடையது. இறைவனும் தன்னை வழிபடுவார் விரும்புகின்ற வடிவத்திலே அவர்களுக்கு ஏற்ப வருவான்.

'எந்தை தான் இன்னன் என்றும் இன்னதாம்
இன்னதாகி வந்திடான் என்றும் சொல்ல
வழக்கொடு மாற்றம் இன்றே' என்பது சிவஞான சித்தியார்.

இறைவனையே தீர்த்தமாகக் கருதி உள்ளத்தால் அந்தத் தீர்த்தத்திலே ஆடுதலையும் உடலாலே பொய்கை குடைந்து, பின்னர் சுனைநீராடுதலையும் செய்கின்ற இளமகளிரை இந்தப் பாடல் அழகாகச் சித்தரிக்கிறது.

13. பங்கயப் பூம் புனல்

'பைம் குவளைக் கார் மலரால், செம் கமலப் பைம் போதால்,
அங்கம் குருகு இனத்தால், பின்னும் அரவத்தால்,
தம்கண் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும், எம் கோனும், போன்று, இசைந்த
பொங்கு மடுவில், புகப் பாய்ந்து, பாய்ந்து, நம்
சங்கம் சிலம்ப; சிலம்பு கலந்து ஆர்ப்ப;
கொங்கைகள் பொங்க; குடையும் புனல் பொங்க;
பங்கயப் பூம் புனல் பாய்ந்து ஆடு' – ஏல் ஓர் எம்பாவாய் ! (13)

தாம் ஆடும் பொய்கைச் சுனைநீர் போலவே எம்பெருமானையும் தீர்த்தமாக நினைத்து அப்பெருமானது புகழ் நீரிலும் திளைத்து விளையாடிய இளமகளிரைச் சென்ற பாடலின் பார்த்தோம் – இங்கே ஒரு மடுவிலே புகுந்து நீராடுகிறார்கள். ஆற்றோரத்தில் பள்ளம் உண்டாகி அங்கே நீர் நிறைந்து இருக்கும்; ஆற்றின் நீரோட்டத்துக் கேற்ப நீர் வருவதும் போவதும் செய்யும். இவ்வாறு வந்து போகும் நீரே 'புனல்' எனப்பெறும். ஆற்றோரம் ஆதலின் அங்கே சேறும் தாமரையும் கூட இருக்க வாய்ப்புண்டு. அதையே இப்பாடலில் 'பொங்கும் மடு' என்றும், 'பங்கயப்பூம்புனல்' என்றும் இரண்டு விதமாகச் சொல்லியுள்ளார். புதிய நீர் ஆதலின் பூம்புனல் எனப்பெற்றது. நீர்வரத்துக் கேற்ப மேல் ஏறுதலும் குறைதலும் நிகழ்தலின் பொங்கும் மடு எனப் பெற்றது.

நீர் பொங்கிப் பெருகுகின்ற மடுவைப் பார்த்த உடனே அது இவர்களுக்கு உமையொருபாகனாகிய எம்பெருமானைப் போலவே காட்சியளிக்கிற தாம். ஆடும் இளமகளிர் சிந்தையெல்லாம் சிவமாக உள்ளதாதலின் அவர்கள் காணும் காட்சி யெல்லாம் சிவமாகவே இருப்பதில் வியப்பு இல்லை.

உலகக் காமத்தில் அன்புடையார்க்கு 'நோக்குவ எல்லாம் அவையே போறல்' என்று ஒரு மெய்ப்பாடு நிகழும் என்று அகப் பொருள் இலக்கணம் கூறும். இங்குச் சிவகாமத்திலும் நோக்குவ எல்லாம் சிவமயமாகத் தோன்றுவதில் வியப்பில்லை.

'பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற
நிறைகின்ற பரிபூரணானந்த '

மல்லவா அவன். உள்ளே உறைகின்ற இறைவனைப் புறத்தோற்றத் திலும் காண்கிறார்கள் மகளிர். பொங்கும் மடுவின் அருகில் வந்து

விட்டார்கள். எங்கு பார்த்தாலும் பச்சைக் கம்பளம் விரித்தாற் போலப் பசுமையான கரிய குவளை மலர்கள் மடுவெல்லாம் நிரம்பிக் கிடக்கின்றன. ஒரு பக்கம் செந்தாமரை மலர்கள் காடுபோலச் செழித்துச் செக்கச் செவேல் என்று காட்சி அளிக்கின்றன.

அம்மட்டோ! அங்கங்கே அழகிய நீரில் வாழும் குருகினங்கள் அதாவது வெண்மையான பறவைக் கூட்டங்கள் திரளாக வந்து அமர்ந்து ஒரே வெண்மை யொளியை எங்கும் பரப்புகின்றன. மாறி மாறி ஒலிக்கின்ற பேரொலி (அரவம்) இடையறாது எங்கும் உள்ளது. அங்கங்கே தங்கள் அழுக்கைப் போக்கிக் கொள்ள விரும்புகிறவர்கள் வந்து நீராடுகிறார்கள் – இப்படிப்பட்ட அரிய காட்சியை வழங்குகின்ற மடுவில் நீராடவந்த பெண்கள் அந்த காட்சியைக் கண்ட அளவில் தங்களை மறந்து தடம்மாறிப் போனார்கள். எப்பொழுதும் இடையறாது தங்கள் தியான பாவனையிலே நிலைபெற்றிருக்கும் அம்மையப்பராகிய சிவபெருமானது திருவுருவத்தையே அங்கே கண்டார்கள். 'சந்ததம் யாதொன்று பாவிக்கின் அதுஅதுவாய்த் தோன்றும்' என்றவாறே அவர்கள் உள்ளத்துள்ள பாவனையையே மடுவிலும் வைத்துக் கண்டார்கள். தனித்தனியாகச் சிவனும் உமையும் போலவும் அந்த மடு அவர்களுக்குத் தோன்றியது. உமை ஒருபாகனாக இடப்பாகம் உமையும் வலப்பாகம் சிவனும் ஆகக் காட்சியளிக்கும் அர்த்தநாரீஸ்வர மூர்த்தத்தையும் அது அவர்களுக்குக் காட்டியது என்றும் சொல்லலாம்.

நீலமேனி வாலிழையை யல்லவா சிவன் தன் ஒரு பாகத்தில் உடையவனாய் இருக்கிறான். 'பைங்குவளைக் கார் மலர்கள்' அந்தப் பெருமாட்டியின் திருமேனி நிறத்தைக் காட்டுகின்றன. இந்தப் புறத்திலே உள்ள செந்தாமரை மலர்களின் திரட்சி 'சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியம்மானை' நினைப்பூட்டுகின்றன. 'அவன் செந்தாமரைக் காடுஅனைய மேனித் தனிச்சுடர்' என்று மணிவாசகரால் பாராட்டப் படுபவன் ஆயிற்றே.

அங்கம் குருகினத்தால் – அங்கத்திலே அதாவது உடம்பிலே உள்ள கைகளில் வளையல் உண்மையால் – குருகினம் – வளையல் – பறவைக் கூட்டம் என இருபொருள் படும். 'பின்னும் அரவத்தால்' – பின்னிக்கிடக்கும் பாம்புகள் என்று சிவனைச் சுட்டிடும் – அரவம் – பாம்பு – ஒலி என்றும் பொருள்படும் – இப்படிப்பட்ட மாறி மாறி வரும் இருவகைக் காட்சியும் அம்மையப்பர் தோற்றத்தை நினைவூட்டியது எனலாம்.

இனி சிவபெருமானைப் போல மடு உள்ளது என்னும் போது – பைங்குவளைக்கார்மலர் – சிவபெருமானது நீல கண்டத்தைக் காட்டும். செங்கமலப்பைம் போது சிவனது திருமேனிச் சிவப்பைக்

காட்டி நிற்கும். – அங்கம் குருகு இனத்தால் – வெள்ளிய பறவைகளின் திரள் அவன் மேனியில் அணிந்துள்ள திருநீற்றின் ஒளியாகும் – குருகு பறவை என்று கொண்டு சிவபெருமான் அணிந்துள்ள கொக்கிறகைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். குரண்டாசுரனைக் (கொக்கு வடிவமானவன்) கொன்று அதன் இறகைத் தலையில் அணிந்தவன் சிவன்.

'பின்னும் அரவம்' சிவபெருமான் உடம்பெல்லாம் அணிந்துள்ள பாம்புகள்.

தங்கள் ஆணவம்,கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் நீக்கிக் கொள்பவர்கள் சிவனை வந்து அடைகிறார்கள் என்பது உமாதேவிக்கும் பொது –

இனி மடு உமாதேவியாகக் காட்சியளித்தவாறு காண்போம் – கருங்குவளை மலர்கள் பிராட்டியின் கரிய திருமேனிக் காட்சியை நல்கும் – செங்கமலப் பைம்போது அம்மையின் திருமுக மண்டலத்தைக் காட்டும் – அங்கம் குருகினம் பிராட்டி கையில் அணிந்துள்ள வளையல்கள். பின்னும் அரவம் – பிராட்டியின் பின்னழகாகிய அவயவசோபை பாம்பைப் போல் என்றதாம்.

மடுவில் இயல்பாக அமைந்த தன்மைகளை இறைவனும் இறைவியுமாக மகளிர் காண்கிறார்கள். தாம் குளிக்கின்ற நீர்த்தடத்தையே தம்முடைய வழிபாட்டுக்குரிய மூல மூர்த்தியாகப் பாவித்துக் கொண்டு எங்கள் பிரானும் எங்கள் பிராட்டியும் போன்றிசைந்துள்ள பொங்கும் மடுவில் குடைந்திடுவோம் என்கிறார்கள். நினைவாலும் இறைவனை நீள அகலாத நெஞ்சு வாய்க்கப் பெற்ற அன்பர்கள் அவர்கள்.

அவர்கள் நீராடும் காட்சிதான் என்ன அழகு! அதை அப்படியே கவிதை சித்தரிக்கின்றது.

குளத்தில் தாவிப் பாய்ந்து முழுகிய பின் தலையை நீர் மட்டத்திற்கு மேலே கொண்டு வருகிறார்கள். அவர்களது மார்பகங்கள் நீர்க்கு மேலே எழுந்து, உள்ளே சென்று விம்மி விம்மித் தணிகின்றன. ஆடு கின்ற தண்ணீர் பொங்கி மேலே எழுகிறது. அவர்கள் மகிழ்ச்சி அதிகரிக்கிறது. பாய்ந்து பாய்ந்து நீராடுகிறார்கள். கையில் அணிந்துள்ள வளையல்கள் குலுங்குகின்றன. பாதச் சிலம்புகள் கலீர் கலீர் என்று ஒலிக்கின்றன. குளத்தில் புகுந்து நீராடுவார் கையாலே நீரைத்தள்ளி காலாலே நீரை உதைத்து நீந்தி விளையாடுவார் ஆதலின், 'சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்ப' ஆடினார்கள் என்றார். பங்கய மலர்கள் பூத்த புனலிலே மங்கையர்கள் பாய்ந்து நீராடுகிற காட்சி கவிதையிலே அழகாக வடிக்கப்படுகிறது.

இப்பாடலில் முன்பகுதிக்கு மிகச் சிறந்த ஒரு தத்துவப் பொருளும் உண்டு. உயிரினது அறியாமை எனும் ஆணவத்தைப் போக்க இறைவன் ஆசார்யனாக எழுந்தருளுவான். ஞான உபதேசம் தரும் குரவனாக வரும் பெருமான் பல்வேறு வகையான தீட்சை முறைகளினால் உயிரைப் பற்றி நிற்கின்ற ஆணவ மெனும் அறியாமையை நீக்கி, அறிவினைப் பிரகாசிக்கச் செய்வான். அவ்வாறு ஆசார்யன் செய்யும் தீட்சை முறையையே முதற்பகுதி குறிப்பிடுகிறது.

1.'பைங்குவளைக் கார் மலர்' கண்ணைக் குறிப்பிடும்; ஆசார்யன் கண் பார்வையாலே சீடனைப் பார்த்து பாசநீக்கம் செய்தல்–

'திங்கள் சேர் சடையார் தம்மைச் சென்று அவர் காணாமுன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருள் திரு நோக்கம் எய்தி
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல '

என்று சேக்கிழார் கூறுவது காண்க.

2. 'செங்கமலப் பைம்போது' மானசிகதீக்கை – ஆசார்யன் மாணவனது இதயகமலத்தில் பாவனையால் புகுந்துஅவனது ஆன்மாவை வாங்கித் தன் இதய கமலத்தில் கலந்ததாக ஆக்கித் தருதல்.

3. 'குருகினம்' என்பது பரிச தீக்கை. பறவை தனது சினையை சிறகால் தழுவிக் காப்பதுபோல ஆசான் தன் கையினால் சீடனைத்தலை முதல் கால்வரைதீண்டிப் பாச மோசனம் செய்தலாம். (மோசனம் – விடுகை)

4. பின்னும் அரவம் என்பது ஒலி. வாசிக தீட்சையைக் குறிக்கும். உபதேசத்தால் மலநீக்கம் செய்தல்: திருவைந்தெழுத்து முதலாய உபதேச மூலம் ஒலி கேட்ட துணையானே பாசம் நீங்கச் செய்தலாம்.

'திருநோக்கால், பரிசத்தால், திகழும் வாக்கால்,மிகுநூலால் பாவனையால், யோகப்பண்பால்' என்று சாத்திரம் குறிப்பிடும் ஆறு தீட்சை முறைகளில் நான்கினைக் கூறவே ஏனைய இரண்டும் குறிப்பால் அடங்கின.

தன்பால் வந்து சார்வாரது மலத்தை நீக்குதற்பொருட்டு தம் முதலாகிய பரம்பொருள் குருவாய் எழுந்தருளிச் செய்யும் தீக்கை முறைகளையே இம்மடுக்காட்சியில் வைத்து மணிவாசகர் கூறியுள்ளார் என்பதும் ஓர் நுண்பொருள் ஆகும்.

உள்ளம் பொங்க, உடல் பொங்க மடுவெள்ளம் பொங்க நீராடும் மகளிர் கூட்டத்தோடு கூடி நாமும் அந்தக் காட்சியைக் கவிதையிலே கண்டு திளைப்போமாக.

14. சீதப்புனல்

'காது ஆர் குழை ஆட, பைம் பூண் கலன் ஆட,
கோதை குழல் ஆட, வண்டின் குழாம் ஆட,
சீதப் புனல் ஆடி, சிற்றம்பலம் பாடி,
வேதப் பொருள் பாடி, அப்பொருள் ஆமா பாடி,
சோதி திறம் பாடி, சூழ் கொன்றைத் தார் பாடி,
ஆதி திறம் பாடி, அந்தம் ஆமா பாடி,
பேதித்து நம்மை, வளர்த்து எடுத்த பெய்வளை – தன்
பாதத் திறம் பாடி, ஆடு' – ஏல் ஓர் எம்பாவாய்! (14)

எம்பெருமானது நினைவோடு நீராடுகிற பெண்களைப் பார்த்தோம். இதோ ஒரு பெண் நீராட வருகிறாள். அவளைப் பார்த்து முன்பு நீராடிய பெண் ஒருத்தி 'எப்படி நீராட வேண்டும்' என்பதைச் சொல்லித் தருவது போல இந்தப்பாட்டு வருகிறது. நீராடுவதற்கு ஒரு பயிற்சிப் பள்ளியே நடக்கிறதோ? என்று நமக்குத் தோன்றுகிறது. வெறும் நீராடலா இது! இறை நீராட்டம் அல்லவா? இதற்குத் தனியான பயிற்சி அவசியம் தானே.

நீர் ஆடுகின்ற போதே பாட வேண்டும். சீதப் புனலிலே ஆடுகிற பொழுதே சிற்றம்பலத்தைப் பாடு என்று சொல்கிறாள். சீதப்புனல் – குளிர்ந்த நீர். ஏரி, குளம், பொய்கை முதலியவற்றில் மேற்பரப்பில் நீர் குளிர்ந்திருக்கும் – உள்ளே வெதுவெதுப்பாக இருக்கும். ஆனால் வெள்ளத்தால் ஆற்றில் வரும் நீர் மேலும் கீழும் சில்லென்று குளிர்ந்தே இருக்கும். 'புனல்' என்பது இடையறாது ஒழுகும் ஆற்று நீரைக் குறிக்கப் பெரும்பாலும் பயன்படும்; அதனால் அங்கே சீதப்புனல் என்பதால் ஆற்று நீரைக் குறித்தார் எனலாம்.

உலக ஆசையாகிய வெப்பத்தினால் தகிக்கப்பெற்ற உள்ளம் குளிர வேண்டுமானால்உள்ளே சிற்றம்பல நினைவு இடையறாது ஒழுக வேண்டும். உடல் சூடு தணியக் குளிர்ந்த நீர் வேண்டும். குளிர்ந்த நீரைத் தைத்திங்கள் தண்ணிய நீர் என்று சங்க கால இலக்கியம் குறிப்பிடும். தைமாதத் தண்ணீர் போலக் குளிர்ந்திருக்கிற நீர் சீதப் புனல்.

சீதப் புனல் ஆடத் தொடங்கும் போதே கரையிலிருந்து வேக மாகத் தண்ணீரில் பாய்வதற்குக் கிளம்பும் போதே காதிலே உள்ள குழைகள் மின்னலிட்டு அசைகின்றன. 'காதார் குழை ஆட' இது தோடு இல்லை. குழை என்னும் தளிர் போல கீழ் வீழ்ந்து அசையும் தொங்கட்டான். அவைகள் ஆடத் தொடங்குகின்றன.

அடுத்து உடம்பில் அணிந்துள்ள பசிய பொன்னால் ஆன ஆபரணங்கள் எல்லாம் ஆடுகின்றன. 'பைம் பூண் கலன் ஆட' இதோ தண்ணீரில் பாய்ந்தாயிற்று. நீரிலே முழுகுகிறாள், மலர் மாலை அணிந்த கூந்தல் அசைகிறது, கூந்தலும் தண்ணீரில் முழுகத் தொடங்குகிற போது அங்கே உள்ள மலர்களில் தேனுண்டு தங்கிய வண்டுகள் மேல் எழுந்து ஆடுகின்றன; 'கோதை குழலாட – வண்டின் குழாம் ஆடச் சீதப் புனலில் ஆடு' என்கிறாள்.

ஆடுகிறபோதே சிற்றம்பலத்தைப் பாட வேண்டுமாம். சிற்றம் பலத்தைப் பாடுவது என்றால் எப்படிப் பாடுவது? சிற்றம்பலத்துக் கூத்தன் வேதப் பொருளாக விளங்குவதைப் பாட வேண்டும். வேதம் பொது. வேதத்தின் உட்பொருளாக விளங்குவது ஆகமம். வேதப் பொருள் என்பது இங்கே ஆகமத்தைக் குறிக்கும். வேதம் பசு, அதன்பால் மெய் ஆகமம். வேதத்தைப் பசுவாகச் சொன்னால் அதன் பால் மெய் ஆகமம். அதுவே வேதப்பொருள். வேதப்பொருளைப் பாடுகிற போதே அந்த ஆகமம் எப்படி நடைமுறையில் நிகழ்கிறது என்பதையும் சொல்லிப்பாடு என்கிறாள். அப்பொருள் ஆமா பாடி ஆகமப் பொருள் எப்படி விளைகிறது. 'அருபரத்தொருவன் அவனியில் வந்து, குருபரன் ஆகி ஆண்டு கொண்டு அருளுகிற' தன்மை. 'ஆகமம் ஆகிநின்று அண்ணிக்கும்' இயல்பைப் பாடுக என்கிறாள்.

சிற்றம்பலத்துச் சிதாகாசப் பெருஞ்சோதியாகத் திகழும் நடன சிகாமணியைப் பாடு என்றாள். சோதியைப் பாடு என்று சொல்லாமல் 'சோதி திறம் பாடு' என்றாள். ஆயிரம் கோடி சூரியர்கள் ஒரு கணத்தே ஒன்றாகத் தோன்றியதொப்ப பேரொளிப் பிழம்பாக உள்ள இறைவன் உயிர்கள் காணும்படி எளிய இனிய அழகிய பல்வேறு திருமேனிகளை எடுத்துக் கொண்டு அவ்வவ்வுயிர்களுக்கு ஒப்ப நலம் செய்கிறானே அதுதான் 'சோதி திறம்' அந்தச் சோதி திறமாகிய பேரருள் திறத்தைப் பாடு என்கிறாள்.

அந்தப் பெருமானது பிரணவாகாரத் திருவைந்தெழுத்தை நினைப்பூட்டும் வட்டமான வடிவத்தைப் பெற்றுள்ள கொன்றை மலரால் ஆகிய தாரைப்பாடு என்கிறாள். கொன்றை மலரின் புறத்தே ஐந்து இதழும் நடுவே பிரணவ வடிவமான கேசரங்களோடு கூடிய அகவிதழும் உண்டு. அதனால் பெருமானது நுண்ணிய வடிவமாவது கொன்றை மலர்.

எல்லாவற்றுக்கும் யாவர்க்கும் முதலாக உள்ள, தனக்கு மேல் எதுவும் இல்லாத தனி முதற் பொருளாய் அப்பெருமான் உள்ள தன்மையை, 'ஆதி திறத்தைப் பாடு' என்றாள். எல்லாம் முடிந்த சர்வ சங்கார காலத்தே தான் ஒருவனே யாக நிற்கின்ற அந்த மில்லாத்தன்மையைப் பாடு என்றாள். 'அந்தம் ஆமா பாடு' என்கிறாள். ஆதியாகவும் அந்தமாகவும் உள்ளான் அவனே படைப்போன், அழிப் போன் ஆவான். ஆகவே காப்போனும் அவனே என்பது சொல்லாமல் முடிந்தது. இவ்வாறு இந்தப் பெருமான் செய்யும் அருட் செயலுக் கெல்லாம். காரணமாக விளங்கும் பெருமாட்டியைப் பாடாமல் விட்டால் நீராட்டம் நிறைவேறியதாகுமா? அந்தப் பெருமாட்டியை நினைந்து பாடி நீராட்டத்தை முடிக்கச் சொல்கிறாள்.

'பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளைதன் பாதத் திறம் பாடி ஆடு' இருள் மலமாகிய ஆணவமலத்தில் மறைப்புண்டு இருளேயாகிக் கிடந்த ஒளிவடிவாகிய உயிரை ஆணவக் கருவறையில் அறிவில்லாத குருட்டுக் குழந்தையைப் போலக் கிடந்த உயிரை அதிலிருந்து வேறுபடுத்தி சற்றே விலகிய சிற்றொளி வடிவாகிய மாயா மலத்தோடு சேர்த்து உடம்பும் உலகும் ஆகியவற்றோடு சேர்த்து மாற்றுகிறாள். இப்படிப் பேதிக்கிறாள் – பேதித்தல் – பேதம் செய்தல் – மாற்றுதல். இந்த ஒரு மாற்றுதல்தானா அவள் செய்கிறாள். அதற்கும் மேலே மாயாமலத்தால் கன்மத்தை ஈட்டவும் நுகரவும் செய்கிறாள். அவ்வாறு நுகரும் போது தன்னையும் தனிமுதலையும் உயிர்கள் காணா வண்ணம் மறைத்தலையும் செய்கிறாள். கன்ம ஒப்பின்கண் உயிர்களிடத்தே விருப்பு வெறுப்பற்ற தன்மை நிகழ்ந்த இடத்து, உயிர்களை அறிவு மயமாக்கி உலகைக் காணா வண்ணம் செய்து தன் தண்ணருளால் இறைவனைக் காணச் செய்து வளர்த்து எடுக்கிறாள். இங்கே எடுத்து என்னும் சொல் சிறந்த சொல். உயிர்களை எடுத்துக் காக்கும் அருள் திறத்தைச் சிவஞான சித்தியார்,

"என்னை இப்பவத்திற் சேராவகை எடுத்து என் சித்தத்தே
தன்னை வைத்து அருளினாலே தாளிணை தலைமேல் சூட்டும் "

என்று கூறுகிறது.

உயிர்களை மாயா மலத்தோடு இணைத்தல் படைத்தல் ஆகும். கன்மத்தை ஈட்டி நுகரச் செய்தல் காத்தல் ஆகும். பிறந்தும் இறந்தும் கன்மம் நுகரும் உயிர்களுக்கு இளைப்பு நீக்க ஒடுக்குதல் அழித்தல் ஆகும். இன்ப நுகர்வுக்கு ஏதுவாகக் கன்ம நுகர்ச்சியின் போது தன்னைக் காண ஒண்ணாது நிறுத்தல் மறைத்தல் ஆகும்.

இருவினை ஒப்பின் கண் திருவடிப்பேறு தருதல் அருளல் ஆகும். இவ்வாறு ஐந்தொழில்களையும் இறைவன் சிற்சத்தியின் துணை கொண்டு பல திரு மேனிகளை எடுத்துச் செய்வான். அதனால் உயிர்க்குலங்களுக்கு உதவுகின்ற கருணைப் பெருக்கைப் பிராட்டிமேல் ஏற்றிப் 'பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளைதன் பாதத் திறம்' பாடி என்று சொல்லப் பெற்றது.

'புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடி' என்று முதலில் ஆடிப் பாடு என்று சொன்னவள், இறுதியில் 'பாதத்திறம் பாடி ஆடு' என்று முடிக்கிறாள். இறைவனை முதலில் பாடிப் பிறகே ஆட வேண்டும் என்பது நினைவில் நிற்க முடிக்கும்போது 'பாடி ஆடு' என முடித்த அழகு நவில் தொறும் நயம் பயப்பது.

நீராடும் போதும் இறைவன் நினைவு அகலாமல் இருக்க வேண்டும் என்பது இக்கவிதை தரும் கருத்து.



௧௫. ஏர் உருவ பூம்புனல்

"ஓர் ஒரு கால் "எம்பெருமான்" என்று என்றே, நம் பெருமான்
சீர் ஒரு கால் வாய் ஓவாள், சித்தம் களி கூர
நீர் ஒரு கால் ஓவா நெடும் தாரை கண் பனிப்ப,
பார் ஒரு கால் வந்தனையாள், விண்ணோரைத் தான் பணியாள்,
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆம் ஆறும்
ஆர் ஒருவர்? இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்,
வார் உருவப் பூண் முலையீர், வாய் ஆர நாம் பாடி,
ஏர் உருவப் பூம் புனல் பாய்ந்து ஆடு – ஏல் ஓர் எம்பாவாய்! (15)

ஆண்டவனைப் பாடிப் பரவி நீராடும் மகளிர் தம்முள்ளே ஒருத்தியின் பக்தி பரவசம் கண்டு வியக்கிறார்கள். அதை இந்தப் பாடல் சொல்கிறது. மற்றொருத்தியின் பக்திப் பாங்கைச் சொல்கிற போதே சிவனிடத்தில் அன்புடையாராகத் தம்மை நினைத்துக் கொண்டிருக்கிற தங்கள் சிறுமையும் தோன்றச்சொல்கிறார்கள். ஒரு பொருளின் பெருமை தெரிய வேண்டுமானால் பக்கத்தில் ஒரு சிறிய பொருளைச் சேர்த்துப் பார்த்தால் தான் தெரியும்.

சிரவண பௌகுளாவில் கோமடேசுவரரது அற்புதத்திரு உருவம் உள்ளது. மிகப் பெரிய திருமேனி அது. அந்தப் பெருமானது திருமேனியின் பெருமையைச் சிறிய போட்டோவில் காட்ட வேண்டு மானால் எப்படி முடியும் ? ஒரு காமிராக்காரர் சாமர்த்தியம் உள்ளவர். ஒரு யுக்தி செய்தார். கோமடேசுவரர் திருவுருவத்தின் காலடியில் ஒரு சாதாரண உயரமுள்ள மனிதனை நிறுத்தி வைத்தார். ஆறடி உயரமுள்ள இந்த மனிதன் இப்படித் தோன்றினால் கோமடேசுவரரது திருமேனி எவ்வளவு பெரியது என்பதைத் தெரிந்து கொள்ளட்டும் என்று விட்டுவிட்டார்.

பக்தியில் முதிர்ந்த பாவையைக் காட்டத் தங்களையும் அதிலே சேர்த்துப் பேசிக் கொள்கிறார்கள். மரபு வழியில் இப்பாடலுக்குப் பலரும் சொல்கிறபொருளை விட்டுக் கொஞ்சம் நழுவிச் செல்கிறதாலே இவ்வளவு பீடிகை அவசியம் ஆகிறது.

"ஓர் ஒருகால் எம்பெருமான் என்றென்றே
நம்பெருமான்
சீர் ஒரு கால் வாய் ஓவாள்"

மரபு வழியில் சொல்லி வருகிற பொருள். 'இவள் ஒவ்வொரு தடவை எம்பெருமான் என்று என்று சொல்லி நம்பெருமானது சீரை ஒருகாலும் வாய் ஒழியாமல் சொல்லுவாள்' என்று பொருள் உரைப்பது. ஓர் ஒரு கால் எம்பெருமான் என்று சொல்வதும், ஒரு காலும் வாய் ஓவாமல் சொல்வாள் என்பதும் முன்னுக்குப் பின்முரணாக இருக்கிறதல்லவா?

இனி உண்மைப் பொருளைப் பார்க்கலாம். 'என்றென்றே' என்றதன் பின் இருந்த மகர ஒற்று வருமொழியில் நம்பெருமான் என்று மெல்லெழுத்து வந்ததனால் கெட்டது. அதை இப்பொழுது அமைத்துப் பார்க்க,

"ஓர் ஒருகால் எம்பெருமான் என்றென்றேம்
நம்பெருமான் சீர் ஒரு கால் வாய்ஓவாள் "

நாங்கள் எல்லாம் இறைவனை எப்பொழுதோ ஒரு தடவை வழிபாட்டுக்குப் போகிற அந்த நேரத்தில் எம்பெருமான் என்று சொல்லுவோம். ஆனால் இவளோ நம்பெருமானது, புகழை ஒரு கணமேனும் வாய் ஒழியாமல் சொல்லிக் கொண்டிருப்பாள். பெருமான் புகழைப் பாடுகின்ற நமக்குள்ளே இவள் பக்தியின் முதிர்ச்சி சொல்லும் தரத்த தன்று, நாம் எங்கே! இவள் எங்கே! என்பது குறிப்பு. இவ்வுரை என் ஆசிரியப் பிரான் வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன் அவர்களின் கண்டு பிடிப்பாகும்.

வாய் இறைவன் புகழைப் பேசுகின்ற அளவிலேயே ஈடுபட்டிருக்கிறது. ஆனால் மனம் என்ன செய்கிறது ?நமக்கெல்லாம் சிந்தை ஒன்று நினைக்க வாய் ஒன்று சொல்லும் இவள் சித்தம் இறைவனது நினைவிலே திளைத்துக் களிப்பிலே மிதக்கிறது. 'சித்தம் களிகூர' இருக்கிறாள். உள்ள உருக்கத்தை வெளிப்படுத்தும் அறி குறியாகக் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிகிறது. ஒரு காலும் ஒழியாமல் நெடுந்தாரையாக நிலத்தில் வழிந்தோடும்படி கண்கள் நீரைத் துளித்துக் கொண்டே இருக்கின்றன. நாம் எல்லாம் தண்ணீரிலே ஆடுகிறோம். இவள் கண்ணீரிலேயே ஆடுகிறாள். நிலத்திலே விழுந்து விழுந்து வணங்குதலை உடையவளாயிருக்கிறாள் வணங்குதல் செயல் அன்றி வேறு செயல் இல்லை. மனம் களி கூர்கிறது இறைவன் நினைவிலே. வாய் ஒழியாமல் இறைவன் திருப்பெயரைச் சொல்கிறது. மெய் இடைவிடாமல் இறைவனை வணங்குகிறது. மனம், மொழி, மெய் மூன்றாலும் இறைவனுக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்து விட்டாள் இவள். சிவராஜாவை வணங்குகிற இவள் வேறு அவராஜாக்களை வணங்க மாட்டாள். 'எத்தேவர் தேவர்' என்று

தடுமாறாமல் முத்தேவரிலும் முதல் தேவராகிய சிவராஜாவை வழிபடுகிற இவளுக்கு மற்றவர்கள் எல்லாம் எம்மாத்திரம் 'விண்ணோரைத் தான் பணியாள் '

பெரிய ராஜாவாக இருக்கின்ற சிவபெருமானிடத்தில் ஒருவர் மால் கொள்ளுவது – பித்துக் கொள்ளுவது என்பது இப்படியும் இருக்க முடியுமா? இஃது ஒரு வியப்புத்தான்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள் "

என்று அப்பரடிகள் கூறிய நங்கை இவளுக்குத் தமக்கையோ?

இறைவனிடத்தில் ஈடுபடுதலால் 'பித்தன்' என்று உலகோரால் சொல்லப் பெறுதலை ஒரு பெருமையாக அடியார்கள் கருதுவார்கள்.

"உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்து உருகி
மத்த மனத்தொடு மால்இவன் என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட"

என்று மணிவாகர் திருச்சதகத்திலும் கூறுவர்.

இத்தகைய பக்திப் பைத்தியம் எல்லோருக்கும் வாய்க்கிறதா? ஒருவர் தம் தன்மையால் ஏற்படுத்திக் கொள்ளத்தான் முடியுமா? இப்படி அந்தச் சிவபெருமான்தான் ஒருவரை ஆட்கொள்ள முடியும். இவளை இவ்விதமாக அந்தப் பெருமான் அடிமைகொண்டிருக்கிறான். தன்னுடைய சாமர்த்தியத்தால் இவள் இந்த நிலையை அடைய முடியாது. ஏதோ இவளாகஇப்படி ஆகிவிட்டாள் என்பதல்ல. இவளை இப்படி ஆக்கியது அவனது சாமர்த்தியம். அவன் நினைத்தால் நம்மை யும் இவ்வாறு ஆக்குவான் என்பது குறிப்பு. அவன் வித்தகன். வித்தகன் என்றால் திறமைசாலி. பிறரால் செய்ய முடியாததை எல்லாம் செய்ய வல்லவன் – சாமர்த்தியசாலி என்பது பொருள்.

"பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆமாறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் "

என்றார்கள்.

கச்சணிந்த மார்பகங்களை உடையீர்! அந்த வித்தகருடைய திருவடிகளை வாய் நிறைய நாம் பாடி அழகே வடிவெடுத்தாற்போல்

உள்ள இந்நீரிலே ஆடுவோமாக என்றார்கள். பக்தி பரவசத்தால் தனை மறந்த நிலையிலே உள்ள ஒரு பெண்ணின் நிலையை எடுத்துக் காட்டினர் – அந்தப் பெருமான் வித்தகன் – கல்லில் நார் உரிக்கக் கூடியவன் ஆதலின் நம் கல்மனத்தையும் குழைவித்து ஆட்கொள்ளுவான் என்று அனைத்து மகளிரையும் ஆட அழைக் கிறார்கள்.

மனம், மொழி, மெய் மூன்றாலும் பரவசப் பட்டு நிற்கிற ஒரு பெண்ணின் நிலையைக் கூறி, நாம் மொழியாலாவது பாடி ஆடுவோம் என்று கூறுவதாக இப்பாடல் குறிக்கிறது.



16. அருள் என்னும் மழை

"முன்னி, கடலை, சுருக்கி எழுந்து, உடையாள்
என்னத் திகழ்ந்து, எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து, எம்பிராட்டி திருவடிமேல்
பொன் அம் சிலம்பில் சிலம்பி, திருப் புருவம்
என்னச் சிலை குலவி, நம்-தம்மை ஆள் உடையாள் -
தன்னில் பிரிவு இலா எம் கோமான் அன்பர்க்கு
முன்னி, அவள், நமக்கு முன் சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழை" - ஏல் ஓர் எம்பாவாய்! (16)

திருவெம்பாவையின் பொதுப்பயன் உலகம் செழிக்க மழை பொழிய வேண்டும் என்பதாகும். அதை இந்தப் பாடல் சொல்கிறது.

உலகுக்கு முதல்வன் இறைவன். அவனது திருவருளுக்குச் சான்றாக உள்ளது மழை. உலகம் நடைபெறக் கருவியாக உள்ளது மழை. 'நீர் இன்றி அமையாது உலகு' எனத் திருக்குறளும் கடவுள் வாழ்த்துக்கு அடுத்து வான் சிறப்பை அமைத்தது. மழைக்குக் காரணம் அறம். அறம் நிலைத்தால் மழை நன்கு பொழியும். அறத்தை உணர்த்துவன வேதாகமங்கள். அவற்றின் வழி நிற்போர் மெய்யன்பர்களாய் நீத்தோர் ஆதலின் இவை அனைத்தும் ஒன்றைஒன்று இன்றி யமையாச் சிறப்பினவாய் இறைவன் பெருமையை எடுத்துக் காட்டுவன ஆகலின் மழை பொழிதலால் உயிர்களின் இறைவாழ்வு சிறக்கும் எனலாம்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு."

என்றார் திருவள்ளுவரும். இறைவழிபாட்டில் ஈடுபட்டு வைகறையில் எழுந்து நீராட விரும்பும் மகளிர்க்கு மழை இன்றியமையாதது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

உயிர்கள் செழிக்க அருளைப் பொழியும் பெருமாட்டியும் பயிர்கள் செழிக்க மழைபொழியும் மேகமும் ஒன்று என்று அழகாகப் பொருத்திக் காட்டுகிறது இந்தச் செய்யுள்.

மழை பொழியத்திரளும் மேகங்கள் முன்னி - கருதி அக்கருத்தாலே புறப்பட்டுச் சென்று கடல் நீரை உண்டு கடலை

வற்றச் செய்கின்றன. முன்னிக்கடலைச் சுருக்கிய இந்த மேகங்கள் எழுந்து விண்ணிலே உலாவுகிறபோது நீருண்ட கருமேகங்களைக் காண்கிறவர் களுக்கு அந்தப் பராசக்தியாகிய மாயோளது கருநிறம் படைத்த திருமேனிதான் நினைவுக்கு வரும். நம்மை உடையாளாகிய அந்தப் பிராட்டியைப் போலத் திகழ்கின்ற மேகத்தில் ஒளிக்கீற்றாகத் தெரிந்தும் தெரியாமலும் மின்னல் உண்டாகிறது. உண்டோ இல்லையோ என்று கண்டார் ஐயம் உறும்படி இடுகிப்போய்ச் சிறிதாயிருக்கின்ற பிராட்டியின் சிற்றிடை போல மின்னியது வான். மின்னிப் பொலிந்த வானம் பிராட்டியின் திருவடிமேல் பொன்னாற் செய்த சிலம்பு ஒலித்ததுபோல் ஒலித்தது. அந்தப் பெருமாட்டியின் அழகிய புருவத்தைப்போல இந்திர வில்லை வளைத்து இட்டது. அந்தப் பெருமாட்டி தன்னை வழிபடும் அடியார்களுக்குத் தருகின்ற பேரருளைப்போல மழையைப் பொழிகிறது. இவற்றை யெல்லாம் மழையை முன்னிலைப் படுத்தி ஏவுவதாக இந்தப் பாடல் சொல்கிறது.

மேகத்தைப் பார்த்து இவர்கள் பேசுகிறார்கள். பக்கத்தில் இருக்கும் வேலைக்காரனைப் பார்த்து எஜமான் கட்டளை இடுவதைப் போல, மழையைப் பார்த்து அப்படிச்செய், இப்படிச் செய் என்று மகளிர் சொல்கிறார்கள். ஆண்டவனது கருணை அடியார்கள் மேல் இறங்கி வருவது போலவே மழை பொழிய வேண்டும் என்று கேட்பதிலே தான் எவ்வளவு நுட்பமாகக் கேட்கிறார்கள். பெண்கள் அல்லவா? தங்களை எல்லாம் தாய்க்குலமாகிய பிராட்டி அடியாராகச் சொல்லிக் கொண்டார்கள். எல்லா இடங்களிலும் கட்சி இருக்கும் போது, பக்தியிலே மட்டும் கட்சி இருக்கக்கூடாதா? அம்மா கட்சி ஒன்று அப்பா கட்சி ஒன்று இப்படி அடியார்களை இரண்டாகவே சொல்கிறார்கள் இவர்கள். பெருமானது கட்சியைச் சேர்ந்த அடியார்களுக்கு முன்னாலே அம்மையின் கட்சியைச் சேர்ந்த அடியவர்களுக்கு அந்தப் பெருமாட்டி அருளைச் சுரக்கிறாளாம்.

கேட்பதற்கு வேடிக்கையாய் இருக்கும். ஆனாலும் உண்மை அதுதான். வீட்டிலே முறையாக நடந்து பள்ளிக் கூடம் போய்ப் படிப்பான் ஒரு மகன், அவனுக்கும் சாப்பாடு நடக்கிறது. பள்ளிக்குப் போகாமல் அங்கே இங்கே சுற்றிவிட்டு வருகிறான் ஒரு பையன். அவனைக் கண்டால் தகப்பன் விரட்டுவான். 'சோறு இல்லை, போடா' என்று தள்ளி விடுவான். தன் மனைவியிடம் இந்தப் பயலுக்குச் சோறு போடாதே, போட்டால் நீயும் வெளியே போக வேண்டியதுதான் என்று மிரட்டுவான். ஆனால் தாய் மனம் அல்லவா? அது அதைக் கேட்குமா? தகப்பனுக்குத் தெரியாமல் தோட்ட வழியாக வரச்சொல்லி, இந்த போக்கிரிப் பிள்ளைக்குச்

சோறு போட்டு வயிற்றை நிரப்பி, 'அப்பா சொல்வதைக் கேட்டு நட' என்று புத்தியும் சொல்லி அனுப்பும் அந்தத் தாய் மனம்; அதுதான் தாய். அதைத் தான் இந்தப் பாடல் சொல்கிறது.

பக்குவிகளாய மெய்யடியார்கள் சரியை, கிரியை, யோகம், ஞானங்களின் வழியிலே நின்று ஞான நூற்பொருளைக் கேட்டுச் சிந்தித்து, தெளிந்து, நிட்டை கூடுமவர் படிமுறையால் வரக்கூடுமவர்கள். அப்படி இல்லாமல் இறைவன் தனது பரம கருணையாலே தகுதியற்றவர்களாகிய ஆன்மாக்களை அவர்களது துன்ப நேரிட்டால் நிகழும் முறையீட்டையே முதலாகக் கொண்டு அவர்களை ஏற்று அருளுகிறான். அதற்குமூலம் கருணை யாகலான் அவர்களைப் பிராட்டியின் அடியார்கள் என்று சிறப்பாகச் சொல்வது மெய்ந்நூல் வழக்கு. தகுதியுள்ளவர்களுக்குக் கிடைக்கும் திருவடிப் பேறு தகுதி இல்லாதவர்களுக்கும் கிடைக்கிறது கருணையாலே ஆதலின். திருவருளே சிற்சக்தி எனவும் அழைக்கப்படுதலின் அவர்கள் எங்கோமான் அன்பர்க்கு வேறாய் அம்மையின் அடியார் ஆவர்.

'நம் தம்மை ஆள் உடையாள் தன்னில் பிரிவு இலாஎம் கோமான்' உமாதேவியை ஒரு கணமும் பிரியாது நெருப்பும் சூடும் போல தாதான்மியமாக ஒன்றித்து நிற்கும் சிவபெருமான் என்பது பொருள். இதில் சத்தியும் சிவமும் ஒன்றுபட்டுள்ள நிலை உணர்த்தப் பெறுகிறது.

'கோமான் அன்பர்க்குமுன் அவள் நமக்கு முன்னிச் சுரக்கும் இன்னருள்' என்கிறது பாடல் – சிவபெருமான் அன்பர்களுக்கு முற்பட்டு அந்தப் பெருமாட்டி நமக்குக் கருதிச் சுரந்தருளும் திருவருள் என்பது கருத்து.

நீருள்ள நிலத்தில் விழுந்த மழை போல அல்லாமல், நீரே வராதோ என்று ஏங்கிய மண்ணிலே விளைந்த மழைபோல, நமக்கு இறைவன் திருவருள் கிடைக்காது; நாம் அதற்குப் பாத்திரர் அல்லோம் என்று கருதுகிறவர்களுக்கும் அவர்களது முறையீட்டையே முதலாகக் கொண்டு இறைவன் அருள் தருகிறான் என்பதை நிலம் வேண்டாமலே எந்நிலத்தும் மழை வரையறை யின்றிப் பொழிவது போல் என்ற மழை உவமையால் அஞ்ஞானிகளும் பக்தியால் இறைவன் கருணைக்கு இலக்காகிறார்கள் என்ற தத்துவப் பொருளை இப்பாடல் தெரிவிக் கிறது.

17. பங்கயப் பூம் புனல்

'செம் கண் – அவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால்,
எங்கும் இலாதது ஓர் இன்பம் நம்பாலதா,
கொங்கு உண் கரும் குழலி! நம் – தம்மைக் கோதாட்டி,
இங்கு, நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி,
செம் கமலப் பொன் பாதம் தந்தருளும் சேவகனை,
அம் கண் அரசை, அடியோங்கட்கு ஆர் அமுதை,
நங்கள் பெருமானை, பாடி, நலம் திகழ,
பங்கயப் பூம் புனல் பாய்ந்து ஆடு' – ஏல் ஓர் எம்பாவாய் ! (17)

மழை பொழிய மேகத்தைப் பார்த்துச் சொல்வதாக வேண்டி பெருமானது திருவருட் பொழிவைக் குறிப்பாக முன்பாட்டிலே புலப் படுத்தினார். ஆண்டவன் உயிர்களுக்கு எவ்வாறெல்லாம் அருளு கிறான் என்பதை நீராடும் பெண் ஒருத்தி மற்றொருத்தியை அழைத்துச் சொல்வது போல இந்தப் பாடல் சொல்கிறது.

'கொங்கு உண் கருங்குழலி' 'ஏலக்குழலி' என்று முன்னர் அழைத்தது போல இங்கு அழைக்கப் படுகிறவளும் கூந்தல் அழகாற் சிறந்தவள். மணம் நிரம்பிய கரிய கூந்தலை உடையவளே! என்று அழைத்துச் சொல்கிறாள். கொங்கு என்பது மகரந்தத்தைக் குறிக்கும். இங்கு அதனால் உண்டாகும் மணத்தைக் குறித்தது. கொங்கு – தாது எனவும் குறிக்கப் பெறும். 'கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி' 'தாதுண்பறவை' என்று வண்டைச் சொல்லும் இடங்களைக் கண்டு அறிக. மணப் பொருள்களாய் மயிர்ச்சாந்து, மலர் முதலியவற்றைப் பல்காலும் புனைதலால் மணத்தை உண்டு தேக்கெறியும் கருங் கூந்தலை உடையவள் என்று அவளது பின்னழகைச் சிறப்பாகப் பேசினாள்.

எம்பெருமான் நம்மை ஆட்கொண்டு நமக்கு எத்தகைய பேரின்பத்தைச் செய்கிறான். பிறர் ஒருவர் பெற முடியாத இன்பத்தை நமக்குச் செய்கிறான். புண்ணிய முதிர்ச்சியால் கந்தர்வ தேவ சாதிகளில் பிறந்து இன்பம் அடைதல் உண்டு. அப்புண்ணியச் சிறப்பு மிகுதற்கேற்பச் சில சிவபுண்ணியங்களுக்குச் சிவபிரான் அதிகார

சக்திகளைத் தந்து விஷ்ணு, பிரமாக்களாகச் சில நல்லுயிர்களை உயர்த்துவான். அது பதமுத்தி எனப்படும். அப்பதமுத்தி இன்பமும் சில காலம் அனுபவிக்கப் பெற்று மீள வருதற்குரியதே. அழியா இன்பம் எனப்படும் வீடு பேறாகிய பரமுத்திக்கு இணையானது வேறு எதுவும் இல்லை. ஈறில் இன்பமாகிய தன் திருவடிப் பேற்றைத் தந்தருளுகிறான் நமக்கு என்று சொல்கிறாள்.

"செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்

எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதா(க)"

என்று சொல்கிறாள். இன்பத்தை நன்கு அனுபவிப்பதற்குரிய அவயவச் சிறப்புடையவராயிருந்தும் அவர்களுக்கு இன்பத்தைத் தராமல் அத்தகைய அவயவச் சிறப்பு இல்லாத நமக்குத் தந்தது அவனது பெருங்கருணையால் அல்லவா? அவன் பேரருளாளன் என்றாள். தாமரைக் கண்ணன் என்று சிறப்பித்துச் சொல்லப் பெறும் செங்கண்ணன் ஒருவன். 'கார் மேனிச் செங்கண்' என்ற திருப்பாவை முதற்பாசுரத்தைக் கருதுக. திசை தோறும் முகங்களை உடையவனாய்ப் பல முகமாய் அனுபவிக்க வாய்ப்புள்ளவன் ஒருவன் தெய்வத் தன்மை பெற்று இமையாக் கண்ணராய்த் தேவ உடம்பு உடையவர் தேவர்கள். அவர்களுக்கெல்லாம் பெற முடியாததோர் இன்பம் நமக்காயிற்று என்கிறாள்.

'அற்புதமான அமுத தாரைகள், எற்புத்துளை தொறும் ஏற்றினன்' என்று மணிவாசகரே அந்த இன்பத்தைக் கூறுவர். 'பந்தம் பரியப் பரிமேற் கொண்டான் தந்த அந்தம் இலா ஆனந்தம்' என்று தாம் பெற்ற ஆனந்தத்தையே பெண்கள் பேச்சாக வைத்து இங்கே காட்டினார்.

அடுத்து 'நந்தம்மைக் கோது ஆட்டி' – நம்மிடத்துள்ள குற்றங்களை யெல்லாம் களைந்து தூய்மைப் படுத்தினான். வினை மாசு களைந்தான். ஒருவருக்கு ஒரு நன்மை செய்ய எண்ணு பவர்கள் அவர்களிடம் உள்ள தீமையை நீக்கினால்தான் செய்யும் நன்மை நிலை பெறும். பாச நீக்கம் நிகழ்ந்த வழியே சிவப்பேறு நிகழும் என்பது சிவஞானபோதம் கூறும் செய்தி. நீராடுகிற போது நீராடிய பின்னர் கூந்தலை உலர்த்திக் கசடுகளை உதிர்ப்பது கோது ஆட்டுதல் எனப்பெறும். நம்மைக் கோது நீக்கிய இறைவன்.

"இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன் ஆகிறான்"
அடியார்கள் எங்கே உள்ளார்களோ அங்கே தேடிச் சென்று அவர்களுக்குத் தன் திருவடியைத் தருவான் இறைவன். செந்தாமரை போன்ற தனது பொன் மயமான திருவடிகளை நம் ஓட்டை வீடாகிய ஒன்பது வாயில்களை உடைய இந்த உடம்பிலே வந்து தந்து அருளுகிறானே அவன் தலைவனா? தொண்டனா? எப்படிச் சொல்வது ? இரண்டுக்குப் பொருந்த 'சேவகன்' என்றார். சேவகன் என்றால் வீரன் என்று பொருள்; தலைவனாகிய வீரனையும் சேவகன் என்று சொல்வர். இராமனைச் சேவகன் என்று கம்பர் பல இடங்களிலும் சொல்வர். ஏவிய தொழில் செய்வானும் சேவகனே! 'கண்ணன் என் சேவகன்' என்ற பாரதியார் பாடலையும் காண்க. இல்லங்கள் தோறும் நாடிவந்து திருவடிதருதலால் சேவகனாகிறான்.

"நினைத்த அவ்விடத்தே விழைவொடு வந்து தோன்றுவான்"
என்று அண்ணாமலையானைச் சிவப்பிரகாசர் கூறுவர்.

'அங்கண் அரசை' அழகிய அருள் நோக்கம் உடைய அரசனை. கண்ணிற்கு அழகு கண்ணோட்டம் அன்றோ; கண்ணோடிச் செய்யப் பெறும் அருள்மிக்குடையன் ஆதலின் அங்கண் அரசு ஆனான். 'அங்கணர் கருணை கூர்ந்த அருள் திரு நோக்கம்' என்று கண்ணப்பர் புராணத்தில் சேக்கிழார் கூறுவதும் இங்கு நினைக்கத்தகும்.

'அடியோங்கட்கு ஆரமுதை' அடியவர்களாய எங்களுக்கு உண்ணத் தெவிட்டாத அமுதாய் உள்ளவனை. என்றும் பிறந்து இறந்து அழியாத் தன்மையை உயிருக்குத் தருதலின் இறைவன் அமுத மானவன். உண்ணப் பொருந்திய அமுதமாய் வருபவன் உயிரின் பக்குவத்திற்கேற்ப இன்பமும் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்று படிப்படியாக உயர்வதாகும். இறையமுதின் சிறப்பை நம்மாழ்வார்.

'தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்து" உள்ளது என்பர். 'தேனார் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்' என்று மணிவாசகரே கூறியுள்ளமை காண்க. உலகத்தில் நாம் அறிந்த இனிய பொருள்களையும் நாம் அனுபவித்து அறியாத தேவரமுதத்தையும் ஒன்று சேர்த்தாலும் ஆண்டவனாற் பெறும் இன்பத்துக்கு ஈடாகாது என்பது கருத்து.

நமக்கெல்லாம் பெருமானாகிய அவனைப் பாடி அவனாற் பெற்ற நலங்கள் எல்லாம் மேலும் மேலும் சிறப்படைய வேண்டி

தாமரை மலர் பூத்த பூம்புனலில் பாய்ந்து ஆடு என்கிறாள். பங்கஜம் என்பது தாமரையைக் குறிக்கும். பங்கம் என்பது சேறு. ஜம் என்றால் தோன்றுவது என்று பொருள்படும். சேற்றில் தோன்றுவது என்று தாமரைக்குப் பெயர் ஆயிற்று. சேற்றில் தோன்றினாலும் தாமரை தாமரை தானே. நம்மிடத்தே எழுந்தருளினாலும் திருவடி தன் சிறப்பில் சிறிதும் குன்றாது சேற்றை மணமாக்கும் தாமரை போல் நம்மை நலமாக்கும் திருவடி என்பது பங்கயப் பூம்புனல் என்பதில் உள்ள குறிப்பு.

ஆண்டவன் உயிர்களுக்கு எங்கும் இலாததோர் இன்பம் நல்க வேண்டி கோது ஆட்டுதலும் இல்லங்களாகிய இந்த உடம்பையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளுதலும் தனது திருவடியைத் தருதலும் சேவகனாகவும் அரசனாகவும் உயிர்களுக்கு உதவலும் செய்கின்றான் என்பதும் அவனைப் பெற்று அனுபவித்தலே செய்ய வேண்டுவது என்பதும் இப்பாடலில் சொல்லப் பெற்றன.



18. கண் ஆர் அமுதம்

'அண்ணாமலையான் அடிக் கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித் தொகை வீறு அற்றால்போல்,
கண் ஆர் இரவி கதிர் வந்து கார் கரப்ப,
தண் ஆர் ஒளி மழுங்கி, தாரகைகள் - தாம் அகல,
பெண் ஆகி, ஆண் ஆய், அலி ஆய், பிறங்கு ஒலி சேர்
விண் ஆகி, மண் ஆகி, இத்தனையும் வேறு ஆகி,
கண் ஆர் அமுதமும் ஆய், நின்றான் கழல் பாடி,
பெண்ணே! இப் பூம் புனல் பாய்ந்து ஆடு - ஏல் ஓர் எம்பாவாய்!' (18)

நெடு நேரமாக நீரிலே திளைத்து ஆடிக் கொண்டிருக்கிறார்கள் இந்த இளமகளிர். இனி விரைவாக நீராட்டத்தை முடித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இருள் புலர் காலை வந்து விட்டது. அதைப் புலப்படுத்த ஒரு பெண்ணை முன்னிலையாக்கி, மற்றப் பெண்களின் சார்பாக ஒருத்தி பேசுகிறாள்.

"பெண்ணே! இப்பூம் புனல் பாய்ந்து ஆடு" என்றாள் இங்கே நீர்க்குப் புனல் என்ற சொல் வருகிறது. பொய்கையும் சுனையும் மடுவும் போல் அல்லாமல் 'புனல்' பல இடங்களில் வருகிறது. புனல் என்பது பொதுவாக நீரையும் சிறப்பாக ஆற்று நீரையும் குறிக்கும். சிவபெருமான் செழுநீர்ப் புனற் கங்கை செஞ்சடைமேல் வைத்தவன் அல்லவா!

"ஆறுதலை வைத்த பெருமானை நம்பினால் அவன் நமக்கு ஆறுதலைத் தருவான்" என்று சிவனுக்கும் முருகனுக்கும் சிலேடை யாகக் கூறுவது வழக்கம். சிவபெருமானைப் பாடி ஆடுகின்ற நீராட்டும் அப்பெருமானுக்கு உபாங்கமாக இருக்கும் ஆற்றுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்பது பொருத்தமாதலின் அடிக்கடிப் புனல் என்றார் போலும். பொய்கை, வாவி,. குளம், தடாகம் முதலிவற்றுக்கும் நீர் வருவது ஆற்றால் ஆதலின் அது நோக்கிப் 'புனல்' என்றார் எனலும் ஆகும்.

விடிந்து விட்டது. விரைந்து நீராடு என்று சொல்ல வருகிறாள். காலைக் கதிரவனின் செஞ்சோதி விரிகிறது. இருள் புலர்கிறது. எங்கு பார்த்தாலும் பரவியிருந்த கருமை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விட்டது என்கிறாள்.

உலகத்தின் கண்ணாக இருக்கிறவன் சூரியன், சூரியன் இல்லையேல் உலகம் எதையும் பார்க்காது. அவன் 'கண் ஆர் இரவி' அந்த இரவியின் கதிர்வந்து கார் கரந்து விட்டதாம். சூரியன் இல்லாத இரவு நேரத்தில் சுயாதிகார ஆட்சி செலுத்திய விண்மீன்கள் எல்லாம் மறைந்து போயினவா? இல்லை, மழுங்கிப் போயினவாம்.

"தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாம் அகல" என்றாள் குளிர்ந்த பிரகாசம் மழுங்கிப் போயிற்று. சூரியன் முன்னாலே இருக்கிற படியால் அந்தப் பேரொளியில் இந்தச் சிற்றொளிகள் இருந்த இடம் தெரியாமல் ஒன்றி விட்டன. அதனால் தாரகைகள் இல்லை என்று சொல்லலாமா? உண்டு என்று சொல்லலாமா? இரண்டும் முடியாது.

எதற்காக இவள் இதைச் சொன்னாள். சூரியன் உதித்தான் என்று ஒரு வார்த்தையில் சொல்லியிருக்கலாமே. காலையைச் சொல்வது மாத்திரம் அவளுக்குக் கருத்தில்லை. அதற்கு மேல் ஒரு கருத்தையும் சொல்ல எண்ணினாள். அதற்காகத் தாரகைகளைத் துணைக்கு அழைத்தாள்.

ஆண்டவனாகிய பேரொளியில் உயிர்களாகிய சிற்றொளிகள் அடங்கி விடுகின்ற அத்துவிதக் கலப்பு சைவ சித்தாந்தம் கூறுவது. ஒன்றும் வேறும் உடனும் ஆகும் நிலை. சூரியன் வேறு தாரகை வேறுதான். ஆனால் சூரியனுக்கு முன்னால் தாரகை இல்லை என்பது போல் இருந்து கொண்டுள்ளது. அதுபோல இறைவனும் உயிரும் ஒன்றி இரண்டும் ஒன்றும் ஆகாமல் இருக்கும் என்று இந்த அத்துவிதக் கலப்பைச் சொல்ல வந்தவள் இவ்வளவும் கூறினாள். சொல்லுகிற போதே நீராடுகிறதலம் நினைவுக்கு வந்தது. அங்கே உள்ள பெருமான் நினைவுக்கு வந்தான். அவன் எல்லாத் தேவர்களுக்கும் மேலானவன் என்ற நினைவு வந்தது. அதை உவமையாக்கினாள்.

"அண்ணா மலையான் அடிக் கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்"

என்றாள்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியாக உள்ளவன் அண்ணாமலையான். பேரொளிப் பிழம்பாகும் அந்தப் பரஞ்சோதியின் திருவடித் தாமரையில் சென்று தேவர்கள் வழிபடு கிறார்கள். நவரத்தின கசிதமான கிரீடங்களை அணிந்தவர்கள் அவர்கள். அவர்களது மகுட கோடியில் உள்ள மணிக்குவியல்கள் எம்பெருமான் திருவடிச்சோதிக்கு முன்னால் வெறும் கூழாங்

கற்களாகத் தோன்றுகின்றன. அந்த இரத்தினங்களின் வீறு, பெருமை இருந்த இடம் தெரியாமல் போய் விடுகிறது. அது போலவே சூரியனுக்கு முன்னால் விண்மீன்களாகிய தாரகைகள் ஒளி மழுங்கின என்று சொல்கிறாள்.

காணாத பொருளுக்கு எல்லாரும் நன்கறிந்த கண்ட பொருளை உவமையாகச் சொல்வது வழக்கம். இந்த நீராடும் மகளிர் கண்ட பொருளாகிய சூரியனுக்கும் தாரகைக்கும் காணாத பொருளாகிய அண்ணாமலையான் திருவடிச் சோதியில் பணியும் தேவர்களின் முடிமணி ஒளி மழுங்குகிற காட்சியைச் சொல்கிறார்களே என்று வியப்படையலாம். இதில் ஒன்றும் வியப்பில்லை. இந்தப் பெண்கள் தங்கள் அகக்கண்ணில் எப்பொழுதும் கண்டு கொண்டிருக்கிற காட்சி அண்ணா மலையன் திருவடியாதலின் அவர்கள் கருத்திலே மிகப் பழக்கமாகக் கண்ட பொருளைத் தான் உவமை ஆக்கினார்கள் என்று சொல்லலாம்.

அன்றியும் உவமை உயர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்பது இலக்கண விதி அம்முறையில் பார்த்தால் அண்ணா மலையான் திருவடி ஞாயிற்றினும் பல்மடங்கு உயர்ந்தது ஆதலின் உவமையாயிற்று எனலாம்.

'உகமுடிவின் இருள் அகல ஒருசோதி வீசுவதும் மண நாறு சீறடியே '

என்ற திருப்புகழும்

"சோதியும் செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பன ஐயாறன் அடித்தலமே"

என்ற அப்பரடிகள் திருவாக்கும் இங்கு நினைத்தற்குரியன.

முன்னாலே அண்ணா மலையான் திருவடிச் சோதியில் அடங்கும் விண்ணோர் முடிமணி ஒளி, பின்னாலே இறைவனோடு ஒன்றி அனுபவித்து அடங்கி வேறின்றி நிற்கும் உயிர்க் கலப்பு என்று முன்னும் பின்னும் இறை நினைவைத் தலைக்கூட்டி இடையிலே காணக் காட்சியைச் சித்தரிக்கும் அழகை இங்கே பார்க்கிறோம்.

காலைக் கதிரொளி பரவத் தொடங்கி விட்ட படியால் பெருமானது திருவடியைப் பாடி விரைந்து நீராடு என்று முடிக்கிறாள் அவளைப்பாடச் சொன்னவள் தானே பாடவும் செய்கிறாள்.

எம்பெருமான் பெண்ணாகி, ஆணாய், அலியாய் விளங்குபவன்; 'ஈறாய் முதல்ஒன்றாய் இரு பெண் ஆண் குணம் மூன்றாய்' உள்ளவன் என்று ஞானசம்பந்தர் கூறுவதும் காண்க.

மணிவாசகர் மற்றொன்றையும் சேர்த்து இங்கே அலியாகவும் உள்ளான் என்று கூறியுள்ளார். இவரே பிறிதோரிடத்தில்,

"உண்டொர் ஒண்பொருள் என்றுணர்வார்க்கெலாம்
பெண்டிர் ஆண் அலி என்றுணர்கிற்கிலை
தொண்டனேற் குள்ளவா வந்து தோன்றினாய்
கண்டும் கண்டிலன் என்ன கண் மாயமே"

என்று கூறுவர்.

நம்மாழ்வார் இக்கருத்தையே திருவாய்மொழியில் எதிர் மறையில், ஆண் அல்லன் பெண் அல்லன் அல்லா அலியும் அல்லன் என்று மூன்றையும் இறைவனுக்குச் சொல்லியுள்ளமையும் காண்க. இறைவனுக்கு வடிவம் என்று சொன்னாலே சக்தி சம்பந்தம் ஆனது என்று சைவசித்தாந்தம் கூறுமாதலின், ஆணை முதலிற் கூறாமல் பெண்ணை முதலிற் கூறுவது சமயச்சார்பாளர்களின் பழக்கம். நீராடுகிற பெண்கள் தமது இனமாதலின் பெண்ணாகி என்று முதலிற்சொன்னார்கள் எனவும் ஆகும்.

"பிறங்கு ஒளி சேர் விண்ணாகி மண்ணாகி
இத்தனையும் வேறாகி" உள்ளவன் அவன்

பேரொளிக் கிடமாக உள்ள ஆகாயமாக உள்ளான் அவன். நிலமாக உள்ளான். முதலும் இறுதியுமாகிய விண்ணும் மண்ணும் கூறவே நீர், தீ, காற்று ஆகிய ஏனைய பூதங்களாகவும் உள்ளான் என்பதும் கூறின தாயிற்று. இத்தனையும் இல்லாமலும் இருக்கின்றான் அவன்.

"இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய் எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தமாகிப்
பெருநலனும் சுற்றமும் ஆணும் பெண்ணும்
பிறர் உருவும் தம்முருவம் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே"

என்ற அப்பரடிகள் அருளிய நின்றதிருத்தாண்டகம் இங்கு நினைக்கத் தகுவது. சோணசைல மாலையில் சிவப்பிரகாசர்,

"திங்களுங் கதிரும் இலங்கிய மானும்
திகழ்பெரும் பூதம் ஓர் ஐந்தும்
கங்குலும் பகலும் கடந்த நின் வடிவம்
கண்டுகண் களிக்கும் நாள் உளதோ"

என்று அண்ணாமலையானைப் பரவுவது அறிக.

எல்லாப் பொருள்களாகவும் அவையல்லவாகவும் இருக்கின்ற பெருமான், உயிர்கள் எல்லாம் தன்னைப் பெற்று நுகரக் 'கண்ணார் அமுதமும் ஆக நிற்கின்றான்.'

அமுதம் என்று சொல்லாமல் 'கண் ஆர் அமுதம்' என்றாள் முன்னாலே கண்ணுக் கினியான் என்றது போல.

வீடுபேற்றின் கண் உயிரால் அனுபலிக்கப் படுகின்றதன்றி இம்மை உலகின் கண் பல்வேறு திருஉருவங்களைக் கொண்டு அடியார்கள் கண்களாற் கண்டு ஆனந்திக்க அவர்களுக்கு அமுதாக இனிக்கின்றான். ஆதலின் 'கண்ணார் அமுதமுமாய் நின்றான்' என்றாள். அடியார்கள் அவனை இவ்வுலகில் கண்டு தொழுது 'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி, வீடும் வேண்டார்.' கைமேல் உடனடியாகக் கிடைக்கும் அமுதமாகவும் நிற்கின்ற அப்பெருமானது கழலைப் பாடி இப்பூம்புனலில் ஆடுவாயாக என்று பெண்ணை அழைக்கிறாள்.

நீராட்டம் இத்துடன் முடிகின்ற படியால் இங்கேயும் ஒரு பயனாக அவன் கண் ஆர் அமுதமாகத் திகழும் திருக்கோயிலை வழிபடச் செல்ல வேண்டும் என்ற குறிப்பையும் புலப்படுத்திக் கவிதையைத் தலைக்கட்டினாள்.



19. எங்கு எழில் என் ஞாயிறு

"உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்," என்று
அங்கு அப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்,
எங்கள் பெருமான், உனக்கு ஒன்று உரைப்போம், கேள்!
எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க;
எம் கை உனக்கு அல்லாது எப் பணியும் செய்யற்க;
கங்குல், பகல் எம் கண் மற்று ஒன்றும் காணற்க.
இங்கு இப் பரிசே எமக்கு எம் கோன் நல்குதியேல்,
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு ? – ஏல் ஓர் எம்பாவாய்! (19)

பாவை நோன்பின் பொதுப்பயன் மழை பொழிய வேண்டும் என்பதாகும். அது பதினாறாம் பாட்டில் சொல்லப் பெற்றுள்ளது – பாவை நோன்பின் சிறப்புப் பயன் நோன்பு நோற்கும் கன்னி மகளிர் தாம் விரும்பிய கணவரைப் பெறுதலாகும். அது ஒன்பதாம் பாட்டில் சொல்லப் பெற்றுள்ளது.

நோன்பின் பயனாகத் தாம் விரும்பும் விருப்பத்தை இறைவனிடத்தில் விண்ணப்பிக்கிறார்கள் இப்பாட்டில்.

தொண்டர்களின் கடமை பணி செய்து கிடத்தலும் இறைவன் கடமை அடியார்களைத் தாங்குதலும் ஆதலின் தங்களுக்கு வேண்டுவனவற்றை விண்ணப்பித்தலே வேண்டிய தில்லை என்று கூறுதலும் உண்டு.

"வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே."

எனவரும் மணிவாசகர் பாடலும் இக்கருத்தையே விளக்கி நிற்பது. இவர்கள் கேட்கும் பயன்கள் இறைவனின் வேறல்லாத பயன்களாக அமைதலின் இவை கேட்டலும் தருதலும் பயன் கேட்டுத் தருவதாக ஆகாது.

இங்கே இந்த இளமகளிர் தாம் விரும்புவனவற்றை இரத்தினத்திரயமாக மூன்று என்ற எண்ணிக்கையில் சொல்கிறார்கள். அதற்கு ஓர் முகவுரையும் முடிவுரையும் அமைக்கிற அழகு இங்கு உணரத்தகுவது.

எம்பெருமானே! நாங்கள் என்று உள்ளோமோ அன்றே உம்முடைய அடைக்கலம். அதைத் திரும்பச் சொல்ல வேண்டுவது இல்லை. உலகிலே ஒருவரிடத்தில் ஒரு பிள்ளையை அடைக்கலமாகத் தந்து விட்டால் 'உம் கையில் பிள்ளை உமக்கே அடைக்கலம்' என்று சொல்லி அவர்கள் பொறுப்பு என்று விட்டுவிடுவார்கள். திரும்பத் திரும்பச் சொல்லுவதில்லை. அடைக்கலம் பெற்றவர்கள் தமது பொறுப் புணர்ந்து செயற்படுவர். மீண்டும் சொன்னால் எனக்கு என் பொறுப்புத் தெரியாதா? நீங்கள் திரும்பச் சொல்ல வேண்டுமா? என்று கேட்பார்கள்.

அதுபோலவே சிவபெருமானிடத்திலே சொல்ல வருகிற இந்தப் பெண்களும் பழைய மொழியைத் திரும்பச் சொல்ல அச்சப் படுகிறார்களாம்.

"உம் கையிற் பிள்ளை உமக்கே அடைக்கலம் என்று
அங்கு அப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்"

அச்சம் இருந்தாலும் எங்கள் ஆசையினால் ஒன்று உரைக்கின்றோம் கேட்பாயாக என்று தொடங்குகிறார்கள்.

"எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்"

என்றவர்கள் தங்கள் விருப்பத்தை முன் வைக்கிறார்கள்

"எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க
எம் கை நினக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க"

என்று மூன்று வேண்டுகோள்களைச் சொல்கிறார்கள்.

மூன்றும் எதிர்மறையாக உள்ளன. வேண்டியதை அவன் அறிவான் ஆதலின் வேண்டாததை இவர்கள் எடுத்துக் கூறினார்கள் என்று நயமாகக் கொள்ளலாம். அவன் வேண்டத் தக்கது அறிபவன் என்று மணிவாசகரே குறிப்பிட்டுள்ளார் அல்லவா?

பெண்களாதலின் தமக்குச் சிறப்பு உறுப்பாகிய கொங்கையை முன்னர் குறித்தார்கள். அது இன்ப அனுபவத்திற்கு ஏதுவாக இருத்தலினாலும் பெண்மை, தாய்மை, இறைமை என்னும் பெரு நலங்களுக்கு உரியதாக இருத்தலினாலும் முதலிற் சொன்னார்கள்.

'முலை இரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று' என்று திருவள்ளுவரும் கொங்கையைப் பெண்மைக்கு விதந்தோதல் காண்க. எமது கொங்கை நின்னுடைய அடியாரல்லார் தோளைச் சேராதொழிக என்றால் நின் அடியார்களே எமக்குக் கணவராக வாய்க்க வேண்டும் என்பது அவர்கள் கோரிக்கை.

'எம்முடைய கைகள் உனக்கல்லாது வேறு யாருக்கும் எப்பணியும் செய்யா தொழிக' என்றார்கள். அடியார்களைக் கணவராகப் பெற வேண்டும் என்று ஆசைப்படும் மகளிர் அடியார்களுக் கல்லாமல் வேறு யாருக்கும் எப்பணியும் எம்கைகள் செய்யா தொழிய வேண்டும் என்றல்லவா கேட்க வேண்டும். அடியார்கள் கணவரானால் அவர் இடும் பணியெல்லாம் சிவப்பணியாகவே இருக்கும். வேறு அவப்பணி யாகாது என்பதால்அதை அடியார் பணி என்னாது அரன் பணி என்றே குறித்தார்கள் இது இரண்டாவது கோரிக்கை.

இரவிலும் பகலிலும் எம்முடைய கண்கள் வேறு ஒன்றையும் காணா தொழிக. பெருமானாகிய உன்னையே காணுதல் வேண்டும் என்பது மூன்றாவது கோரிக்கை. பகலிலே கண் காணுமாதலின் வேறு ஒன்றையும் காணாதொழிக என்பது சரிதான். இரவிலே கண்ணே காணாதாகலின் வேறு ஒன்றையும் காணா தொழிக என்ற வேண்டுகோள் அதற்கு அவசியம் இல்லையே என்று நினைக்கலாம்.

கண் பொறிகளில் ஒன்று. பொறிகளுக்கு முன்னிலையாகிய புலன்கள் கனவிலே நுண்ணுடலில் உள்ளன ஆதலின் கங்குலில் நிகழும் கனவில் வேறு பொருள்களை அப்புலன் நுகர்ச்சிக் கண் காணா தொழிக என்றனர். அன்பரல்லார் என்றும் உனக்கல்லாது என்றும் குறித்தவர்கள், உன்னையல்லாது என்று கண்ணுக்குச் சொல்லாமல் மற்றொன்றும் காணற்க என்று சொன்னது கண் சென்று பற்றும் இயல் புடையது ஆதலின் கண் எதிர்ப்படும் பொருள் எல்லாம் இறைவன் ஆதல் வேண்டும் என்னும் கருத்தைத் தந்தது.

"இங்கு இப்பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு "

இது முடிவுரை. எம் தலைவனே எங்களுடைய இந்த மூன்று விண்ணப்பங்களையும் நிறைவேற்றித் தருவாயானால் சூரியன் எத்திசையில் உதித்தாலும் அதனால் எங்களுக்குக் கவலையும் இல்லை மகிழ்ச்சியும் இல்லை என்றார்கள்.

'ஒன்று உரைப்போம்' என்று தொடங்கி மூன்று சொல்லலாமா? என்ற வினா எழுகிறது. உலகத்தில் ஒருவர் பால்

ஒன்று வேண்டுவோர் தாம் சொல்வதைப் புறக்கணிக்காமல் கேட்பதற்காக அஞ்சிக் கூறும் போது, 'ஒன்று சொல்ல விரும்புகிறேன்' என்று தொடங்குவது வழக்கம் அன்றி மூன்றாயிருந்தாலும் மூன்றும் இறை பக்தி என்ற ஒன்றிலே அடங்கி விடுகின்றன.

இப்படிப் பாவை நோன்பின் பயன் எம்பெருமானையும் அவன் அடியாரையும் இடையறாது பெறுதலே என்பதை எடுத்துக்காட்டி அது பெற்றால் பெற்றவர்களுக்கு உலகப் பொருள்களில் ஏற்படும் மாற்றங்கள் ஒரு பொருட்டில்லை என்று கூறுகிறது இத்திருப்பாடல்.



20. போற்றி அருளுக

'போற்றி! அருளுக, நின் ஆதி ஆம் பாத மலர்,
போற்றி! அருளுக, நின் அந்தம் ஆம் செம் தளிர்கள்,
போற்றி! எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன் பாதம்,
போற்றி! எல்லா உயிர்க்கும் போகம் ஆம் பூம் கழல்கள்,
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறு ஆம் இணை - அடிகள்.
போற்றி! மால், நான்முகனும், காணாத புண்டரிகம்.
போற்றி! யாம் உய்ய, ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்.
போற்றி! யாம் மார்கழி நீர் ஆடு' - ஏல் ஓர் எம்பாவாய். (20)

நீராடிப் பயன் வேண்டலைச் செய்த பாவை நோன்பு நோற்கும் மகளிர் எல்லாரும் கூடி இறைவனைப் பாடிப் போற்று கிறார்கள்.

அவர்போற்றிப் பாடுகிற இப்பாடலிலே இறைவனது எல்லாப் புகழும் வந்து விடுகின்றன.

அட்ட மூர்த்தியாக, எட்டு வடிவமாக விளங்குகின்ற பெருமானைப் பாடுகின்ற இந்த வணக்கப் பாடலிலும் எட்டுப் போற்றிகள் வருகின்றன. இறைவன் திருவடிப்பெருமை விரிவாகச் சொல்லப் பெறுகிறது.

வார்கழல்கள், மலர்ப்பாதம், வான்வார் கழல், பாதமலர் பொற்பாதம், பாதத்திறம், வித்தகர்தாள், திருவடி, செங்கமலப் பொற்பாதம் என்று பல இடங்களிலும் திருவடியைப் பற்றித் துதித்த பெண்கள் இந்தப் பாடலிலேயே ஏழு இடங்களில் திருவடியைச் சிறப்பித்துப் போற்றுகிறார்கள்.

"காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித்
தாள் தாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி "
என்றபடி திருவடியே வீடுபேறு ஆகும்.

'சேவடி படரும் செம்மல் உள்ளம் ' என்று திருமுருகாற்றுப் படை கூறும்.

எல்லாப் பொருளுக்கும் முதலும் முடிவுமாக இருப்பது இறைவன் திருவடிகளே. 'ஆதியும் அந்தமும் ஆவன ஐயாறன் அடித்தலமே' என்பது அப்பர் வாக்கு.

எல்லாப் பொருளுக்கும் மூலமான பாதமலர்களுக்கு வணக்கம். எல்லாப் பொருளுக்கும் முடிவான உனது செந்தளிர்

களுக்கு வணக்கம் அருளுவாயாக என்ற முதல் வரி. இறைவனது முதன்மையும் ஈறுமாகிய தனிப்பெரும் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

"போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள் "

முதன்மையைச் சொல்லுங்கால் பாதமலர் என்று சொல்லி, முடிவைச் சொல்லுங்கால் செந்தளிர்கள் என்று சொல்லி யிருக்கிறதே. தளிர் முதல் மலர் முடிவு என்பது தானே பொருத்தம் எனக் கருதலாம்.

இறைவன் அனைத்தையும் ஒடுக்கி அந்தத்தை ஆக்குவது மீளத் தோற்றுவதற்கேயன்றி ஒடுக்கியவாறே விடுதற்கன்று. ஆதலின் ஒடுக்கம் முதலாகித் தோற்றம் அதனை அடுத்து நிகழ்வதாகவும் ஆதலின் ஒடுக்கும் திருவடியைச் செந்தளிர்கள் என்றும் தோற்றும் திருவடியைப் பாதமலர் என்றும் குறிப்பிட்டார்கள். மெய்கண்டார் சிவஞான போத முதற் சூத்திரத்தே, தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம் என்றவர், 'அந்தம் ஆதி என்மனார்புலவர்' என்று அந்தத்தை முதற்கண்வைத்துக் கூறியதும் காண்க.

அடுத்து, இறைவனது ஐந்தொழில்களையும் இயற்றும் அருஞ்சோதியைத் திருவடி நிலையில் வைத்துப் போற்றுகிறார்கள்

"போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்" என்பது படைத்தல் தொழில் குறித்தது. படைத்தலின் முடிவு நிலம் என்னும் தத்துவம் ஆகலின் நிலத்தின் நிறமாகிய பொன் என்பதை வைத்துப் பொற்பாதம் என்று சொன்னார்கள். 'பொன்பார் புனல் வெண்மை பொங்கும் அனல் சிவப்பு' என்ற உண்மைவிளக்கத்து வரிகள் இதனை விளக்கும்.

"போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்" என்பது காத்தல் தொழில் குறித்தது. உலகில் உயிர்களை நிறுத்திக் காத்து வருவது அவ்வுயிர்களை இன்பம் நுகரச் செயல்தல் ஆதலின் போகமாம் என்றார்கள். வினை நுகர்ச்சியை இரு வகையாக நுகரலாம். காதல் வீரம் என்று இரண்டாக அநுபவிக்கப்படும் ஆதலின் 'பூங்கழல்' என்ற குறிப்பினால் அந்த இரண்டையும் காட்டினார். பூ என்பதனால் மென்மையான காதலும், கழல் என்பதால் வன்மையான வீரமும் சுட்டப்பட்டன.

போற்றி எல்லா உயிர்க்கும் ஈறு ஆம் இணையடிகள் என்பது அழித்தல் தொழில் குறித்தது. அழித்தலாவது உயிர்களுக்கு இளைப்பாற்றலே. அடியோடு இல்லாமற் செய்தல் அன்று, இருந்ததனை இருந்தபடி தன்னோடு இணைத்து வைத்துக் கொள்வது ஆகலின் அக்குறிப்புத் தோன்ற, 'இணை அடிகள்' என்றார்கள்.

'போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்' என்பது மறைத்தல் தொழில் கருதியது. மறைத்தலாவது உயிர்கள் உலகையும் இன்பப்பொருள்களையும் நுகரும் போது தம்மோடு உடனாய் உள்ள இறைவனையும் அருட்சத்தியையும் அறியாது நிற்கச் செய்தல். உயிர்களிலே புண்ணிய முதிர்ச்சியால் உயர்ந்து நின்ற உயிர்கள் திருமாலும் பிரமனும் ஆவர். உலகியல் செருக்கால் தம்மை நன்கு மதித்து அகந்தை உற்ற பொழுது, இறைவன் தன்னை அவர்களுக்கு மறைத்தான். ஆதலால் மால் நான்முகனும் காணாத புண்டரிகம் என்ற அடியால் மறைத்தல் தொழில் விளக்கப் பெற்றதை அறியலாம். மறைத்தல் என்பதற்கேற்ப திருவடியை மறைத்து அதன் உருவகப் பொருளாகிய தாமரையின் பரியாயச் சொல்லாகிய 'புண்டரிகம்' என்ற 'புலி'யையும் குறிக்கும் சொல்லைச் சொல்லிய மணிவாசகரது சொற்றிறன் நினையுந்தொறும் இன்பம் பயப்பது.

'போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்' என்பது 'அருளல்' என்பதைக் குறித்தது. இறைவன் அருளுதலாவது உயிர்களை வாழ்விப்பது ஆதலின் 'யாம் உய்ய' என்றார்கள். இறைவனை உடையானாக அறிதலும் தம்மை அரன் உடைமையாக அறிதலும் அவனுக்குப் பணி செய்தலுமே உயிர் வாழ்வின் முடிந்த பயன் ஆதலின். 'ஆட்கொண்டு அருளல்' என்றார்கள். என்றும் மணம் வீசினும் வாடாது நிலைபெற்ற வீடாகும் வாழ்வு என்பதைப் 'பொன்மலர்கள்' எனும் சொல்லால் குறித்தது அறியத்தகுவது. உயிர் இறைவனோடு ஒன்றுபடும் பொழுது இரண்டில்லாமல் ஒன்றாகிறது. அதை உணர்த்தவே மலரில் அடியை அடக்கிச் சொன்னார்கள். அத்திருவடி மென்மையும் நன்மையும் உடையது ஆதலின் பொன் மலர் என்றவாறாம்.

இப்படியெல்லாம் நினையவும் வாழ்த்தவும், ஆடவும், பாடவும் வாய்ப்பளித்தது மார்கழி மாதமும் அம்மாதத்துக் குளிர்ந்த நீர் நிலையும் அல்லவா? அந்த நன்றியை நினைவு கூற வேண்டுவது மரபு ஆதலின்

'போற்றி யாம் மார்கழி நீர் ஆடு ஏலோர் எம்பாவாய்' யாம் ஆடுகின்ற மார்கழி நீருக்கு வணக்கம் என்று அதற்கும் நன்றி, வணக்கம் கூறி இறைவனை வணங்கி இள மகளிர் வழிபாட்டினை முடித்தார்கள். யாம் ஆடும் மார்கழி நீர் போற்றி.

ஆன்ம நாயகனாக இறைவனைப்பெற்று, சிந்தையும் சொல்லும் செயலும் சிவமயமாக அந்தம் இல் இன்பத்து அழிவில் வீடாகிய இறைவன் திருவடியை உயிர்க்குலமாகிய கன்னிப் பெண்கள் மல நீக்கமாகிய இருள்புலர்காலையிலே திருவருட் பெருக்காகிய நீரிலே திளைத்தாடிப் பெறுதலே திருவெம்பாவையின் உட்பொருளாகும்.

திருப்பள்ளி எழுச்சி – மாணிக்கவாசகர்

முன்னுரை

மகாவித்துவான் மயிலம் **வே. சிவசுப்பிரமணியன்**

தேவயாண்டில் நம்முடைய ஓர் ஆண்டு ஒரு நாள் ஆகும். பகல் 30 நாழிகை. இரவு 30 நாழிகை. தை மாதம் முதல் ஆனி வரையுள்ள உத்தராயண புண்ய காலம் பகற்பொழுது. ஆடி முதல் மார்கழி வரையுள்ள தக்ஷிணாயன புண்ய காலம் இரவுப்பொழுது. ஒரு மாதத்துக்கு 5 நாழிகை (2–½ நாழிகை 1 மணி) யாக இருள்புலர் காலையாகிய வைறைக் காலம் மார்கழிமாதத்துக்குரியதாகும். வைகறை 4 மணி முதல் 6 மணி வரை உள்ள காலம்.

இருள் புலர் காலையாகிய வைகறை நான்கு மணிக்கு எழுந்து கன்னிப்பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பி எல்லோரும் நீராடி இறைவனைப் பரவி வேண்டுதலாகிய நோன்பு நோற்றதைத் திருவெம்பாவை கூறுகிறது – அடுத்து இறைவனைக் காலைக் காட்சியிலே தரிசிக்கத் துயிலிலிருந்து இறைவனை எழுப்புவதாகப் பாடப்படுவ்து திருப்பள்ளி எழுச்சியாகும்.

திருப்பாவை முப்பது பாடல்களிலும் இறைவனைத் துயில் எழுப்புவதையும் ஆண்டாள் பாசுரங்களில் பாடியுள்ளாள். திருப்பாவை 16ஆம் பாடல் 'துயில் எழப் பாடுவான்' என்று வருகிறது. 17ஆம் பாடல் "உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்" என்கிறது. "மெத்தென்ற பஞ்ச சயனத்தில், நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த மலர் மார்பனை" அழைத்துப் பேசுகிறது. 19–ஆம் பாடல் "விமலா துயிலெழாய்" என்கிறது 20–ஆம் பாடல் "தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்" என்பது 21–ஆம் பாடல் என்றிவ்வாறு ஆய்ச்சியர் கண்ணனைத் துயில் எழுப்பிய திருப்பள்ளி எழுச்சியைத் திருப்பாவையில் பார்க்கிறோம்.

மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் வீற்றிருந் தருளும் பெருமான் மேல் பத்துப் பாடல்களால் திருப்பள்ளி எழுச்சி தனியே பாடினர்.

இவ்வாறு பாடப்பெறும் திருப்பள்ளி எழுச்சி பின்னாளில், தொண்டரடிப்பொடி ஆழ்வாரால் திருமால் மேலும், திருப்போரூர் சிதம்பர சுவாமிகளால் முருகன் மேலும், மகாகவி பாரதி யாரால் பாரத மாதாவின் மேலும் பாடப் பெற்றுள்ளது. பலதலங்களில் உள்ள இறைவன் பேரிலும், ஞானிகள் மேலும் திருப்பள்ளி எழுச்சிப் பிரபந்தம் பாடப்பெற்றுள்ளது.

திருப்பள்ளி எழுச்சி தொல்காப்பியத்தில் 'துயில் எடைநிலை' என்று குறிக்கப்பெற்றுள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியலிலுள்ள பாடாண் திணைக்குரிய துறைகளுள்,

"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்

சூதர் ஏத்திய துயில்எடை நிலையும்" (தொல்.பொருள் 91)

என்னும் நூற்பாவரிகள் இதை நுவலும்.

இங்ஙனம் அரசர்க்குத் துயில் எடுப்புக் கூறுவது தொன்று தொட்டு வருவது என்பதும், சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் என்று அரசரைப் புகழ்ந்து கூறுபவருள் சூதரே இங்ஙனம் துயில் எழுப்புவர் என்பதும், யாண்டும் முன்னுள்ளோரையும் பிறரையும் கூறப்படும் என்பதும் உரையிலிருந்து தெளிவாகும்.

'அரசனும் செய்வது ஈசன் அருள்வழி'

என்று சாத்திரம் கூறுமாற்றானேஅரசர்க்குக் கூறும் 'துயில் எடைநிலை' தூக்கத்திலிருந்து எழுப்பும் நிலை இறைவற்கும், பிறர்க்கும் கூறப்பட்டு வளர்ந்தது என அறியலாம்.

திருவாசகத் திருப்பள்ளி எழுச்சிக்குக் கருத்துரை வரைந்த திருவாசக உண்மை,

"ஏர் மருவு திருப்பள்ளி எழுச்சி பணிவிடை கேட்டு

ஆர்வமுடன் ஆண்ட அரற்கு அன்பு செயும் இயல்பே"

என்று பாடலை ஒட்டிச் சொல்லியது.

உறங்கலும் விழித்தலும் இன்றி இமையா முக்கண்ணனாய் தானே முழுதுணர் இயற்கை யுணர்வினனாய் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனைத் துயில் உணர்த்துதல் என்பது உண்மையன்று, உபசாரமே ஆகும். உறங்கி விழிக்கும் மாந்தர் தாம் துயில் எழுங் காலத்து இறைவனைத் தொழுது கொண்டு எழுதல் இன்றியமையாததாதலின் அம்முறையில் திருப்பள்ளி எழுச்சி கூறுவார் இறைவன் பால் தமக்கிடும் பணி கேட்டமைவதாகவும் அவன் இட்டபணியில் நின்று தாமும் உறங்காத பெருவாழ்வைப்பெற அவன்பால் அன்பு செய்வதாகவும் திருவாசக உண்மை கூறியது பொருத்தமே ஆகும்.

"எது எமைப் பணி கொளும் ஆறு அது கேட்போம்"

என்ற ஏழாம் பாசுரம் இதனைக் குறித்தது காண்க.

இத்திருப்பள்ளி எழுச்சி திருப்பெருந்துறையில் அருளப் பெற்றது என்பது பாடல்களால் விளங்கும்.

வைகறையில் இருள் நீங்க சூரியன் எழுவதுபோல உயிர்களின் மறைப்பு நீங்க ஞான சூரியன் வெளிப்படுவதே திருப்பள்ளி எழுச்சி எனப்பெறுகிறது.

போற்றிப் பாடலைத் தொட்டுமுடிகிற திருவெம்பாவையின் முடிவே தொடக்கமானது போலத் திருப்பள்ளி எழுச்சியின் முதற்பாடல் 'போற்றி' என்றே தொடங்குகிறது. திருவெம்பாவையை அடுத்து இந்தப் பத்துப் பாடல்களும் ஓதத்தகுந்தது என்று சொல்லாமல் சொல்லியது போலும்.



1. போற்றி என் வாழ்முதல்

போற்றி! என் வாழ் முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங் கழற்கு இணை துணை மலர் கொண்டு
ஏற்றி, நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கண்டு, நின் திருவடி தொழுகோம்.
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஏற்று உயர் கொடி உடையாய் எமை உடையாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! (1)

எனது வாழ்விற்கு மூலமாகிய முழுமுதற் பொருளே! சிவந்த இதழ்களை உடைய தாமரை மலர்கள் மலரும் குளிர்ந்த சேறு நிரம்பிய வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் இனிது வீற்றிருந்தருளும் சிவபெருமானே! எருதுக் கொடியை உடையவனே! என்னை உடைப் பொருளாக உடையவனே! அடிமையாகிய என்னைப் பணி கொள்ளும் ஆண்டானே.

பொழுது விடிந்தது, உனது இரண்டாகிய அழகிய திரு வடிகளுக்கு இரட்டையாகத் தொடுக்கப் பெற்றுள்ள மலர்களை அணிந்து உன் திருவடிகளை வணங்கும் முறை உடையவர்களாய் இருக்கின்றோம். உனது திருமுகத்தில் நாங்கள் உய்யும்படி நீ அருளுகின்ற புன்சிரிப்பை எங்கள் உளத்தில் பதிய வைத்துக் கொண்டு உன்னை வழிபட வந்திருக்கின்றோம். துயில் உணர்ந்து எழுந்தருள்வாயாக.

என்று இறைவனுக்குப் பள்ளி எழுச்சி பாடுகிறார் மணிவாசகர்.

திருப்பள்ளி எழுச்சியின் முதற்பயன் இறைவன் திருமுகம் காணுதல் ஆதலின் ஐந்து முகம் உடைய பெருமானை ஐந்து விளிகளின் மூலமாக இந்தப் பாடலில் அழைக்கிறார். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்ற ஐந்து முகங்களாலும் ஐம்பெரும் தன்மைகள் அறிவிக்கப்படுகின்றன.

இறைவன் அளவிலா ஆற்றல் உடையவன், உயிர்க்கு உயிரானவன், கண்ணாய் இருந்து உயிர்களுக்கு அறிவிப்பவன், உயிர்கள் அறம் பொருள் இன்பங்களை நுகருமாறு செய்பவன், அவரவர் வினைகட்கேற்பப் போகங்களைக் கூட்டுபவன் என்பவற்றை இம்முகங்கள் அறிவிப்பன.

இறைவனது ஐந்தொழில் இயற்றும் ஆற்றலையும் இந்த ஐம்பெரும் விளிகள் அறிவிக்கின்றன.

உலகில் வாணிகம் செய்வார் முதல் இன்றிச் செய்ய இயலாது. இறைவன் தனு, கரண, புவன, போகங்களைத் தன் மாயையால் தராவிடின் உயிர்கள் வினையைச் செய்யவும் வினைப்பயனை நுகரவும் இயலாது. இவ்வுலகில் நாம் செய்யும் எச்செயலுக்கும் மூல முதற்பொருள் உடல், தத்துவக் கருவிகள், உலகம், ஏனைய பொருள்கள் தாம். இவற்றைத் தந்து நம்மைவினை ஈட்டவும் வினை நுகரவும் செய்கின்றான் ஆதலின் அவனே இவ்வுலகில் நமக்கு வாழ் முதலைத்தரும் பொருள்.

இருவினையொப்பு எய்திய போது அவனே ஆசார்யனாக வந்து முற்செய்வினைத் தொடக்கை அறுத்து ஆணவமலத்தை அகற்றித் தான் ஆக்கி மலரடிக்கீழ் வாழச் செய்து இன்பம் அளிக்கும் பொருளாகவும் ஆகின்றான் ஆதலின், 'வாழ் முதல் ஆகிய பொருளே' என்று இறைவனை அழைப்பது அவனது படைத்தல் தொழிலைச் சுட்டுவது எனலாம்.

திருப்பெருந்துறையில் கோயில் கொண்டு எழுந்தருளி, உயிர்கள் உலகில் வாழுங்காலத்து அவ்வுயிர்களுக்கு உறுதுணையாய், வழிபாடு கொண்டு நலம் செய்தலின் அதனைக் காத்தல் எனலாம்.

அழித்தல் தொழில் பூண்ட அரசர் போர்க்குச் செல்லுங்கால் முன்னர் வீரச்சின்னமாகிய கொடி எடுத்துச் செல்வர் ஆதலின் 'ஏற்றுயர் கொடி உடையாய்' என்பது அழித்தலைக் குறித்து நின்றது எனலாம்.

அறத்தின் திருவுருவமாகிய வெள்ளிய இடபத்தைக் கொடியில் உடைமையால் அவனது அழித்தல் அறத்தின் பாற்பட்டது; கருணையின் பாற்பட்டது என்பதையும் உணர்த்தினார்.

இறைவன் உடைமைப் பொருளாகிய உயிர் தன்னையும் தலைவனையும் அறியாதுகிடத்தலின் 'எனை உடையாய்' என்பது மறைத் தலைச் சுட்டுகிறது.

'எம்பெருமான்' என்பதனால் தன்னை அடிமைகொண்டு பணி கொள்ளும் எஜமானாக அவனைக்குறிக்கவே, தொண்டு பூண் டொழுகும் திருவடிப்பேறு ஆகிய செல்வம் கூறியதாய் அருளல் தொழிலையும் காட்டியது.

இவ்வாறு நமக்காக ஐந்தொழில் இயற்றி ஐந்துமுகம் கொண்டு எழுந்தருளும் பெருமானை ஐந்து வகையான விளிகளால் அழைத்து அவன் அருளைப் பெற பள்ளி எழுந்தருளாயே என்கிறது. இப்பாசுரம்.

உ. கருணையின் சூரியன்

அருணன், இந்திரன் திசை அணுகினன்; இருள் போய்
அகன்றது; உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழ-எழ, நயனக்
கடி மலர் மலர, மற்று அண்ணல் அம் கண் ஆம்
திரள் நிரை அறுபதம் முரல்வன; இவை ஓர் –
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே
அலை கடலே! பள்ளி எழுந்தருளாயே! (2)

பொழுது புலர்ந்தது என்று முதற்பாட்டில் சொன்னார். புலரும் பொழுது உண்டாகிற அடையாளங்களைச் சொல்லி இறைவனை எழுப்புகிறார் இப்பாடலில்.

பொழுது புலர்வதற்கு மூலம் சூரியன் அல்லவா? சூரியன் வருவதற்கு முன்னாலே செந்நிறமாகிய அருணன் கீழ்த்திசையில் வந்து விடுகிறான். சூர்யோதயத்துக்கு முன் அருணோதயம் வருகிறது. கீழ்த் திசை இந்திரன் திசை. இதோ அருணோதயம் ஆகிவிட்டது. காலைச் செவ்வானத்தைக் கீழ்த் திசையில் பார்க்கும் பொழுது இருள் நெடுந் தூரத்திலே நீங்கி விடுகின்றதாம். எங்கும் ஒளி பரவுகிறது.

எம்பெருமானது திருமுகத்தில் இருந்து உண்டாகின்ற அருள் என்கின்ற பேரொளியைப் போல சூரியன் விண்ணிலே மேலே மேலே ஏறி வருகிறான். மெல்ல மெல்ல மேலேறி வருகின்ற சூரியனைக் கண்டு எம்பெருமானது திருக்கண்களைப் போல உள்ள தாமரை மலர்கள் மலர்கின்றன. அத்தாமரை மலர்களிலே இடைவிடாது கூட்டமாக மொய்த்து வண்டுகள் ரீங்காரம் இடுகின்றன. இவ்வண்டுகளும் கூடச் சிவபெருமானது கருங்கண்களைப் போலத் தோன்றுகின்றன. கண்ணுதற்பெருமானை மனத்தகத்தே கொண்டு காலைக் காட்சியைக் காண்கிற மணிவாசகர்க்குக் காண்கின்ற பொருளெல்லாம் அந்தப் பெருமானுடைய பொருள்களாகவே காட்சியளிப்பதில் வியப்பில்லை அல்லவா?

சூரியனை எல்லை இல்லாத அப்பெருமானது கருணையைப் போல இருக்கிறான் என்கிறார். 'கருணையின் சூரியன்' என்பதில் 'இன்' உவம உருவு. கருணை போல உள்ள சூரியன் என உரை செய்ய வேண்டும்.

தாமரை மலர்கள் அப்பெருமானது செங்கண்ணைப் போல உள்ளன. வண்டுகள் அண்ணலின் அழகிய கண்ணாகிய (அருட்கண் ணாகிய) கருங்கண்ணைப் போல உள்ளன என்றார். இதிலேயும் ஒரு நயம் உள்ளது. இறைவனை அம்மையப்பனாகக் காணுகின்ற காட்சியை இங்கே காணலாம்.

செங்கண் வலப்பாகம் – அப்பன்கண், கருங்கண் . இடப்பாகம் – அம்மைகண் எனவே தாமரையும் அதில் மொய்க்கும் வண்டும் என்கிற இரண்டு பொருளுக்கும் சிவபிரானது இருகண்களையுமே உவமையாகச் சொன்ன அழகு நினையுந் தொறும் இன்பம் பயப்பது.

சிவன் கண் தாமரையாகிய செங்கண்ணானால் தாமரையை மொய்க்கும் வண்டு அம்மை கருங்கண் என்றதனால் அம்மையின் கண்களாகிய வண்டுகள் சிவபிரானது கண்ணாகிய தாமரையையே எப்பொழுதும் சூழ்ந்து கொண்டுள்ளன என்பது மேலும் இன்பம் பயக்கும்.

இவ்வாறு இருள்புலர் காலையின் மூல நிகழ்ச்சிகளை முன்கூறி இவைகளை அறிவாயாக, காலை வந்துவிட்டது நீதுயில் உணர்ந்து எங்களுக்கு அருள் செய்வாயாக என்கிறார்.

திருப்பெருந்துறையில் உள்ள பெருமானை அழைக்கும் இந்தப் பாடலில் மூன்று விளிகள் வருகின்றன. பெருந்துறை என்பது ஊர்ப்பெயராக இருந்தாலும் பிறவிப் பெருங் கடலில் வீழ்பவர்கள் சிவன் எனும் நாமம் ஆகிய தெப்பத்தைப் பிடித்தால் திருவருள் என்னும் கரையில் ஏறலாம். அக்கரையில் ஏறுதற்கு அரிய துறையாக இருப்பது பெருந்துறை. மணிவாசகரை உய்யக் கொண்ட தலம் அல்லவா? திருப்பெருந்துறை உறை சிவபெருமானே! என்றவர் பெருமானை இருவேறு நிலைகளில் அழைக்கிறார் இங்கே.

"அருள் நிதி தரவரும் ஆனந்த மலை"யாக "அலைகடலாக" விளங்குகிறான் அந்தப்பெருமான் என்கிறார்.

வானளாவி உயர்ந்து நிற்கும் மலை. வறப்பினும் வளந்தரும் வண்மை உடையது. மழை மேகத்தைத் தன்னிடத்தே தங்கிப் பெய்ய வைத்து, அந்நீரை மண்ணுக்குத்தந்து மக்களை வாழ்விக்கும் மலை. இத்தனையும் பொருந்துகிறது எம்பெருமானுக்கு. ஆனால் கல்லும் மண்ணும் பாறையும் ஆகக் கரடு முரடாகக் காட்சி அளிக்கும் மலை. எம்பெருமானோ ஆனந்த மலை என்கிறார். இன்ப வடிவானவன் இறைவன். 'ஆராத இன்பம் அருளும் மலை போற்றி' என்று முன்னும் சொன்னவர் மணிவாசகர். மலைமேல் ஏறித்தான் மலையாற் பெறும்

பொருள்களை அடைய முடியும். பொன்னும் மணியும் சந்தனமும் அகிலும் கனியும் முதலாக மலைச்செல்வங்களைப் பெறுதற்கு மிகச் சிரமப்பட்டு மலை ஏறித்தான் ஒரு சிலரால் மட்டும் அடைய முடியும். எம்பெருமானோ அருள் எனும் என்றும் வற்றாத பெருஞ்செல்வத்தைத் தருதற்காக தன்னடியார் சிரமப்பட வேண்டாது தானே அவர்கள் இருக்குமிடந்தேடி வருகிறானாம் அருள்நிதி தரவரும் ஆனந்த மலை என்கிறார் எம்பெருமானை.

கல்லென வலிய மலையாக இறைவனைக் காட்டியவர் அடுத்த வரியிலேயே நெகிழ்வுடன் கூடிய திரவ வடிவான கடலாகக் காண்கிறார் பெருமானை. மழை நீரால் நிரம்புகிற கடல் மழைக்குத் தானே காரணமாகவும் உள்ளது. காரணமாகவும் தானே காரியமாகவும் உள்ளபடியால் என்றும் வற்றாத அழியாத் தன்மை உடையதாய் உள்ளது கடல். தன்னால் உண்டாக்கப் பெற்ற உலகத்துள் எல்லாப் பொருள்களிலும் தானே கூடிநின்று அவற்றை இயக்குகிற பெருமான் தனு, கரண, புவன, போகங்களுக்குத் தானே காரணமாகவும் காரியமாகவும் இருக்கிறான்.

"உலகவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும்

உலகினுக்கு உயிரும் ஆகி உலகுமாய் நின்றவன் "

என்று சிவஞான சித்தியார் கூறும்.

மழைக்கு வித்தாக உள்ள கடல் பாதலம் அளவும் ஆழமாகச் செல்கிறது. அருள் மழைக்கு வித்தாக இருக்கிற இறைவனும் அளவுபடாதவன். முடியால் உயர்ந்து நிற்கிற மலையையும், ஆழ்ந்து நிற்கிற ஆழத்தால் சிறந்துள்ள கடலையும் காட்டி இறைவன் முடியும் அடியும் அறியப்படாதவன் என்பதைக் குறிப்பால் பெற வைக்கிறார் போலும். 'ஆனந்த மலையே அலைகடலே' என்று அழைப்பதன் மூலம் மேலும் கீழுமாக இருக்கும் அவனது அகண்டாகாரப் பெருந்திரு உருவை அனுபவிக்கச் செய்கிறது இப்பாசுரம்.



3. கூவின பூங்குயில்

கூவின பூம் குயில் கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு, நமக்கு –
தேவ! நல் செறி கழல் தாள் –இணை காட்டாய்!
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
யாவரும் அறிவு–அரியாய்! எமக்கு எளியாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! (3)

அருணோதயம் ஆயிற்று; தொடர்ந்து சூரியோதயம் நிகழ்ந்தது. அதுகண்டு தாமரைகள் மலர்ந்தன. அம்மலர்களில் வண்டுகள் முரல்கின்றன என்று காலை நிகழ்ச்சிகளை விண்ணிலும் மண்ணிலும் நிகழ்ந்த காட்சி மாற்றங்களின் மேல்வைத்துக் காட்டிய மணிவாசகர் அடுத்து பறவைகளிடத்தும் மக்களிடத்தும் நிகழும் காலை நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார் இந்த மூன்றாம் பாடலில்.

தேவதேவனே! திருப்பெருந்துறை உறை சிவபெருமானே! எவராலும் அறிதற்கு அரியவனே! அன்பர்களாகிய எங்களுக்கு எளியவனே! இதோ காலை வந்து விட்டது. அழகிய குயில்கள் கூவின. சேவல்கள் ஒலிக்கின்றன. பறவைகள் ஒலி செய்கின்றன. மக்கள் சங்குகளை ஒலிக்கின்றனர். உதயகாலத்து வெளிச்சம் எங்கும் பரவி உலகை ஒளி மயமாக்கி விண்மீன்கள் ஒளி மங்கிப் போயின. எங்களுக்கு விருப்பத்துடனே நன்மைதரும் உனது திருவடிகள் இரண்டினையும் அடியோங்கள் காணக் காட்டுவாய். காட்டுதற்காகப் பள்ளி எழுந்தருளாயே என்கிறார்.

தேவர்களுக்கு எட்டாதவனாக அரியவனாக இருக்கும் பெருமான். அவன் தேவதேவன். அத்தகையவன் மனிதர்களுக்கு எளிவரும் கருணைத் திருவுருவம் உடையவனாகி வருகிறான். திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானாக வருகிறானாம். ‘யாவரும் அறிவு அரியாய், எமக்கு எளியாய்’ என்று பின்னாலே சொன்னவர்கள் அதற்குச் சான்றாக முன்னாலே தேவ! என்றும் திருப் பெருந்துறை உறை சிவபெருமான் என்றும் அவனது அருமையும்

எளிமையும் தோன்ற இரண்டு தோத்திரங்களை முன்னாலே சொன்னார்கள்.

"பாரார் விசும்புள்ளார் பாதலத்தப் புறத்தார்,

யாராலும் காண்டற்கு அரியான் எமக்கு எளியான் "

என்று திருவம்மானையில் சொன்னவர் மணிவாசகர்.

நின் திருமுகத்து எமக்கருள் மலரும் எழில் நகை கொண்டு நின் திருவடிதொழுகோம் என்று முதற்பாட்டில் திருமுக மண்டலத்துச் சோதியில் புன்னகை ஒளிபெற விரும்பினார்கள். சற்றே வெளிச்சம் வந்த பொழுது தான் முகம் காண முடியும். தாள் முதல் போர்த்தித் தூங்குகிறவர்கள் முதற்கண் முகத்தைத் திறந்து காட்டலும் முற்றிலும் பள்ளி எழுந்து உறக்கம் நீங்கிய வழி போர்வை அகன்று தாளையும் காட்டலும் உலகியல். அதுபோலவே, நிறைய வெளிச்சம் வந்து நன்கு புலர்ந்த பிறகு இந்த மூன்றாம் பாடலில் 'தேவ நல்செறிகழல் தாளிணை காட்டாய்' என்று அவன் திருவடிகளைக் காட்டக் கேட்பது மிகவும் பொருத்தமாகவும் அழகாகவும் அமைந்து நயம்செய்கிறது.

சுதந்தரமாகச் சுற்றித் திரியும் குயில்கள் கூவுதலை முதற்கண் குறித்தார். பிடித்து வைத்து வளர்க்கும் கோழிகளைக் காட்டிலும் இயற்கையாகக் கூவும் வசதியும் வாய்ப்பும் மிக உடையன அல்லவா அவை. பிறகு, மற்றப் பறவைகள் எல்லாம் துயில் எழுந்து கூடு நீங்கி ஒலி செய்து பறக்கின்றனவாம். மக்கள் எல்லாரும் எழுந்து விட்டார்கள் என்பதை உணர்த்த பணியாளர்கள் முன்னர் எழுந்து சங்குகள் முழங்கினர் என்றார். சிற்றுயிர்களும் பேருயிர்களும் மக்களும் எழுந்து விட்டனர் என்பதை உணர்த்தவே நன்கு விடிந்து விட்டது எனச் சொன்னதாயிற்று.

"புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் பூங்கோயில்

வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ "

என்ற திருப்பாவைப் பாசுரம் இங்கு ஒப்பு நோக்குதற்குரியது.

"வால்வெண் சங்கொடு வகைபெற்றோங்கிய

காலை முரசம் கனை குரல் இயம்ப "

என்று சிலப்பதிகாரம் சங்கம் முழங்கலைக் குறிப்பிடும்.

இறைவன் திருவருளால் தானே காட்டினால் அன்றி, உயிர்கள் தாமாகக் காண வல்லமை உடையன அல்ல ஆதலால் 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்றபடி 'தேவ! நற்செறிகழல் தாளிணை காட்டாய்' என்று திருவடிக்காட்சி தருமாறு அப்பெரு மானையே வேண்டி முடிக்கிறார் மணிவாசகர்.

4. இன்னிசை வீணை

இன் இசை விணையர், யாழினர், ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர், ஒருபால்;
துன்னிய பிணை மலர்க் கையினர், ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர், ஒருபால்;
சென்னியில் அஞ்சலி கூப்பினர், ஒருபால் –
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டு, இன் அருள் புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே ! (4)

காலை நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. பேரொளி எங்கும் பரவியது. எம்பெருமானது திருமுகம் தொடங்கித் திருவடிவரை காணும் அளவில் காலைப் பொழுதுமலர்ந்தது என்று முன்னர்ச் சொன்னவர் இத்திருக் கோயிலில் காலைப் பொழுதில் இறைவன் தொண்டர்கள் செய்யும் தொண்டுகளை யெல்லாம் சொல்லத் தொடங்கினார்.

திருப்பெருந்துறை உறை சிவபெருமானே! எனவும் எம்பெருமான் எனவும் இறைவனை அழைக்கிறார். மக்களாகப் பிறந்து வளர்கின்றவர்கள் கற்பனவெல்லாம் கற்றுத் துறைபோய் பிறகு ‘கற்றதனால் ஆய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே’ என்பதை உணர்ந்து அவன் அடிக்கு அன்பு பூண்டு வைகறையில் இறைவனைத் தொழுவர். அவர் இருந்த முறை இது என்று உணர்வது மற்றவர் களுக்குப் பயன்படும் என்று அதனைக் கூறுகிறார் இப்பாசுரத்தில்.

இனிய இசையைத் தரும் வீணையை உடையவர்கள் ஒரு பக்கத்தில், யாழை உடையவர்கள் ஒரு பக்கத்தில். வடமொழி வாணர்கள் இருக்குவேத மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள் ஒரு புறம். தென்தமிழ்ச் செல்வர்கள் தோத்திரங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ஒருபுறம்.

இரண்டிரண்டாக வைத்துக் கட்டப்பெற்ற மலர்மாலைகளை இறைவனுக்கு அணியக் கையின்கண் ஏந்தி நிற்பார் ஒருபுறம். தலைமேல் அஞ்சலிக்காக கூப்பிய கையை உடையவர்கள் ஒரு பால். சிலர் தொழுது கொண்டே இருக்கிறார்கள். ஆரா அமுதாய் உள்ள பெருமானை அகத்தே அனுபவித்து அந்த ஆனந்தத்தால் கண்ணீர் சொரிந்து அழுது கொண்டே இருக்கிறார்கள் ஒரு சிலர். உடம்பு துவண்டு உருகிக் கரைகிறார்கள் ஒரு சிலர்.

இங்ஙனம் தொழுவாரும் அழுவாரும் ஆனந்திப்பாரும் ஆக அன்பர்கள் பலர் இருக்க, அவர் நிலைமையில் சிறிதும் தொடர்பில்லாத எந்தத் தோத்திரமும் சொல்லத் தெரியாத, மலர்மாலை சூடுதல் போன்ற எந்தத் திருத்தொண்டும் செய்ய அறியாத தொழும்பனேன் ஆகிய என்னையும் தனக்கு அடிமையாகக் கொண்டு எனக்கும் அருள் புரியும் எம்பெருமானே! பள்ளி எழுந்தருள்வீராக என்கிறார்.

வடவரது நரம்பிசைக் கருவி வீணை, தென்தமிழ் நாட்டுக் குரியதுயாழ். வடநாட்டார் வேத மந்திரங்களைச் சொல்வர். தமிழர் தோத்திரங்களைச் சொல்வர்.

'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என்றார் அல்லவா அப்பர். 'கீதத்திசையோடு கேள்விக் கிடையோடு வேதத் தொலியோவா வீழி மிழலையே' என்ற சம்பந்தர்பாடல் கீதத்தைத் தமிழ் என்கிறது. அவரே! 'செந்தமிழர், தெய்வமறை நாவர்' செழுஞ்சொல் தெரிந்தவரொடு, அந்தமில்குணத்தவர்கள் அர்ச்சனைகள்செய்ய அமர்கின்ற அரன்வீழிமிழலையே, என்கிறார். வடசொல் தென்சொல் என இருமொழியாலும் இறைவனுக்கு அருச்சனை செய்வது உண்மையை அறியலாம்.

"துளக்குஇல் நன்மலர் தொடுத்தால் தூய விண் ஏறலாகும்." ஆதலின் மலர் மாலைகளைச் சாத்தும் பணியில் தொண்டர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுவர். தொண்டுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல் அன்பினால் உருகித் தொழுவாரையும் நமக்குக் காட்டு கிறார் மணிவாசகர். சரியை, கிரியை, யோக, ஞானங்களால் ஆண்டவனை அகத்தே நினைந்து கரைந்துருகி அழுவாரும் தொழுவாருமாய் இருக்கிற அன்பர்களும் இறையருளுக்குரியவர் அல்லவா!

தொழுகை வேறு, சென்னியில் அஞ்சலி கூப்புகை வேறு. ஆண்டவனை வழிபடுவோர் தலைக்குமேல் கைகளைக் குவித்துக் கும்பிடல் மரபு. அதுவே சென்னியில் அஞ்சலி கூப்பல் ஆகும். என் செயல் எதுவும் இல்லை, எல்லாம் அவன் செயலே என்று இறைவன் முன் தன் செயல்அற்ற நிலையைத் தெரிவிக்க, இறைவனிடம் சரணாகதன் ஆதலைத் தெரிவிக்க, தலைமேல் கைதூக்குதல் என்று கூறுவது வழிவழி வந்த செயல் ஆகும்.

சாதன வழிநின்று முயலும் மெய்யடியார்களுக்கு அருளுவது போலவே விண்ணப்பித்தலை அன்றி வேறு செயல் அறியாத எனக்கும் என்று தன் குறையைத் தெரிவிப்பார் என்னையும் என்று உம்மை இட்டார். 'என்னையும்' ஆண்டு கொண்டு இன்னருள் புரியும் எம்பெருமான் என்று இறைவனை வேண்டி முடிக்கிறார்.

5. பூதங்கள் தோறும் நின்றாய்

"பூதங்கள்தோறும் நின்றாய்" எனின், அல்லால்,
போக்கு இலன், வரவு இலன், என, நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல், ஆடுதல், அல்லால்,
கேட்டு அறியோம், உனைக் கண்டு அறிவாரை –
சீதம் கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன் வந்து,
ஏதங்கள் அறுத்து, எம்மை ஆண்டு, அருள்புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! (5)

முன்பாட்டில் அடியார் பணி செய்ய அவர்க்கு அருள்புரியும் பெருமானைத் தமக்கும் அருள்புரிய வேண்டி இரந்தும். அதற்கும் காரணம் கூறுவது போல இந்தப் பாடலை அமைக்கிறார்.

திருப்பெருந்துறை மன்னா! சிந்தனைக்கும் அரியாய்! எம்பெருமான் என்று மூன்று பெயர்களால் பெருமானை அழைக்கிறார். மன்னா! என்பதால் மன்னனுக்கு மக்களைக் காத்தல் கடமையாதலின் என்னை ஆண்டு கொண்டு அருள் புரிய வேண்டுவது உன் பொறுப்பு. நான் எப்படி இருந்த போதிலும் அந்தப் பொறுப்பை உன்னால் தட்டிக் கழிக்க முடியாது என்று சொன்னார்.

நீ முயற்சி செய்து என்னை அடைக என்றான் பெருமான். அதுகேட்ட மணிவாசகர் நீ சிந்தனைக்கும் அரியவன் ஆயிற்றே? உன்னை எப்படி அடைவது. என் மனம், மொழி, மெய்களுக்கு எட்டாதவனாக இருக்கிற உன்னை நானே முயன்று அடையுமாறு இல்லை என்றார்.

பிறரைச் சார்ந்து கேட்டு அறிந்து என்னை அணுகலாமே என்றான் இறைவன். இறைவா! நீ எல்லாப் பூதங்களிலும் இருக்கிறாய் என்று சொல்கிறார்கள். போவதும் வருவதும் உனக்கு இல்லை. எப்பொழுதும் எங்கும் எல்லாப் பொருள்களிலும் நிலையாக இருக்கிறாய் என்று சொல்கிறார்கள். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பூதங்களிலும் இவற்றால் உண்டாகும் பௌதிகப் பொருள்களிலும் நீ இருக்கிறாய் என்று சொல்லி அறிவுடையோர் அனைவரும் உன்னைப் பாடல்களினால் பாடுகிறார்கள். ஆடுகிறார்கள். அவர்கள் உன்னைப் பார்த்து அறிந்து கொண்டு விட்டவர்களைப் போல எனக்குத் தோன்றினார்கள். நானும்

ஆசையோடு அவர்களை நெருங்கிக்கேட்டேன். இதோ இறைவனை அறிந்து கொண்டு விடப்போகிறோம் என்று துடித்தேன். ஆனால் யாரும் உன்னைக் கண்டறிந்தவர்களாய் இல்லை. கண்டறிந்தவர்கள் இருப்பதாக நான் கேட்டு அறியவும் இல்லை. கண்டவர்கள் இருக்கலாம் – திருமூலர் சொல்வது போல கண்டவர் விண்டிலர் என்றபடி, கண்டவர்கள் சொல்லக் கூடியவர்களாக இல்லை. அதனால் பெருமானே! நீயே எங்கள் முன்வந்து எங்கள் குற்றங்களைப் போக்கி எங்களை ஆண்டு அருள்புரிய வேண்டும், என்றார்.

ஆண்டவன் அரியவன், பெரியவன் என்று பல இடங்களிலும் சொல்லப்பெறும். ஒரு பொருள் மிக உயர்ந்ததாக கிடைத்தற்கரியதாக இருப்பதனாலே அதற்குச் சிறப்பில்லை. அது பயன்பாட்டுக்கு உரியதாக இருக்க வேண்டும். பயன் கொள்பவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருப்பதுதான் சிறப்பு.

'பத்துடை, அடியவர்க்கெளியவன், பிறர்களுக்கு அரிய வித்தகன்' என்று நம்மாழ்வார் இதனைக் கூறுவர். சீலத்தால் சிறந்து விளங்குபவன் பெருமான். தன் குணநலத்தால் மிக்குயர்ந்து அரியவனாக விளங்குகிற அத்தன்மைக்குக் குறையில்லாமலே எளிமையாகவும் இருக்கிறவனே இறைவன். இதனைச் சௌலப் பியம் என்பர்.

சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன் வந்து ஆண்டு அருள் புரியும் என்று வேண்டுகிற அழகைப் பாருங்கள், மனத்தாலே நினைப்பதற்கே அரியவனைக் கண் காண முன்னால் வந்து அருள்புரிய வேண்டுவது எதனால்? அப்பர் அடிகள் சொல்வார். "சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன ஐயாறன் அடித்தலமே" என்பார்.

"நினைத்த அவ்விடத்தே விழைவொடு வந்து தோன்றும் நீ" என்பார் சிவப்பிரகாசர். சீல குணத்தோடு சௌலப்பியம் என்கிற எளிமையும் உடையவன் இறைவன் ஆதலின் குற்றமுடைய நம்மையும் குற்றங்களைந்து குணம் கொண்டு அருள்புரிய வந்தருள வேண்டும் என்று நம் போன்றோர் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறார் மணிவாசகர்.

மேற்பாட்டில் மற்ற தொண்டர்களுக்கும் தமக்கும் உள்ள வேறுபாட்டைச் சொன்னவர் இந்தப் பாடலில் தமக்கு அருள்புரிய வேண்டுவது அவன் பெருமை மேலும் சிறக்க ஏதுவாகும் என்பதை அறிவுறுத்தினார் ஆயிற்று.

6. அணங்கின் மணவாளன்

"பப்பு அற வீட்டு இருந்து உணரும் நின் அடியார்,
பந்தனை வந்து அறுத்தார்; – அவர் பலரும்,
மைப்பு உறு கண்ணியர், மானிடத்து இயல்பின்
வணங்குகின்றார். – அணங்கின் மணவாளா!
செப்பு உறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
இப் பிறப்பு அறுத்து, எமை ஆண்டு, அருள்புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!" (6)

அணங்கின் மணவாளா! சிவபெருமானே! எம்பெருமான் என்று பெருமானை அழைக்கிறார் இப்பாட்டில்.

இறைவன் அடியார்க்கு எளிவரும் கருணைத் திறத்தை நினைந்து எம்மை ஆண்டருள் புரிதல் வேண்டும் என வேண்டியவர் அது அவனுக்குப் பிரியாத தன்மையாதலை இப்பாட்டில் சொல்கிறார்.

திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் அடியில் ஞானாசிரியராக இறைவன் வீற்றிருந்து மணிவாசகரை ஆட்கொண்டார் ஆதலால் அப்பெருமானிடத்தில் மிகவும் ஆழங்கால் படுவர் மணிவாசகர். "செப்புறு கமலங்கள் மலரும் தண்வயல் சூழ்திருப்பெருந்துறை" தமக்கு எம்பிரான் அருள் கிடைத்த தலத்தைப் பாராட்டுகிறார். இப்பாடலில் திருப்பெருந்துறையைச் சுற்றி வயல்கள் இருக்கின்றன. அந்த வயல்களில் கிண்ணம் போலத் தாமரை மலர்கள் மலர்கின்றன என்று தாமரையும் தண் வயலும் சூழ்ந்த திருப்பெருந் துறையைக்காட்டுகிறார். தாமரைகளை மலர்த்திய திருப்பெருந்துறை போல குருவாக வந்த பெருமான் என்னையும் மலரச் செய்தான். திருவாசக மணம் வீசச் செய்தான் என்று சொல்கிறார் போலும்.

தமக்கு அருள்புரிவது பெருமான் கடமை என்பதைக் குறிப்பிட மன்னன் என்று பெருமானை முன் பாட்டில் அழைத்தவர். அருள்புரிதல் பெருமான் கடமை மட்டும் அன்று, அது அவனது இயல்பு, அதைச் செய்யாமல் அவனால் இருக்க முடியாது என்பது போல இப்பாட்டில் சொல்கிறார்.

கொடுக்கிற வள்ளல் எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே இருப்பான். கொடுக்காமல் இருக்கிற நாள் வாழாத நாள் போல

அவனுக்குத் தோன்றும். போர் செய்து கொண்டே இருக்கிற வீரனுக்கும் அப்படித்தான்.

"விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும் தன் நாளை எடுத்து." (776)

என்பார் வள்ளுவர்.

அடியார்க்கு அருளும் கருணை வள்ளலாகிய பெருமானுக்கும் அருளுவது இயல்பு. தாய் தன் மார்பில் நிறைந்த பாலின் கனத்தைக் குறைத்துக் கொள்வதற்காக உறங்கும் குழந்தையைக் கிள்ளி எழுப்பிப் பால் தந்து தன் வலியைப் போக்கிக் கொள்வது போல, இறைவன் தன் அருள் பாரத்தைக் குறைத்து இறக்கி வைக்க அடியார்களைத் தேடி அலைகிறான். அடியார்கள் அவனைத் தேடிப் போகா விட்டாலும் அவன் அடியார்களைத் தேடுவான். ஏன் தெரியுமா?

அவன் 'அணங்கின் மணவாளன்' என்கிறார். ஒரு பெண்ணுக்கு நாயகன் பெண்ணுக்குக் கணவனாக இருக்கிறவனுக்கு உறுதியாக அருள் மனம் – இரக்க மனம் இருந்துதான் ஆக வேண்டும். உமாதேவி வெறும் பெண் அல்லவே? அவள் ஒரு தத்துவப் பிழிவு அல்லவா? 'அருளது சத்தியாகும் அரன் தனக்கு' என்பது சிவஞான சித்தியார்.

அருளைப் பொழிய அவன் அடியார்களைத் தேடுகிறான். அப்படித் தானே வாதவூரர் வரும் வழியில் வந்து காத்திருந்து அவரை அடிமை கொண்டான். அணங்கின் மணவாளன் என்று திருப்பெருந் துறைப் பெருமானை அழைத்ததில் மற்றும் ஒரு சிறப்பு உண்டு. எல்லா உயிர்களும் பெண்களே இறைவன் ஒருவனே நாயகன். தன்னை அடையத் துடிக்கும் ஒவ்வொரு ஆன்ம நாயகியையும் அடைய எப்பொழுதும் மணவாளக் கோலத்தோடு இருக்கிறான். அந்தப் பெருமான். மணந்துகொள்வேன் என்று சொல்வானைப் போல எப்பொழுதும் அணங்கின் மணவாளனாக இருக்கிறான் அந்தப் பெருமான். இதுவரை திருப்பள்ளி எழுச்சிப் பாடலில் இந்தப் பெயரால் பெருமானை மணிவாசகர் அழைக்கவில்லை.

திருப்பெருந்துறைப் பெருமானுக்கு ஆத்மநாதன் என்று பெயர். திருமணமான புதிதில் ஒருபெண் தன் நாயகனுக்கு எப்படிக் கடிதம் எழுதுவாள்? 'என் பிராணநாதருக்கு!' என்றல்லவா எழுதுகிறாள் அதுவே இந்தத் தலத்து இறைவன் பெயர். ஆத்மாவுக்கு நாதன் என்றால் ஆத்மா அவனுக்குரிய அணங்குகள்

பெண்கள் என்பது தானே பொருள். அதனால் பெருமானே! நீ என்னை ஏற்றுக்கொள்வாய். ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக் கொள்ளாமல் உன்னால் இருக்க முடியாது என்கிறார் மணிவாசகர்.

"பப்பற வீட்டு இருந்து உணரும் நின் அடியார்" என்பதில் பரப்பு அற என்பது இடைக்குறையாகி பப்பு அற என வந்துள்ளது. மனம் பரந்து செல்லாமல் சிதறாமல் ஒருமுகப்பட்டு வீடுபேற்றிலேயே நினைவாக இருந்து உன்னையே எப்பொழுதும் உணர்ந்து கொண்டுள்ள அடியார்கள். தங்கள் பந்தனைகளை பாசக்கட்டுகளைப் போக்கிக் கொண்டார்கள். அவர்கள் எல்லாம் உன்னிடத்தில் எப்படி வணங்கி நிற்கிறார்கள் தெரியுமா? மனித சமுதாயத்தில் மைப்புறு கண்ணியர் போல் - கருமை பரவிய மைபூசிய கண்களை உடைய பெண்களைப் போல தம்மைக் கருதிக் கொண்டு உன்னை வணங்குகிறார்கள். அவ்வடியார்களாகிய ஞானிகள் தாம் பெண் தன்மையாக நின்று உன்னைத் தமது நாயகனாகக் கொண்டு எல்லாவற்றையும் உனக்கே அர்ப்பணித்து உன்னையன்றி வாழ்வும் வளமும் இல்லாதவர்களாக ஆனார்கள். நீ அணங்கின் மணவாளன் என்பதை அறிந்து தாமும் அணங்காகப் பெண் ஆக. ஆகிப் பயன் கொண்டார்கள். அது போலவே எங்களையும் இப்பிறப்பு அறுத்து ஆண்டு அருள்புரிய வேண்டும். இப்பிறப்பு என்பது ஆண்பிறப்பு என்று கூட நயமாகக் கொள்ளலாம்.

ஆத்ம நாதனாகிய திருப்பெருந்துறைப் பெருமானை வழிபடும் அடியார்கள் மைப்புறு கண்ணியர் ஆனபொழுது அவனும் அவர்களை மணந்து மணவாளனாக ஆகிறான். அப்பெருமான் தன்னையும் பெண் பிறப்பாக்கித் தன்னையும் உடைமையாக்கி அருள வேண்டும் என்பது மணிவாசகர் வேண்டுகோள் ஆகும்.



7. எது எமைப் பணி கொளும் ஆறு

அது, பழச் சுவை என, அமுது என; அறிதற்கு
அரிது என, எளிது என; அமரரும் அறியார்
இது, அவன் திருஉரு; இவன், அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு, இங்கு எழுந்தருளும்,
மது வளர் பொழில் திரு உத்தரகோச –
மங்கை உள்ளாய்! திருப்பெருந்துறை மன்னா!
எது எமைப் பணி கொளும் ஆறு? அது கேட்போம்
எம்பெருமான்! பள்ளி எழுந்தளிருளாயே!

அணங்கின் மணவாளனாகிய பெருமான் ஆத்மநாதனாக விளங்கித் தன்னை ஆட்கொண்டதை நினைவு கூர்ந்தார் மணிவாசகர் முன்னைப் பாடலில். அப்போதே அப்பெருமான் தம்மை ஒத்த மனிதர் களுக்குச் செய்த கருணைத்திறம் புலப்பட்டது. அதனை நினைந்து நன்றி சொல்கிறார் இப்பாடலில்.

ஆண்டவனைப் பற்றி அறிய முற்பட்டவர்கள் யாரும் அவனை அறிந்தார் இல்லை. இறவாத தன்மையை அமிர்தம் உண்டதனால் பெற்ற தேவர்களும் கூட ஆண்டவனைப் பற்றி அறிந்தார் இல்லை. "இன்ன தன்மையன் என்று அறிய ஒண்ணா எம்மான்" அவன். அவனது அருளார் அநுபவம் எவ்வாறு இருந்தது என்று அநுபவம் பெற்ற ஞானிகளைக் கேட்டாலும் அவர்கள் "எவ்வாறு இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன் அவ்வாறு இருந்தது அது" என்கிறார்கள் என்று சித்தாந்தம் கூறும்.

"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன்
என்று எழுதிக் காட்ட ஒணாது "

என்று அப்பரடிகள் கூறுவர்.

தேவர்கள் அவன் "பழச்சுவை" என்கிறார்கள். உடனே அவர்கள் மாறுபட்டு பழச்சுவை அன்று. பழச்சுவை சிலநாள் இருந்தால் கெட்டுவிடும்; சிவன் என்றும் கெடாத அமுதம் என்கிறார்கள். இறைவன் அறிதற்கு அரியவன் என்று ஒருவர் சொல்ல, மற்றொருவர் அவரோடு மாறுபட்டு அவன் எளியவன் என்று சொல்கிறார்கள். இங்ஙனம் ஒருவரோடு ஒருவர் மாறுபட்டு இறைவனைப் பற்றிச் சொல்ல முடியாமல் குழம்புகிற தேவர்கள்

"அது" என்று சேய்மைச் சுட்டால் சொல்கிற அளவுக்கு அவர்களுக்கு எட்டாதவனாக இருக்கிறானாம் அவன். "வேதங்கள் ஐயா என, ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்" அவன் என்று சிவபுராணத்தில் கூறுவர். "அது பழச்சுவை என அமுது என, அறிதற்கு அரிது என எளிது என அமரரும் அறியார்" என்கிறது பாடல். இறைவனைப் பழச்சுவை என்பார் அப்பரடிகள் திருக்குறுந் தொகையில்,

பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை (5.47)

என்பது அவர்பாசுரம்.

இப்படி அறிவு ஆராய்ச்சிகளினால் அகந்தையால் அறிய முற்படுகின்ற தேவர்களுக்கு இன்னது இது என்று அறிய வாராதவனாக இருக்கின்ற பெருமான்; தன்னை அன்பினால் அடைய விரும்பும் சாமானியர்களுக்கு மிகமிக எளிமையாக இருக்கிறான். அவர்கள் "இது அவன் திருஉரு, இவன் அவன்" என்று எட்டியும் சுட்டியும் சொல்லும்படி அம்மக்கள் கண் காண, வழிபட, தொண்டு செய்யத் திருக்கோலம் கொண்டு திருக்கோயிலில் திருமேனியாக எழுந்தருளுகின்றான்.

சீர்காழிப் பிரமபுரத்தில் பிரமபுரீசனாகக் கோலம் கொண்டு எழுந்தருளியுள்ள பெருமானைக் காட்டி "என் உள்ளம் கவர் கள்வன் இவன் அன்றே" என்று திருஞான சம்பந்தர் சுட்டிக் காட்டியதும் இதனையே அன்றோ. மணிவாசகர் "எங்களை ஆண்டு கொண்டு இன்னருள் புரியும், மதுவளர் பொழில் திரு உத்தரகோச மங்கை யுள்ளாய்! திருப்பெருந்துறை மன்னா! " என்று அவன் அன்பர்களுக்கு அருள் புரிய எளிவந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இரண்டு தலங்களை நினைவு கூர்ந்து சொல்கிறார். தேன் வளரும் பொழில் சூழ்ந்த திரு உத்தரகோச மங்கையில் உள்ளவன், திருப்பெருந் துறை அரசன் அவன். இரண்டும் அவர் அருள் பெற்றதலங்கள். இறைவன் இத்தலங்களில் தனக்குச் செய்த அருளிப் பாடுகள் அவர் நெஞ்சில் நிழல் இடுகின்றன.

திருக்கோயிலில் வழிபடும் பேறு மண்ணுலகில் மனிதர் களுக்கே வாய்த்தது; தேவர்களுக்கு அவ்வுலகத்தில் அந்த வாய்ப் பில்லை.

"வானிடத் தவரும் மண்மேல் வந்து அரன்தனை அருச்சிப்பர் "

என்று சிவஞான சித்தியார் கூறும். சொற்பதம் கடந்த தொல்லோன், கண் முதற் காட்சியில் படான் ஆகிய அவனை இது இவன் என்று சுட்டி அறிய, கண் காணச் செய்தது திருக்கோயில். அவன் அங்கு குடிபுகுந்ததனால் அல்லவா நமக்கு வாழ்வு கிடைத்தது என்று

நன்றியோடு நினைந்தார். இனி யாம் செய்யத் தக்கது என்ன? அப்பெருமான் செய்த பேருதவிக்கு கைம்மாறு உண்டோ என்று ஆராமைப்பட்டார். அப் பெருமானையே கேட்கிறார்.

எம்மை நின் தொண்டனாக ஆக்கிக் கொள்ள எமக்கு நீ இடும் பணியாது? அதனைக் கேட்டுச் செய்வது அல்லது வேறு செயல் அறியோம் "எது எமைப் பணிகொளும் ஆறு அது கேட்போம்" என்று இறைவனிடம் கேட்கிறார். கேட்போம் என்றால் கேட்டுச் செய்வோம் என்பது பொருள்.

இறைவனுக்கு இடையறாத் தொண்டு பூண்டு அவன் இடும் பணிகளைச் செய்வதே உயிரின் செயல் என்பதும் இச்சுவை தவிர வேறு அமரர்தம் உலகம் புகினும் உயிர் அதனால் ஆராது என்பதும் விளங்கும். "நம்செயல் அற்று இந்த நாம் அற்றபின் நாதன் செயலே என்று உந்தீபற" என்ற உந்தியார் கூறியாங்கு பின்னர் நம்செயல் எல்லாம் அவன் செயல் அல்லவா? நமக்கு இடும் பணியைத் தீர்மானிக்கிறவனும் அவனே. அதனைச் செய்யும் வல்லமையும் அறிவும் அருளுபவனும் அவனே. அவனையே சரணாக அடைந்து நிற்கும் உயிரின் சுதந்தரமற்ற தன்மையை இதனால் அறிவுறுத்தினார்.



8. பந்தணை விரலி

முந்திய முதல், நடு, இறுதியும், ஆனாய்;

மூவரும் அறிகிலர், யாவர் மற்று அறிவார்?

பந்து அணை விரலியும், நீயும், நின் அடியார்

பழம் குடில்தொறும் எழுந்தருளிய பரனே!

செம் தழல் புரை திருமேனியும் காட்டி,

திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி,

அந்தணன் ஆவதும் காட்டி, வந்து ஆண்டாய்!

ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே! (8)

"மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம், ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன் பணிக்கு ஆகும் அன்றோ" என்றவாறே அப்பெருமான் தமக்கு இடும்பணியாது என்று அவனிடமே கேட்டார் முன்பாட்டில். அவன் மற்ற பழ அடியார்களுக்கும் புதிய அடியாராகிய தமக்கும் அருள் செய்த திறத்தை நினைத்துப் பார்க்கிறார் இப்பாட்டில்.

பரனே ! என்று அழைத்தார். எல்லாப் பொருளுக்கும் மூலமான பரம்பொருளே! எல்லாவற்றிற்கும் முற்பட்டு முதலாகவும் இருக்கின்றாய்; எல்லாம் அழிந்த பின்னரும் அவற்றுக்கு இறுதியிலும் நீ இருக்கின்றாய். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள் நீ. பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அபபெற்றியன் நீ. அம்மட்டோ நடுவாகவும் நீயே இருக்கின்றாய். அப்பொருள்களாகவும் நீயே இருக்கிறாய். உன்னை அதிகார சக்தி படைத்த பிரமன், திருமால், உருத்திரன் என்ற முப்பெரும் தேவர்களே அறிய மாட்டாதவர்களாக இருக்கிறார்கள் என்றால் உன்னை அறிவார் யாவர்? அப்படி யென்றால் நீ அறிய முடியாதவன்தானா? அதுதான் இல்லை, நீயே விரும்பி வந்தால் உன்னை மிக எளிமையாக யாரும் அறிய முடியும்.

பந்தை அணைத்துப் பிடித்து விளையாடும் விரல்களை உடைய பெருமாட்டியும் நீயுமாக உன் அடியார்களது பழையகுடிசைகளாகிய உள்ளங்கள் தோறும் எழுந்தருளி விடுகிறாய்; தேவர்கள் அறியாத பொழுது சிவனைத் தனித்துப் பேசிய மணிவாசகர் பழவடியார் உள்ளத் தடத்தே அவன் எழுந்தருளியதைச் சொல்லும் போது பந்தணை விரலியோடு

எழுந்தருளினான் என்று கூறினார். அருளில்லாமல் தானே வந்தருளுதல் இயலாது அல்லவா? பெரிய புராண நாயன்மார் இல்லங்களுக்கு இறைவன் வரும்போது தனியே வருவதும் அவர்க்கு அருளவரும் போது பெருமாட்டியும் விடைமேல் வருவது கூறப்படுவதும் இங்கு நினைக்கத்தகும். அடியார்களைத் தேடிச் செல்கிறபோது அருளால் சென்றான்; அருளோடு சென்றான் என்பதை உணர்த்தவே 'அணங்கின் மணவாளன்' என்றாற் போல பந்தணை விரலியும் நீயும் நின் அடியார் பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே என்றார். தனிப்பெருந்தன்மையும் யாரும் அறிதற்கு அருமையும் பழம்பொருளின் சீலமானாற் போல அடியார் உளந்தோறும் குடிபுகும் எளிமையும் அவனது பழம்பொருள் தன்மையை நிலை நிறுத்துவது என்பதை உணர்த்துவதற்காகவே "எழுந்தருளிய பரன்" என்று முடித்தார்.

முன்னைப் பழவடியார்களுக்கு அவன் அருளியது போலவே தமக்கும் அருள் செய்தான் என்பது மணிவாசகர்தம் நினைவுக்கு வருகிறது. அவரே பேசுகிறார் பெருமானே! என்னை எவ்வாறு வந்து ஆட்கொண்டாய். சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மானாக எனக்குக் காட்சி அளித்தாய் - மாலயன் அறியா லிங்கோற்பவமூர்த்தியாக செக்கச் சிவந்த தழற் பிழம்பான உன் திருமேனியை அல்லவா காட்டினாய். திருப்பெருந்துறையே நாம் உறையும் இடம் என்று உன் திருக்கோயிலையும் காட்டினாய். அம்மட்டோ! ஆசார்யத் திருமேனியுடன் குருந்த மரத்தின் நீழலில் எனக்காக என்னை ஆட்கொள்வதற்காக வந்து அந்தண வடிவத்தில் தங்கி யிருந்தாயே. அதற்கு நான் என்ன செய்ய வல்லேன் என்கிறார். அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்! இந்தக் காட்சி அவரது நீங்கா நினைவில் பதிந்தது.

திருப்பெருந்துறையில் தமக்கும் அடியார்களுக்கும் உபதேசித்துச் சிலகாலம் சென்று நெருப்புப் பிழம்பு ஒன்றைப் பொய்கையின் நடுவிலே காட்டி அதனுள் அடியாரை யெல்லாம் புக அழைத்துக் கொண்டு தம்மை மட்டும் இருக்க என இறைவன் கூறியது கொண்டு துடிதுடித்தவர் மணிவாசகர். அதனால் அந்த நினைவு மேல் எழுந்து "செந்தழல் புரை திருமேனியும் காட்டி" என்று சொன்னார்.

அந்தணன் ஆவது முதலிற்காட்டியது. அடுத்து திருப்பெருந் துறை உறை கோயில் காட்டியது. அதன்பின் இறுதியாக மணிவாச கரைப் பிரிந்தபோது செந்தழற் பிழம்பு காட்டினார். அதனை மாற்றி முதற்கண் இதனைக் கூறினார். கூட்டத்தை விடப் பிரிவு ஆற்றாமை மிகுவிக்கும் அன்றோ. நெஞ்சுமிக்கது வாய்சோரும் என்றபடி அது

முதற்கண் வந்தது - அதனால்தான் அப்பெருமான் தன்னை ஆட்கொண்டதால் தாம் பெற்றபேறு "அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம்" அல்லவா? அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளை தொறும் ஏற்றினன் என்று அவரே சொல்கிறாரே. அதனையே இப்பாடலில் 'ஆரமுதே' என்று முடிக்கிறார். சுவைப் பொருளாகிய அமுதமே என்று பெருமானை அழைத்தார். அரிய அமுதமாக இருக்கின்ற இறைவன் உண்ணுதற்குப் பொருந்திய அமுதமாகவும் வருகின்றான் என இரண்டுக்கும் பொருந்த 'ஆர் அமுதே' என்றது ஓர் நயம். பெருமானைப் பெற்றதால் தாம் பெற்ற பேற்றை இப்பாடலில் சொல்லித் தலைக் கட்டினார்.



௯. விழுப்பொருள்

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப் பொருளே! உன தொழுப்பு அடியோங்கள்,
மண்ணகத்தே வந்து, வாழச் செய்தானே!
வண் திருப்பெருந்துறையாய்! வழி அடியோம்
கண் அகத்தே நின்று, களிதரு தேனே!
கடல் அமுதே! கரும்பே! விரும்பு அடியார்
எண் அகத்தாய்! உலகுக்கு உயிர் ஆனாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! (௯)

இறைவன் தம்மை ஆட்கொண்ட திறத்தையும் ஆரமுதாய் அவன் தம்மால் சுவைக்க இன்பம் தரும் திறத்தையும் முன்பாட்டில் சொன்னார். அவன் பல்வேறு வகையாகப் பலருக்கும் செய்யும் நலங்களை யெல்லாம் இந்தப் பாட்டில் சொல்கிறார்.

ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து என்று இறைவனை அழைக்க அடிகளைப் பயன்படுத்திய மணிவாசகர் இப்பாடல் முழுவதுமே இறைவனைத் தோத்திரம் செய்வதாக அமைத்துள்ளார். ஒன்பது வகையாக இறைவனை அழைக்கும் ஒன்பது விளிகளை உடைய இப்பாடல் திருப்பள்ளி எழுச்சியில் ஒன்பதாவது பாடல் என்பது நினைவு கூரத்தக்கது.

ஒன்பது என்ற எண் தன்னைச் சார்ந்தோரை உயர்த்தி வாழ வைக்கும் எண் என்று சொல்வர். ஒன்பது விளிகளால் இறைவனை அழைக்கும் இவ் ஒன்பதாம் பாடலும் இறைவன் அடியாரை உயர்த்தி இறைவன் திருவடியில் வாழ்விக்கும் திறத்தை எடுத்துக் காட்டுகிறது.

வானுலகத்துத் தேவர்களும் அருகில் நெருங்கி அறியவும் முடியாத பெரும் பொருளே! உடலாலும் உலகத்தாலும் உயர்ந்து நிற்கிற தேவர்கள் நெருங்க இயலாதவன் அவன். உனது அடிமை களாகிய நாங்கள் பிழைக்கும்படி மண்ணுலகத்திலே எழுந்தருளி எங்களை இறைத்தொண்டில் திளைத்து வாழச் செய்தவனே! வண்மை மிக்க திருப்பெருந்துறையில் உள்ளவனே! இவருக்கு அருளிய சிறப்பால் திருப்பெருந்துறையைக் கொடைத்திறத்தால் சிறந்த திருப் பெருந்துறை என்று அழைத்தார் போலும்.

பரம்பரை அடிமைகளாகிய எங்கள் கண்ணிடத்தே விளங்கி எப்பொழுதும் இன்பத்தை உண்டாக்குகின்ற தேனே! திருப்பாற் கடலில் தேவர்கள் கடைந்தெடுத்த சாவா மூவாத் தன்மை தரும் அமுதமே! மெல்ல மெல்லச் சுவைக்க இனிமைதரும் கரும்பே! அன்புடைத் தொண்டர் அகத்தே எப்பொழுதும் இடையறாது நிற்பவனே!

"மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாய்ஆரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் "

என்று இறைவன் இருக்கும் இடங்களைச் சொல்வார் அப்பர் அடிகள்.

எல்லா உயிர்களுக்கும் உயிராக இருக்கின்றவனே! எம்பெருமானே! பள்ளி எழுந்தருள்வாயாக என்று சொல்கிற இப்பாடலை எத்தனை முறை படித்தாலும் ஆண்டவனை நேரில் அழைப்பது போல ஆகும். திருப்பள்ளி எழுச்சியின் ஏழுபாடல்களின் இறுதியில் வருகின்ற எம்பெருமான் என்றுள்ள பொதுவான இறைவன் திருநாமத்தை எடுத்துவிட்டுப் பார்த்தால் இப்பாடல் இறைவனைப் பொருள் என்று தொடங்கி உயிர் என்று முடித்துக் காட்டுகிற அருமையை வியக்காமல் இருக்க முடியாது.

பொருள் என்று சொல்கிறபடியால் அடியார் விருப்பப்படி செய்து கொள்ள இசைவதாக வருகிறவன் என்றாகிறான். உலகுக்கு உயிர் ஆக இருக்கிறான் என்கிறபோது அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது என்கிறபடியே அவன் உள்ளிருந்து இயக்குகிறவனாக இருந்து மற்றவற்றை எல்லாம் தனக்குப் பொருளாக ஆக்கிக் கொண்டவன் என்றாகும். "உலகினுக்குயிரும் ஆகி உலகுமாய் நின்றவன்" என்று சிவஞான சித்தி கூறும்.

இன்ப அமுதாக இருக்கின்ற தன்மையைத் தேன், அமுது, கரும்பு என்று மூவகையாகச் சொன்னார். உலகில் நோய் நீக்கும் மருந்தாவது தேன். இறப்பை நீக்கும் மருந்தாவது அமுதம். இம்மைக்கும் மறுமைக்கும் எம்மைக்கும் பிறவிநோய் நீக்கும் பெருமருந்தாக இருக்கிறவன் இறைவன். அவன் சுவைக்கச் சுவைக்க இனிக்கிறான்; அதனால் கரும்பாகிறான். 'நினைத்தொறும் காண்தொறும் பேசுந் தொறும் எப்போதும், அனைத்து எலும்பு உள் நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையவன்' அன்றோ இறைவன். தேனும் அமுதமும் குடிப்பார்க்கு விரைவில் நாவினின்றும் உள்சென்று இன்ப ஊற்று மறைந்து விடும். ஆனால் கரும்போ சுவைக்கச் சுவைக்க இடையறாது நாவில் இன்ப ஊற்றை சுரக்கச் செய்து கொண்டிருக்கும். இறைவனைப் பாடப்பாட, பரவப் பரவ, அதுவே பேரின்பமாக நாவில் நிற்கின்றது என்கிறதால் இப்பாடலும் பரவியே முடிக்கிறது போலும். "அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும் இச்சுவை" என்று ஆழ்வாரும் கூறியது காண்க.

"சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நிற்கிற" இறைவனை அடியார் எண்ணகத்தாய் என்றார்.

அருமையும் எளிமையும் இனிமையும் கூறி ஆண்டவனைப் பரவுகிறது இப்பாடல்.

10. ஆட்கொள்ள வல்லாய்

புவனியில் போய்ப் பிறவாமையின், நாள் நாம்
போக்குகின்றோம் அவமே; இந்தப் பூமி,
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு, என்று நோக்கி,
திருப்பெருந்துறை உறைவாய்! திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும், அலரவன் ஆசைப்
படவும், நின் அலர்ந்த மெய்க் கருணையும், நீயும்,
அவனியில் புகுந்து, எமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே! (10)

இடையறாப் பேரன்பால் ஆண்டவனது பேரா இன்பப் பெருவாழ்வைப் பெற்ற மணிவாசகர் இவ்வளவுக்கும் காரணமாக இருந்த மண்ணுலகையும் மனிதப் பிறவியையும் நினைக்கிறார் இப்பாடலில்.

திருப்பெருந்துறை உறைவாய்! ஆரமுதே! என்று இறைவனை அழைத்தவர் இன்னது செய்க என்று இறைவனை இப்பாடலில் வேண்டவில்லை. அதற்கு மாறாக இதைச் செய்ய வல்லவன் நீ என்று இறைவனைப் பார்த்து பேசுகிறார்.

சங்க காலச் சோழன் ஒருவனைப் பார்த்துப் புலவர் ஒருவர் பாடுகிறார். அரசே! தேவர்கள் உன் நாட்டை விரும்புகிறார்கள். என் தெரியுமா? தேவலோகத்தில் பிச்சைக்காரர்கள் இல்லை. உன் நாட்டில் நிறைய இருக்கிறார்கள். தேவர் உலகம் கொடுப்பதற்கும் புகழ் அடைவதற்கும் இயலாது. ‘உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும் தேவருலகில் இல்லை’ ஆகலின் அது செயலற்ற நாடு என்று தேவர்கள் சோழ நாட்டைவிரும்புகின்றார்களாம்.

இங்கே மணிவாசகர் சொல்கிறார். மண்ணுலகத்தைப் பார்த்துத் திருமாலும் பிரமனும் மனம் கரைகிறார்கள் என்று. நாம் மண்ணுலகத்தில் பிறக்க வில்லையே. தேவருலகத்தில் பதவியும் இன்பமும் தான் இருக்கிறது. இறைவன் திருவடிக்காளாகி ஈறிலா இன்பம் அடைய வழி இல்லை. நாள்கள் வீணாகிப்போகின்றனவே. மண்ணுலகில் பிறந்திருந்தால் இத்தனை நாள்களில் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றிருக்கலாமே என்று ஏங்குகிறார்கள். இந்தப்

பூமி சிவபெருமான் உயிர்களை உய்யக் கொள்கின்ற வழியல்லவா? இங்கே தான் திருக்கோயில்கள் இருக்கின்றன. இறைத்தொண்டு செய்து வீடுபேறு அடைய முடியும்; அதனால் பூமியை நோக்குகின்றார்களாம் தேவர்கள். இங்கே 'நோக்கி' என்ற மணிவாசகர் இட்ட சொல் அருமையானது. கண்ணால் பார்த்தால் 'பார்த்து' என்று சொல்ல வேண்டும். திருமாலும் பிரமனும் கண்ணால் பூமியைப் பார்க்க வில்லை. கருத்தால் பூமியின் பெருமையை நினைக்கிறார்கள். மனத்தால் நோக்குகிறார்களாம். நோக்கி நோக்கித் திருமால் 'விருப்பம்' கொள்கிறார். பிரமன் ஆசைப்படுகிறார். மால் என்பதற்கேற்ப விருப்பம் என்றும் அவரை விடத் தாழ்ந்த நிலையில் உள்ள பிரமனை 'ஆசைப்பட்டார்' என்றதும் ஒரு நயம்.


இவ்வாறு பெருந்தேவர்கள் எல்லாம் ஏக்கமுறும்படியாக இறைவன் தம்மை ஆட்கொள்ள மிகவிரிந்த தன் கருணையாகிய பிராட்டியும் தானுமாக இம்மண்ணுலகில் வந்து ஆட்கொண்டான். உருவமற்ற பரன் உருவம் உற்றவனாக திருக்கோயில் கொள்ளும் வல்லமை அவனுக்கே உண்டு என்கிறார்.

"அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்" என்பதில் 'புகுந்து' என்று சொல்லியது எவ்வளவு அற்புதமான சொல். இறைவன் வழிக்கே போகாமல் குதிரை வாங்கப் பொருள் கொண்டு மன்னரின் மதியமைச்சராக ஆடம்பரமான அரசியல் வாழ்வில் திளைத்துச் சென்ற தம்மை வலிய வந்து வழிக்கே புகுந்து நுழைந்து தடுத்து. குருபரனாகி ஆட்கொண்டதிறத்தை நினைந்தார் – உலகிலேயும் கல்லிலும் செம்பிலும் மண்ணிலும் நாம் செய்யும் திருவுருவங்களில் புகுந்து நின்றல்லவா பெருமான் நம்மை வழிபாடு செய்யச் செய்து ஆட்கொள்கிறார். குருபரனாகி ஆட்கொள்ள இதற்கு நான் தகுதி உடையவன்தானா என்று நினைத்தார். தம்மையே கேட்டுக் கொண்டார். "எப்புன்மையரை மிகவே உயர்த்தி விண்ணோரைப் பணித்தி அண்ணா அமுதாக" இருக்கிறவன் என்று சொன்னார் அல்லவா? அது நினைவுக்கு வந்தது. நான் தகுதியானவனா? என்பது இங்கே கேள்வியல்ல, எத்திறத்தினரையும் தகுதி உடையவர்களாக ஆக்கி விடுகிறது அவன் பேராற்றல் அல்லவா? அவன் ஆட்கொள்ள வல்லான்' என்கிறார். அதனால்தான் இப்பாடலில் ஆட்கொண்டான் என்றோ ஆட்கொள்

என்றோ அமைக்காமல் ‘ஆட்கொள்ள வல்லான் என்று அதனையும் அவனுக்கு ஒரு பெயராக ஆக்கியது’ “மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்து அடையில் கண்ணுதலான் பெருங்கருணை கடைத்தேற்றும்.” நான் பெற்ற பேறு நீங்களும் பெறக் கூடிய ஒன்று சேரவாரும் செகத்தீரே! சிந்தை கரைந்து சிவனை நினை மின்கள் என்று உலகோரை அழைத்து ‘யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்று நமக்காக இறைவனைப் போற்றித் திருப்பள்ளி அருளிச் செய்து நிறைவு செய்கிறார் மணிவாசகர்.







நால்வர் பொற்றாள் போற்றி
அரனைப்பாடி அவன் அடி அடைந்தோர்
அதுபோல்பாடி நாமும் அடைவோம்.
திருச்சிற்றம்பலம்